வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

தரம் தெரிந்தவர்கள் பாவிப்பது




மில்க் வைற்

நில சோப்

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 பங்குனி திங்கள் 5-ம் நாள் (28—3—1966) திங்கட்கிழமை துல்ஹஜ் 5 | இதழ் 44

## "மாட்டின் அறிக்கை"
# ஜீ. ஜீ.யின் எதிர்ப்புக்கு ஆப்பு
## ஆதாரமற்ற கூற்றை அம்பலப்படுத்துகிறார் டாக்டர்

**யாழ்ப்பாண மாநகரசபை எல்லை விஸ்தரிப்புப் பற்றிய 'மாட்டின் சிபார்சை' அமுல் நடத்தக் கூடாதென திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் கூறிய காரணங்கள் அனைத்தும் ஆதாரமற்றன என நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஒரு அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்**

யாழ். மாநகர சபை எல்லை நிர்ணயம் பற்றி சமர்ப்பிக்கப்பட்ட "மாட்டின் அறிக்கையை" அமுல் நடாத்துவதை நிறுத்தி வைக்கும் வண்ணம் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம கூறுவதில் எந்தகைய அர்த்தமும் இல்லை. கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் திரு. சி. எக்ஸ். மாட்டின் மீது ஏற்பட்ட பொருமையே பொதுத் தேர்தலுக்கு முன் திரு. மாட்டின் சமர்ப்பித்த அறிக்கையைக் கண்டிக்கும் ஒரு நிலையை திரு. பொன்னம்பலத்துக்கு ஏற்படுத்தியிருக்கிறது. திரு. மாட்டின் எல்லை விஸ்த்தரிப்புக்குழு ஆணையாளராக நியமிக்கப்படும் பொழுதோ அல்லது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் பொழுதோ பொதுத் தேர்தலுக்கான அறிகுறிகள் இருக்கவுமில்லை, திரு. மாட்டினுக்குப் போட்டியிடும் எண்ணம் இருக்கவுமில்லை. இவற்றையெல்லாம் சரியாக அறிந்து கொள்ளாத திரு. பொன்னம்பலம் விஞேத அறிக்கைகளைப் விடுவதில் அர்த்தமில்லை,' இவ்வாறு யாழ். மாநகர எல்லை விஸ்தரிப்புப் பற்றி 'மாட்டின் சிபார்சை அமுல் நடாத்தக் கூடாது என திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் விடுத்த அறிக்கைக்குப் பதில் கூறும் முறையில் நல்லூர் பிரதிநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் சுதந்திரனுக்குவிடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்த அறிக்கையில் திரு. நாகநாதன் மேலும் கூறுவதாவது:

'யாழ்ப்பாண மாநகர எல்லை நிர்ணயத்துக்காக முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட திரு. சி. எக்ஸ். மாட்டின் அவர்களது அறிக்கையின் அடிப்படை



யில் எல்லை நிர்ணயம் செய்வதை தான் எதிர்ப்பதாக திரு. பொன்னம்பலம் கூறியிருக்கிறார். தனது ஆட்சேபனைக்கு அவர் காட்டியுள்ள காரணங்கள் இரண்டும் கொஞ்சமும் உண்மைக் கலப்பில்லாதவை திரு. பொன்னம்பலம் கூறியிருக்கும் இரண்டு காரணங்களும் சிறிதும் பொறுப்புணர்ச்சியற்றதும் பொய்யானவையுமாகும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்'

'23-3-66-ம் திகதியன்று உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம், தனது அலுவலகத்தில், யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லை சம்பந்தமாக சமர்ப்பித்துள்ள மார்ட்டின் அறிக்கையைப் பரிசீலனை செய்ய ஒரு மாநாட்டைக் கூட்டினர். அந்த மாநாட்டுக்கு நல்லூர்த் தொகுதிப் பிரதிநிதியென்ற முறையில் எனக்கும் யாழ்ப்பாணத் தொகுதிப் பிரதிநிதியென்ற முறையில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் திரு. பொன்னம்பலம் இதில் கலந்து கொள்ள வரவில்லை. வராததற்கு அவர் இரண்டு காரணங்கள் காட்டியுள்ளார்.

1. திரு. சி. எக்ஸ். மாட்டின் யாழ்ப்பாணத்தொகுதிக்கு தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்பே அவர் தனது அறிக்கையை சமர்ப்பித்தார்.

2. திரு. சி. எக்ஸ். மாட்டின் தனது அறிக்கையைச் சமர்ப்பித்த காலத்தில் அமைச்சராக இருந்த திரு. ஏ. பி. ஜயசூரியா அந்த அறிக்கையைப் பரிசிலனை செய்வதில்லையென அறிவித்திருந்தார்.



'மேற்சொன்ன இரு காரணங்களாலும், திரு. மாட்டினின் அறிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என்பது திரு. பொன்னம்பலம் வெளியிட்டுள்ள கருத்துக்களாகும்.

'திரு. பொன்னம்பலம் கூறும் இந்த இரண்டு கூற்

(9-ம் பக்கம் பார்க்க)

## மானங்காத்த மகனே



நீடு வாழ்க

# கிழக்கு மாகாண தேவைகள் என்ன?
## பட்டிருப்பு எம். பி. அறிக்கை தயாரிக்கிறார்

கிழக்கு மாகாணத் தேவைகளையிட்டு ஒரு விரிவான அறிக்கையைத் தயாரிப்பதில் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் கடந்த இருவாரமாக ஈடுபட்டிருக்கிறார். கிழக்கு மாகாண பொருளாதார முன்னேற்றத்திற்கான உடனடித் தேவைகள் என்ன என்பதையும், நீண்ட காலத் திட்டத்தில் உருவாக்கப்பட வேண்டியவை என்ன என்பதையிட்டும் சில கி. மாகாண பா. உறுப்பினர்களுடன் அவர் கடந்த வாரம் ஆலோசனை நடாத்தியுள்ளார்.

ஒவ்வொரு தொகுதிகளிலும் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்களின் புள்ளி விபரங்களைத் திரட்டுவதிலும் திரு. இராசமாணிக்கம் கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

அடுத்த வாரம் தற்காலிகப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன அவர்களுடன் கிழக்கு மாகாண அபிவிருத்தி பற்றி கி. மாகாணப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அனை

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



# சடங்கு

## எஸ். பொன்னுத்துரை.

மாலினி வாங்கிக் கொண்டுவந்த 'திறிரோஸ்'சை சுவைத்துப் புகைத்துவிட்டுப் படுத்தார். அவரை அறியாமலே அவரைத் தூக்கம் 'அமத்தி'ப் போட்டுது. விழித்த பொழுது முற்றங் கலகலப்பாக இருக்கின்றது. பழுப்பேறிய பச்சைத் தென்னோலையில் பன்னுங்குத்தட்டி இழைத்துக் கொண்டிருக்கிறுள் அன்னலட்சுமி. செல்லப்பாக்கிய ஆச்சியின் கரங்கள் மின்விசை வேகத்திற்கிடுகுகளைப் பின்னிக் கொண்டிருக்கின்றன. மாலினிகூடக் கிடுகு பின்னப் பழகியிருக்கிறுள். ஆனல், அந்தலையை மடித்துக் கட்டத்தெரியாது. செல்லப்பாக்கிய ஆச்சியை உதவிக்கு அழைக்கிறுள்.

செந்தில்நாதன் கிணற்றடிக்குச் சென்று கை கால் முகம் கழுவிக் கொள்ளுகிறுர். முறுகிக்காய்ந்து கிடந்த ஆறு செத்தல்ஓலைகள் கிணற்றடியில் நனையப்போடப்பட்டிருக்கின்றன. ஏழெட்டுப் 'பட்டைகள்' அள்ளி செழித்து நனையப் பண்ணுவதற்காக அவற்றின் மீது ஊற்றிவிட்டு விருந்தைக்கு மீண்டார்.

தேநீரைக் கொண்டுவந்து கொடுத்த அன்னலட்சுமி, பன்னுங்கை முழுமைப்படுத்தும் பணியில் மீண்டும் ஈடுபட்டாள். கிணற்றடியில் நனைந்து கொண்டிருக்கும் ஓலைகளுள் ஒன்றை எடுத்துக் கொண்டுவந்து, கொடுவாக் கத்தியின் துணை கொண்டு செல்லப்பாக்கிய ஆச்சி நரம்பிலே இரண்டாகப் பிளக்கிறுள். மட்டை நன்முக நனையாததினுற் பணி சிரமங் கொடுக்கின்றது. 'இந்த வயசிலும் ஆச்சி எவ்வளவு சுறுசுறுப்பா வேலைசெய்யிரு? உவவின்ரை வயசிலை நாங்கள் பொல்லுப் பிடிச்சுத்தான் திரிவம்...' அந்தக் காலத்துக் குரக்கன் பிட்டிலும் ஒடியற் கூழிலுமுள்ள சத்தை ஒரு கணம் அவர் வியந்துகொள்ளுகிறுர்.

'என்ன கிடுகுகளோடை மாரடிக்கிறியள்?...'

'குசினியிலை பிரிச்ச கிடுகுகளாலைதான் கிணத்தடிக்குக் குறுக்கு வேலி கட்டின அது உக்கிப்போச்சு வாறதும் மாரி மழை...அவன் மாணிக்கன் வந்து தேங்காய் புடுங்கினதோடை ஓலையளும் வெட்டிப் போட்டுப் போறன் நாளைக்கு விடியக் காலமையே வந்து அடைச்சுத் தாறன் என்டான்...' என்று அன்னலட்சுமி விளக்கினுள். அவளுடைய குரல் செல்லப்பாக்கிய ஆச்சியின் கருத்துக்களையே தொனிக்கின்றன என்பதை அவர் அறிவார்.

'இப்ப கிடுகு கிடுகுவிலையே விக்குது? ஓலையள் விக்கிற விலையைப் பாத்தால் சுத்து மதில் கட்டிவிடுறது சல்லிசு போல கிடக்கு... அவன் மாணிக்கனை நாளைக்கு ஒரு ஐம்பது மட்டையள் கொண்டரச் சொன்னனுன்...வழமையா அறுவது அறுவத்தைஞ்சு மட்டையள்தான் பிடிக்கிற அதுதான் உதுகளையும் பின்னிவைச்சால் கலந்து பகிந்து அடைச்சுப் போடலாம்...பிள்ளையள் ஒடியாடித் திரியிற வீட்டிலை பழுத்த ஓலையளைத் தென்னையிலை விட்டு வைக்கிறதும்பிழை...' என்றுதனக்குத்தானே பேசிக்கொள்பவளைப் போல செல்லப்பாக்கிய ஆச்சி மேலும் விளக்கினுள்.

தேநீரைக் குடித்துமுடித்த செந்தில்நாதன், 'எங்கை சாந்தினியையும் ஸ்ரீகாந்தனையும் காணேல்லை...?'

'பக்கத்திலை — அவள்தான் பாக்கியம் வீட்டுப் புள்ளையள் சாமிவைச்சுவிளையாடுதுகளாம். அதுகளோடை போயிட்டுதுகள்...' ஏதோ குற்றஞ் செய்தவளைப் போல தடுமாற்றத்துடன் பதில் சொன்னுள்.

'புள்ளையளைமற்றவங்கடை வீடு வழிய விளையாட விடக்குடாதெண்டு எத்தினை தரமப்பா சொல்லுற? புள்ளையள் நொடுநொடுத்ததுகள், ஏதாவது சண்டை பிடிக்குங்கள் பிள்ளையள் அழத்துவங்கினுேடனை சிலேக்கை வைச்சுச் செண்டம் குடுத்ததாய்மார்கள் முந்தானையை இறுக்கிக்கொண்டு சண்டைக்கு வெளிக்கிட்டுடுவினம். 'என்ரை புள்ளை அப்பிடிச் செய்யிற புள்ளையில்லை; உன்ரை குறுக்காலை தெறிப்பான் தான் என்ரை பிள்ளையின்ரை சதையைக் கிள்ளி எடுத்துப் போட்டான்' என்டெல்லாம் வாய்த்தர்க்கம் நடக்கும். சில வேளையளிலை இதெல்லாம் முத்தி பெண்டுகளின்ரை புருஷன்மாரின் அடிபுடியிலை வந்து நிக்கும் குழந்தைப் புள்ளையளின்ரை சண்டை ஒண்டாலைதானே ஆழ்வாழ்ப்பிள்ளை கோடேறிச் சங்கை குறைஞ்சவர்... மற்றப்புள்ளையளோடை சேர்ந்து இதுகளும் இலந்தைப்பழம் பொறுக்க வடலிப்பக்கம் போனல்... அது பாம்பு, பூரான் திரியிற இடமெல்லே! ஒரு சதத்துக்கும் உதவாத புள்ளையளோடை சேர்ந்து விளையாடத்துவங்கிட்டால், படிப்பிலை கரிசனை இல்லாமல் விளையாட்டுப் புத்தியிலைதான் வந்து நிற்கும்...' செந்தில்நாதன் ஒரு நீண்ட பிரசங்கமே செய்து விட்டார். மருமகன் பேசிய ஒவ்வொரு சொல்லையும் செல்லப்பாக்கிய ஆச்சியின் மனம் ஆமோதித்தது. பெண்கள் சண்டை போடும் இடத்தை அவர் அபிநயித்து நடித்த பொழுது செல்லப்பாக்கிய ஆச்சிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆனலும் கொடுப்பிற்குள் அடக்கிக் கொண்டாள்.

'நீங்கள் சொல்லுறது மெய்தானப்பா உதிலை நிண்டு குதியன் குத்திச் சத்தம் போட்டுதுகள். நீங்கள் கண்ணயத்து போனியள் அதுகள் போடுற சத்தத்திலை உங்கடை நித்திரை குழம்பிப் போயிடும் எண்டுதான் அதுகளைப் போகவிட்டனான். இனிமேல் விடமாட்டனப்பா...' என்று அன்னலட்சுமி செஞ்சுங் குரலிலே சமாதானங் கூறினுள்.

மறுகணம் அன்னலட்சுமியின் மனம் நோகும்படி பேசிவிட்டதான ஓர் எண்ணம் அவரை வளைத்துக் கொள்ளுகிறது. பேச்சை மாற்றும் நோக்கத்துடன், 'ஏனப்பா இந்த பன்னுங்கு...?' குரலில் இதங்குழைத்துக் கேட்கிறுர்

'அம்மியடியிலை பின்னேர வெய்யில் படுகுது...நேரை நெற்றிலை குத்துற போலைதான் விழும் பின்னேரத்திலை ஒரு மருந்தைக் கிருந்தையோ சம்பலைக் கிம்பலையோ அரைக்க முடியாமல் கிடக்கு அதுதான் இந்தப் பன்னங்கத் தட்டியாலை ஒரு மறைப்புக் கட்டினுல் நல்லதெண்டு பாக்கிறம்...'

பனைமரங்களின் நிழல்கள் கிழக்கு நோக்கி நீள்கின்றன. மேற்குத் திக்கிலே செந்



தூரப் பொடிதூவி மாலைக் கதிரோன் ஒளி ஜாலம் செய்கின்றன். வெப்பம் ஊட்டிய சோம்பலில் மரக்கிளைகளிலே தூங்கிய காற்றுத் துள்ளி விளையாடத் தொடங்கிவிட்டது. விளக்கு வைக்கும் நேரத்தில் வீட்டிலே 'அடைஞ்சு' கிடப்பதைப் பார்க்கிலும், வெளியிற் சென்று கொஞ்சம் உலாத்தி வருவது நல்லதெனக் தோன்றுகின்றது.

'நான் உதுமட்டும் கொஞ்சம் நடந்திட்டு வாறன்...' என்று துவாயாற் போர்த்துக் கொண்டு புறப்பட்டார்.

'புள்ளை, அவரைக் கடக்கரைக் காத்திலை அதிகம் நிக்க வேண்டாமெண்டு சொல்லு...பேந்து நெஞ்சிலை தடிமன் கட்டிப்போடும்...' என்று செல்லப்பாக்கிய ஆச்சி சொன்னுள்'

அன்னலட்சுமி அதனை ஒலிப்பதிவு செய்து ஒப்புவிக்கு முன்னரே, 'சா, நான் கடற்கரைக்குப் போகேல்லை சும்மா உலவம் மட்டுந் தான்...'

'கோயிலடியிலே நேரம் போனது தெரியாமல் விளையாட்டிலே குந்திவிட்டார். கடுதாசி விளையாட்டில் செந்தில்நாதன் அவ்வளவொன்றும் விண்ணன் அல்லர் வேறு பொழுது போக்கு இல்லாவிட்டால் சகாக்கள் கடுதாசி விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்ப்பதில்அவருக்கு ஒருவகை ரசனை உண்டு. இரண்டு 'கை'யிலுமுள்ள கடுதாசிகளை மாறி மாறிப் பார்த்துக்கொண்டு, எத்தனை 'பிடி' ஒவ்வொரு பகுதிக்கும் கிடைக்கும் என்று விளையாட்டு முடிவதற்கு முன்னரே கணக்கிடுவதில் அலாதிப் பிரீதி. விளையாட்டுக்குச் 'கை' போதாவிட்டால், 'இனைத்துக்கு இனம் போடத் தெரியும்' என்று சங்கோசத்துடன் கூறிக்கொண்டு விளையாட்டிற் குந்திவிடுவார்.

துறைமுகக் கூட்டுத் தாபனத்தில் நல்ல வெட்டுக் கொத்துகளுடன் செழிப்பாகச் சம்பாதிக்கும் சிவத்தம்பி தான் அவரை இந்தக் கடுதாசி விளையாட்டுச் சமாவுக்குள் இழுத்தடித்தவர். அவரும் இவரைப் போல லீவிலே வந்து நிற்பவர். 'புதியம் காட்டாமற் குந்தும். ஒரு 'கை' குறையுது' என்று அவர் வற்புறுத்திய படியாற்றான் செந்தில்நாதன் விளையாட்டிற் குந்தினுர். இல்லாவிட்டால், இப்படிப் பகிரங்கமான இடங்களில் விளையாடித் தன்னுடைய பெயரைக் கெடுத்துக் கொள்ள அவர் பிரியப்படுபவரல்லர். அவருடைய பாட்னர்களுள் ஒருவராக விளையாடிய கனகலிங்கம் 'சளப்பல்காரன்.' இலக்கிய நயமுடன், 'பொடி' வைத்து, செந்தில்நாதன் விளையாட்டில் விட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டினுன்.

விளையாட்டின் போது பிழையாக விளையாடி ஏச்சுப் பேச்சுக்கு ஆளாவதைப் பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. 'இப்பதானே விளையாட்டுப் பழகிறம். பிழை விட்டுத்தானே எதையும் படித்தறியிற' என்பது அவருடைய சித்தாந்தமாகும். ஆனல், இன்று பல சந்தர்ப்பங்களில் 'பல மோட்டு'த்தனமாகத் தான் விளையாடி விட்டதாக நினைத்துக் கொள்ளுகின்றுர்.

'உறித்தன் வீறு இறங்கி வருகுது. என்ரை கையிலை மணலும் ஏரும் இருக்கு. என்ர முன் கையிலை ஆடுத்தன் புறு விழுகுது அது துரும்பு. நான் பேய்த்தனமா அவங்கடை புடிக்கு உறித்தன் மணலையே போட்டுக் குடுக்கிற? அதிலும் உலக்கைத்தனம்... என்ரை கையிலை துரும்பினத்திலை 'ஆஸ்' இருக்குது. முன் கையிலை பத்தாலை வெட்டப்பட்ட ஸ்ரோப்பன் புடியை 'ஆசா'லை மேவி எடுக்காமல் அதைக் கூழ் காய்ச்சிக் குடிக்கவே வைச்சிருந்தனன்...'

இவர் கடுதாசி விளையாட்டில் விட்ட தவறுகளை எல்லாம் 'பட்பட்' என்று சொல்லிக் காட்டிய கனகலிங்கத்தைப் பற்றிய நினைவு வருகின்றது. விளையாட்டு முடிந்ததும் அவன் கையில் வைத்திருந்த பத்திரிகையைப் புடுங்கி எடுத்த சம்பவமும் இணைந்து கொள்ளுகிறது.

'கையிலை என்ன பத்திரிகை? வாசிச்சு முடிச்சிட்டீரோ?'

'சுதந்திரன். இது போன கிழமைப் பத்திரிகை. அதிலை நல்லதொரு தொடர்கதை வருகுது. அதை எடுத்து வைக்க வேணும்.'

'எங்கடை ஊராக்களுக்கும் கதை எழுதத் தெரியுமே? சும்மா எழுதுறுங்களாம். எங்கை எங்கடை பத்திரிகைகளிலை கல்கி, குமுதம், ஆனந்த விகடன் பத்திரிகைகளிலை வாற கதையளைப்போல ஒரு கதையைக் காட்டும். அகிலன், சாண்டில்யன் எழுதற தொடர்கதையளைப்போல எங்கடை எழுத்தாளரை எழுதச் சொல்லும் பார்ப்பம். எங்கடை பீத்தலன்களும் கதையள் எழுதினமோ?......மு. வரதராசன்ரை ஒரு நாவலுக்கு ஈடாக எங்கடை எழுத்தாளர் எல்லோரையுஞ் சேர்ந்து ஒரு நாவல் எழுதச் சொல்லு பார்ப்பம். சும்மா உவங்கள் எழுதுற கதையளைப் போட்டுப் பக்கங்களைக் கரியாக்கிப் போட்டு, எங்கடை தலையிலை காசுக்கடிக்கிறுங்கள்......' —செந்தில்நாதன் பாவம். அவர் நம் நாட்டு எழுத்தாளர்களுடைய கதைகளை மட்டுமல்ல, இந்தியாவிலிருந்து வரும் பத்திரிகைகளிற் பிரசுரமாகும் கதைகளைக் கூட வாசிப்பதில்லை. 'உதுகள் மினக்கெட்ட வேலையள்' என்பது அவருக்குத் தெரியும். ஆனல், அவருடைய 'ரூம் மேட்'டாக வாழும் சகாக்கள் அவ்வப்போது சிந்திய கருத்துக்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆடவர்களுக்கு மட்டும்....

கல்யாணம் கட்டப் போகும் ஆடவர்களே! ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்து நீடிய இன்பம் அனுபவிக்க இதோ ஓர் 'இரகசிய மருந்து'. விபரங்கட்கு எழுதுங்கள்.

வைத்தியாச்சாரி

பி. எஸ். திசாநாயக்க,

தபால் பெட்டி : 1281,

கொழும்பு.




டி. கணேசன்,
கண்டி.

கே: சிறு கதைக்கும் நாவலுக்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: சிறுகதை என்பது ஒரு பொய். நாவல் என்பது ஒன்றின் மீது ஒன்ருக அடுக்கப்பட்ட பல பொய்களின் அடுக்கு.

ஃ

ஆர். ஆர். கணபதி,
கொழும்பு-3

கே: பிரபஞ்சத்தில் பெண்களிடம் மயங்காத பேர்களுண்டோ?

ப: ஏன், நாடகத்தில் ஆண் வேடத்தில் வரும் பெண்.

ஃ

க. கமலநாதன்,
வெள்ளவத்தை.

கே: எனக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாச்சு, மூன்று பிள்ளைகளுமாச்சு, இனி என்ன செய்யலாம்.

ப: மனைவியையும் அழைத்துக் கொண்டோ தனியாகவோ குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தை நோக்கி ஓடுங்கள்! தாமதித்தால் மூன்று, நான்காகிவிடும்.

ஃ

க. சதானந்தன்,
வதுளை.

கே: குயுத்தியாரே! நீர் ஒரு சந்தர்ப்பவாதியென என் நண்பன் கூறுகின்றான். உண்மைதானு?

ப: உண்மை. அசந்தர்ப்பமாக எதையும் செய்யும் அசந்தர்ப்பவாதியல்ல நான் சந்தர்ப்பாசந்தர்ப்பங்களை அறிந்து காற்றுள்ள போது தூற்றிக் கொள்வதே அறிவுடமை.

# இழித்தவர் ஒடுங்காரோ

**"பாவலன்"**

பட்டினி கிடந்து நாம் சாகலாமிப்
பாரினிலே உடமை யற்றிருந்திடலாம்
சிறைக் கூடம் செல்லலாம் குடும்பத்தோடு
சிறிதேனும் விடலாமோ உரிமைதனை.

போராட்டம் ஒன்றுலே உரிமைகளைப்
பெற்றிடலா மென்ற உள நம்பிக்கையால்
போராட்டம் நடத்திஞேம் நடந்திராத
போராட்டம் நடத்திஞேம் வெற்றி கண்டோம்.

போராட்டம் எங்களுக்குப் புதிய தென்று
புத்திமதி கூறுவதாய் நினைத்துக் கொண்டு
தேரோட்டம் காட்டுவது போல சில
தெரியாத கூட்டத்தார் கூவலாமா.

யானைகளே மலைத்து மனம் களைக்கும் போது
பூனைகளோ களம் புகுந்து வெற்றி பெறும்
ஆட்சிக்கு எவ்வழியாய் வரலாமென்று
அலைமோதி நின்றவர் தாம் பண்டா அன்று.

பேதங்கள் பேசுவதால் மக்களிடை
பிளவுகளை வளர்த்திடலா மெனஅறிந்து
பேசினர் பேதங்கள் எல்லையின்றி
பிள்ளைகளாய் வாழ்ந்தவரைப் பிரித்து வைத்தார்.

இந்நிலையை மாற்றிடுவேன் பார்த்திடுவீர்
இந்நாட்டில் தேனுேடச் செய்திடுவேன்
இனிஇல்லை எனக்கு நற்தூக்கமொரு
இந்தியனும் இந்நாட்டிலி ருக்கும்வரை

"விரட்டுவேன் ஒருநாளில் பதவிவந்தால்
விதைப்பேனுன் சிங்களத்தை உணவு ஆக
எம் நாட்டில் இன்னொருவர் வாழுவதோ
எம்மின்பம் அத்தனையும் இழப்பதோ"

போகாத ஊருக்கு வழி காட்டத்தான்
புறப்பட்டார் புதுமை பண்டாவும்
வழிகாட்ட வந்தஅவர் என்ன ஆனுர்
வழிமாறி தடுமாறி நின்ருர் தானே

பண்டார நாயக்கா பதவி யேற்று
பாலன்னம் படைத்தாரா சிங்களர்க்கு
சாகாமல் செத்திட்டார் வாயினுலே
சரித்திரம் இதைத்திட்டும் எழுத்திலுலே.

மதமென்ருர் இனமென்ருர் ஐயோ பாவம்
மதியில்லா மக்களோகை தட்டினுர்கள்
மறுபடியும் மொழியென்ருர் இன்னும்பலர்
மனம்மாறி எம்மினத்தைத் திட்டலானுர்.

மண்குதிரை மேலேறிப் போகலாமா
மரநாயை வேட்டைக்குப் பழக்கலாமா
தன்கொள்கை பெரிதென்று எண்ணலாமா
தாபத்தால் அலியையத்தான் மணக்கலாமா?

வாலில்லா காற்ருடி பறப்பதுண்டோ
வழியில்லா திட்டந்தான் நிலைப்பதுண்டோ
ஆணில்லா ஊரினிலே குழந்தையுண்டோ
அறமில்லா மனையிற்ருன் சிறப்புஉண்டா?

இவ்வளவும் பொய்யென்று கருதினுரா இல்லை
இவ்வளவும் மெய்யாக்க எண்ணினுரா
எவ்வளவுக் கெவ்வளவு நம்மை அன்று
இழித்தாரோ அவ்வளவில் ஒடுங்கினுரே.

எஸ். எம். சுந்தரலிங்கம்,
மடுல்சிமா.

கே: இன்றுள்ள அரசியல் வாதிகளை சந்தர்ப்பவாதிகள் என்கிறேன் நான் நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: சந்தர்ப்பம் தெரியாமல் காலைவிடும் அல்லது தலையிடும் சில அசந்தர்ப்பவாதிகளும் இருக்கின்றனர் என்பதை மறந்து விட்டீரே.

ஃ

ஆ. தமிழ்ச்செல்வன்,
நெடுந்தீவு.

கே: குயுக்தி மாமா, தங்களுடைய புத்திரியை நான் மணக்க விரும்புகின்றேன். உங்கள் விருப்பம் எப்படி?

ப: நீங்கள் ஆண் பெயரில் ஒளிந்துகொண்டிருக்கும் பெண் என்பது எனக்குத் தெரியும்.

ஃ

ஏ. எம். ஹனிபா,
நிந்தவூர்.

கே: இலங்கை ஒரு குடியரசாக வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். உங்கள் அபிப்பிராயம் என்ன?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: எல்லோரின் அபிப்பிராயமும் அதுதான். ஆனல் எப்படிக் குடியரசாக்குவது என்பதுதான் கேள்வி. இலங்கை அண்மையில் குடியரசாகும் என்று கருதமுடியாது!

ஃ

நாரனுர் லிங்கன்,
கம்பளை

கே: ஐ நா. சபைக்கு அனுப்பியது போல் பொன்னம்பலத்தை மலாயா தமிழ் மகா நாட்டிற்கும் அனுப்பிவைத்தால் என்ன?

ப: அனுப்பி வைக்கலாம். ஆனல் தமிழ் அறிவு மிகுந்தவர்களையும் தமிழ் ஆராய்ச்சி செய்பவர்களையும் அனுப்பி வைத்தலே சாலவும் நன்று.

கே: மலசல கூடங்கள் கட்டுவதற்குப் பண உதவி செய்வதும் வட மாகாண அபிவிருத்தித் திட்டங்களிலொன்ரு?

ப: சிலரின் அபிவிருத்தித் திட்டம் அது. உண்பதற்காக உணவைத் தேட முன்பு மலசலம் கழிப்பதற்காக கக்கூசைத் தேடும் ஆசாமிகள் அவர்கள்.

ஃ

கே. கே. வி. சர்மா,
வறக்காப்பொலை

கே: சில நாடுகளிலே புரட்சித் தலைவர்களெல்லாம் ஒதுக்கப்படும் போது இலங்கையில் மட்டும் புரட்சி சதி என்கிருர்களே? அது என்ன?

ப: இங்கு புரட்சித் தலைவர்கள் யாருமில்லையே. ஜனநாயக ஆட்சி முறைக்கு வேட்டு வைக்கவே இந்த புரட்சி, சதி யெல்லாம்!

கே: யாழ்ப்பாணம் மாநகர சபை எப்படி இருக்கிறது?

ப: யார் மீதும் நம்பிக்கையில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறது.

ஃ

ஜே. கலாநிதி,
உயிரிலங்குள

கே: தனிமையிலே இனிமை காண முடியுமா?

ப: முடியும்! புத்தகம் என்ற நண்பனின் துணையிருந்தால்.

ஃ

பாண்டியன்,
வட்டவளை

கே: ஒன்றும் தெரியாதவர் எல்லாம் தனக்குத் தெரியும் என்று தன்னையே. உயர்த்திக் கொள்ளுகிறரே! இவர்களைப் பற்றி உங்களின் கருத்தென்ன?

ப: அவரின் செயல் சரிதானே! எல்லாம் தெரிந்தவனைப் பிறர் உயர்த்துவார்கள். ஒன்றும் தெரியாதவனுக்குத் தன்னைத்தான் உயர்த்திக் கொள்வதைத் தவிர வேறு வழியேது? அப்படிச் செய்ய ஒரு நடிப்பு தேவை. அதுதான் எல்லாந் தெரிந்தவனைப் போல நடிப்பது.

சி. சந்திரசேகரன்,
தெல்லிப்பளை

கே: தற்போது உலகில் படைப் பலமும், பணப் பெருக்கமும் கூடிய நாடு சீனுவா அல்லது அமெரிக்காவா?

ப: படைபலம் சீனுவுக்கு அதிகம். ஆயுத பலமும, பண பலமும் அமெரிக்காவுக்கு அதிகம்.

ஃ

காப்பாளர்,
யாழ்ப்பாணம்

கே: பணம் சேர்க்க ஒரு குறுக்கு வழி கூறுவீரா?

ப: ½ ரூபாய் செலவு செய்து சுவீப் டிக்கட் ஒன்று வாங்கி வைத்துக்கொண்டு கனவு காண்பதுதான் அந்த வழி.

ஃ

மு. சி. வேல்முருகு
திராவிடர்பழுகாமம்

கே: நாங்கள் பலர் சேர்ந்து தி. மு. கழகமொன்றைத் தொடங்க வேண்டுமென அவாவடைகின்றோம் இதற்கு அரசாங்கம் தடைவிதிக்குமா?

ப: இங்கு எத்தனையோ தி. மு. கழகங்கள் உண்டு. ஒன்றுக்கும் தடை இடையாது. இன்னும் எத்தனை கழகங்கள் தோன்றினலும் தடை வராது. அச்சமின்றி ஆரம்பியுங்கள் மூன்று நான்காகட்டும்.

ஃ

தமிழ்ச்செல்வன்,
துகேகொடை

கே: தமிழ்த் தாய்க்குப் பிறந்தும் சிலர் ஆங்கில மோகங் கொண்டு அலைகிருர்களே, ஏன்?

ப: உலகிலேயும் உள் நாட்டிலேயும் ஆங்கிலம் அதிக செல்வாக்கு பெற்றிருப்பது தான் காரணம்.

ஃ

ஆர். ஆனந்த சுப்பிரமணியம்,
நீர்கொழும்பு

கே: பெண்கள் மலருக்கு சமமென்ருல் ஆண்கள் எதற்குச் சமம்?

ப: வண்டுக்கு சமம்.

ஃ

செ. இரத்தினசபாபதி,
தெரணியகலை

கே: பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் வெளி நாட்டுப் பிரயாணத்தால், ஏதாவது நன்மை யேற்படுமா?

ப: மூன்று நன்மைகள் ஏற்படும் (1) அவரது உடல் திலை தேறியது. (2) வெளி நாட்டு உதவிகள் பெற வழி ஏற்படுகிறது. (3) ஆசியாவில் இலங்கை ஒரு தலை சிறந்த ஜனநாயக நாடு என்பதை மேலைய நாடுகள் உணர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைப்பது.




பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோருமே புகைப்பது

# கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்,**

தந்தி: தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி: 3597-6522

# புரட்சியும் எதிர்ப் புரட்சியும் இந்தோனேசியாவில்

# இடது சாரி-வலது சாரி மோதல்

பூங்குன்றன்

இந்தோனேசியாவில் கடந்த ஆறு மாத காலமாக நடைபெற்றுவந்த கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும் கடந்த வாரம் நடைபெற்ற அமைதியான அதிகார மாற்றத்துடன் அமைதியடைந்துள்ளது. நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றி வந்த டாக்டர் சுகர்னோ படிப்படியாக இடதுசாரியாக மாறி சுற்றில் சீன கம்யூனிஸ்டுகளின் கைப் பொம்மையாக விளங்கினார். சீனச் சார்புடைய சக்திகள் சுகர்னோவை அகற்றி விட்டு அவர் இடத்தில் தம்மவர் ஒருவரை அமர்த்த முனைந்தனர். இதைத் தொடர்ந்து இடதுசாரி, வலதுசாரிக் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தன. இப்பொழுது வலதுசாரிகளின் கை பலமாக அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது. இச் சம்பவங்களை விரிவாக ஆராய்வதுடன், இந்தோனேசியாவின் கடந்த காலச் சம்பவங்களையும் விபரித்திருக்கிறார் கட்டுரையாசிரியர்.

ஆஸ்திரேலியாவுக்கும் ஆசியாவுக்கும் இடையேயுள்ள நீர்ப்பரப்பில் 3000 தீவுகளாகச் சிதறிக்கிடக்கும் 300000 சதுரமைல் பரப்பைக்கொண்ட நாடுதான் இந்தோனேசியா. இத்தீவுகளில் 200க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் 90000000 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்நாட்டின முக்கிய மூலப்பொருள்களாக விளங்குவன இரப்பர், பின், பாக்சைட்.

டச்சுநாடு முன்னூறு ஆண்டுகளாக இந்நாட்டின் மீது ஏகபோக உரிமையோடு ஆண்டுவந்தது. டச்சு ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவித்த விடுதலை வீரர்களின் முன்னணியில் நிற்பவர் இன்று அதிகாரம் அற்ற ஆளுனராக விளங்கும் சனாதிபதி சுகர்னோ.

## விடுதலைக்கு முன்

1901ம் ஆண்டு யூன் 6ம் நாள் பிறந்த சுகர்னோ அரசியல் அறிஞராக இல்லாது அறிவியலறிஞராகவே பாண்டுங் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறினார். எந்திரவியற் துறையில் முனைவர்பட்டம் பெற்று வெளியுலகில் காலடியெடுத்துவைத்த சுகர்னோ நாட்டுமக்கள் மத்தியில் சுதந்திர உணர்வு என்ற மாடமாளிகையைக் கட்டி எழுப்பினார்.

நாட்டின் சுதந்திர இயக்கமான தேசியக் கட்சி என்ற கோட்டையைக் கட்டியெழுப்பிய சுகர்னோ முதலில் நாலு ஆண்டு காலம் சிறையில் வைக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளியேறிய அவரை மீண்டும் நாடுகடத்தியது அன்றைய அன்னிய ஆட்சி. சுமத்ரா சிறையில் இருந்த சுகர்னோவை 1942ம ஆண்டு பூட்டை உடைத்து விடுதலை கொடுத்தனர் ஜப்பானியர்கள்.

முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக நிலையூன்றியிருந்த டச்சு ஆட்சியை எட்டு நாட்களில் துரத்திவிட்டு அந்நாட்டைக் கைப்பற்றியது ஜப்பான். இது இரண்டாம் உலகமாயுத்தகாலச் சம்பவம். நாட்டுமக்களுக்கு ஜப்பானிய ஆயுதங்களைப் பெற்று பயிற்சி அளித்தார் சுகர்னோ. முடிவில் 1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் நாள் சுதந்திர இந்தோனேசியா உதயமானது.

## விடுதலைக்குப் பின்

1945 முதல் 1949 வரை சுதந்திர இந்தோனேசியாவுக்கு டச்சு நாட்டின் ஆபத்து இருக்கவே செய்தது. இதற்கிடையில் நாட்டில் நிலவிய பஞ்சம், பட்டினி, பற்றுக்குறை, வேலையின்மை ஆகிய சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டில் கலகக் கொடியை ஆங்காங்கே உயர்த்தினர் கம்யூனிஸ்டுகள். ஏனைய சக்திகளும் தங்கள் திறமையைக்காட்டி புதிய இந்தோனேசியாவை தங்கள் தங்கள் பக்கம் இழுக்க முயற்சித்தனர். என்றாலும் அன்றைய டாக்டர் சுகர்னோ எந்தப் பக்கமும் சாயாது நாட்டை நடுநிலையில் கொண்டுசென்றார். 1950ம் ஆண்டு இந்தோனேசியா ஐக்கியநாடுகள் சபையில் இடம் பிடித்தது.

'தாருல்இஸ்லாம்' என்ற இயக்கம் இக்கால கட்டத்தில் தலை தூக்கியது. தொண்ணூறு வீதம் முஸ்லிம் மக்களைகொண்ட இந்நாட்டை மதசார்புடைய நாடாக மாற்றவேண்டுமென்பது இந்த இயக்கத்தின் இலட்சியமாக இருந்தது. ஆனால் டாக்டர் சுகர்னோ அவர்கள் அந்த இயக்கத்தை ஒட்ட நசுக்கி நாட்டை மதசார்பற்ற முறையில் வழிநடத்தினார்.

## இந்தியர் பார்வையில்

எந்த முகாமுடனும் சேராது நடுநிலைக் கொள்கையுடனேயே இந்தோனேசியாவை வழிநடத்தி வந்தார் சுகர்னோ. நேரு வகுத்த நெறிமுறையான பஞ்சசீலக் கோட்பாட்டை இலட்சியமாகக் கொண்டு உலக சமாதானத் தூதர்களில் ஒருவராக அன்று சுகர்னோ உலக அரங்கில் தலை நிமிர்ந்துநின்றார்.

குடியாட்சி மலர்ந்த நாள் முதல் நாட்டின் சனாதிபதியாக பதவி வகித்து வந்த சுகர்னோ 1942ம் ஆண்டிலிருந்தே கட்சி அரசியல் உறவுகளையெல்லாம் தூர எறிந்து விட்டு நாட்டு மக்களுக்கு எல்லாம் தலைவராக விளங்கினார். 1959ம் ஆண்டுவரை உலக அரங்கில் நேருவுக்கு அடுத்த இடத்தில் டாக்டர் சுகர்னோ விளங்கினார். "...இந்தோனேசிய மக்களிடையே அளவற்ற செல்வாக்குப் பெற்றவர் டாக்டர் சுகர்னோ. 'அண்ணா சுகர்னோ' என்று அன்புடன் மக்கள் அழைக்கிறார்கள். நல்ல படிப்பாளி. உலக வரலாற்றில் அதிக ஞானம் படைத்தவர். ஆசியாக் கண்டத்தின் சனாதிபதிகளில் முக்கியமான ஆனால் முதன்மையானவர்; பொம்மையல்ல; உண்மை அதிகாரம் செலுத்துகின்றவர்..." இப்படி இந்திய பத்திரிகையாளர் ஒருவர் அன்று டாக்டர் சுகர்னோவைப் பாராட்டி எழுதியிருந்தார்.

இன்று நடந்தது என்ன?

## சூழ்ச்சிக்கு பலியானர்

நாட்டுமக்களின் கோரிக்கைக்கு அடிபணிந்து பெயரளவில் சனாதிபதியாக இருந்து கொண்டு அரசாங்க நிர்வாகத்தை இராணுவத்திடம் ஒப்படைத்திருக்கிறார் டாக்டர் சுகர்னோ. இந்த ஆபத்தான நிலை இன்று நேற்றல்ல பல ஆண்டுகளுக்கு முன்னரே உருவாகியிருந்தது. நடுநிலையில் நாட்டை வழி நடத்திச் சென்ற டாக்டர் சுகர்னோ படிப்படியாக சீனக் கம்யூனிஸ்டுகளின் அரசியல் சூழ்ச்சிக்கு தன்னைப் பலியாக்கிக் கொண்டார். நேருவின் இணைப் பிரியா நண்பன் என்று கருதப்பட்டவர் சற்றில் பகிரங்கமாகவே நேருவின் கொள்கைகளைக் கண்டனஞ் செய்யத் தலைப்பட்டார்.

இந்திய எதிர்ப்புணர்ச்சியை இந்தோனேசிய மக்களிடையே படிப்படியாக ஏற்படுத்தினார். மலேசியக் கூட்டரசின் தோற்றம் இந்தோனேசிய மக்களிடையே படிப்படியாகத் தூவப்பட்டிருந்த இந்திய எதிர்ப்புணர்ச்சிக்கு சிகரம் வைத்தாற் போல் அமைந்தது. காரணம், மலேசியக் கூட்டரசை இந்தியா அங்கீகரித்ததே.

எங்ஙனம் தீவுக் கூட்டங்களைக் கொண்ட ஒரு நாடாக இந்தோனேசியா விளங்குகிறதோ, அதே போன்று ஒரு சில பெரிய தீவுக் கூட்டங்களைக் கொண்ட ஒரு சமஷ்டி அமைப்பே மலேசியா. மலேசியா முதலாளித்துவ நாடுகளின் திட்டம் என்றும், அது இந்தோனேசியாவுக்கு எதிரான ஒரு அமைப்பு என்றும் இந்தோனேசிய மக்களிடையே பிரச்சாரம் செய்ததுடன் அந்த அமைப்புக்கு எதிரான நேரடி நடவடிக்கைகளிலும் டாக்டர் சுகர்னோ இறங்கினார். மலேசிய அமைப்பின் மீது ஒரு காரணமற்ற வெறுப்பையும், பயத்தையும் இந்தோனேசிய மக்களிடையே ஏற்படுத்திய பெருமை டாக்டர் சுகர்னோவுக்கே உரியது.

இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. உள்நாட்டுப் பிரச்சினைகளில் இருந்து இந்தோனேசிய மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்கு இதை ஒரு மார்க்கமாகவே சுகர்னோ பயன்படுத்தினார். மேலும் மலேசிய அமைப்பு முதலாளித்துவ ரீதியான ஒன்று என்ற எண்ணத்தை இந்தோனேசிய மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் கம்யூனிச முகாம் பக்கம் அவர்களின் பற்றையும் கவனத்தையும் திருப்பவும் டாக்டர் சுகர்னோ முயன்றார். இதில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றார்.

## ஐ. நாவிலிருந்து வெளியேற்றம்

சீன அரசியலாரின் தாக்கம் அளவுக்கு மீறி இருந்த காரணத்தினாலும், இந்தியா மலேசியாவை அங்கீகரித்ததினாலும் இந்திய எதிர்ப்புணர்ச்சி இந்தோனேசியாவில் அளவுக்கு மீறி இருந்தது. சீன இந்திய யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் இந்த வெறுப்புணர்ச்சி பூரண செயலுருவம் பெற்றது. அண்மைக் காலத்தில் அது உச்ச நிலையையடைந்திருந்ததை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

ஐ. நா. சபை மலேசியப் பிரச்சினைக்கு நீதியான தீர்வுகாணத் தவறிவிட்டதென்ற காரணத்தை முன்வைத்து இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு புரட்சிகரமான முடிவை மேற்கொண்டது இந்தோனேசியா. உலக நாடுகளில் இன்று வரை ஐ. நா சபையிலிருந்து வெளியேறிய ஒரே நாடு இந்தோனேசியாவாகும். ஐ. நா. சபையைப் பலமற்ற ஒரு இயக்கமாக்க வேண்டுமென்ற கம்யூனிஸ்டுச் சீன அரசியலாரின் ஆசையைத் திருப்திப்படுத்துவதற்காகவே இந்தோனேசியா ஐ. நா. சபையிலிருந்து வெளியேறியது என்பதை உலக அரசியலார் அனைவரும் அறிந்திருந்தனர்.

## சதி முயற்சி

இந்தளவு தூரம் சீனாவின் கைப் பொம்மையாக விளங்கிய டாக்டர் சுகர்னோவைப் பதவியிலிருந்து அகற்றி அவரிடத்தில் தமது கொள்கைகளைப் பூரணமாகப் பின்பற்றும் ஒருவரை அமர்த்த சீன அரசியலாளரின் சக்திகள் கடந்த செப்டம்பரில் முயற்சித்தன. இம் முயற்சி கம்யூனிச எதிர்ப்பாளரான ஜெனரல் நசூசியனால் தக்க சமயத்தில் முறியடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தோனேசியாவில் ஆர்ப்பாட்டங்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும் குறையிருக்கவில்லை.

இப் புரட்சியை நல்ல முறையில் பயன்படுத்தித் தனது பதவியை நிலைப்படுத்திக் கொள்ள டாக்டர் சுகர்னோ தமது இராசதந்திரத்தை பூரணமாகப் பயன்படுத்தினார். என்றாலும் முடிவில் அவருக்குத் தோல்வியே கிடைத்துள்ளது. அவரின் இராசதந்திர முயற்சியை இந்தோனேசிய மாணவர்கள் முறியடித்துவிட்டார்கள்.

## சுகர்னோவின் தந்திரம்

செப்டம்பர் புரட்சியைப் பயன்படுத்தி நாட்டில் புற்றீசல்கள் போற் பரந்து கிடந்த கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்ட முதலில் இராணுவத்தினரின் ஆதரவைப் பூரணமாப் பயன்படுத்திக் கொண்டார் சுகர்னோ. கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை ஒழிக்க முற்பட்டாரேயன்றி கம்யூனிசத்தை அழிக்க சுகர்னோ தயாராக இருக்கவில்லை. கம்யூனிஸ்டுத் தலைவர்களைச் சிறையில் அடைத்தும், சுட்டுக்கொன்றும், நீதிமன்றங்களில் ஏற்றி மரண தண்டனையும் கொடுத்த சுகர்னோ கம்யூனிஸ்டுக் கட்சியை தடை செய்ய மறுத்துவிட்டார்.

டாக்டர் சுபாந்திரியோ, உதவிப் பிரதமர் சாரேல் சாலே போன்ற பதினைந்து கம்யூனிஸ்டுகளைத் தமது அமைச்சரவையில் வைத்திருந்தார். டாக்டர் சுபாந்திரியோ அக்டோபர் புரட்சியில், புரட்சி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவராக இருந்தும் அவரை மன்னித்துத் தமது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார் சுகர்னோ.

கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு ஓரளவு குறைக்கப்பட்டதும் கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்களை அகற்ற முற்பட்டார். அதன் பிரதிபலிப்பே ஜெனரல் நசூசியனை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றிய சம்பவமாகும்.

இந்தோனேசிய மாணவர்கள் டாக்டர் சுகர்னோவின் இராசதந்திரத்தை நன்கு புரிந்திருந்தனர். தீவிர கம்யூனிஸ்டுகளான டாக்டர் சுபாந்திரியோவையும், சாரெல் சாலேவையும் அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்றும், கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்ய வேண்டுமென்றும் மாணவர்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களையும் கிளர்ச்சிகளையும் நடத்தினார்கள். முடிவில் மாணவர்களின் கோரிக்கை வெற்றி பெற்றிருப்பதுடன்; வலது சாரிகளின் கையும் ஆட்சி அதிகாரத்தில் பலம் பெற்று விட்டது.

## சீனாவுடன் உடன்படிக்கை

டாக்டர் சுபாந்திரியோ இந்தோனேசியாவின் நீண்டகால வெளிநாட்டு

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியம் கண்ட தன்னிகரற்ற தலைவர்

## செல்வாவுடன் வாழ்வது யாம் பெற்ற பேறு

**கனம் மூ. திருச்செல்வம் கியூ.சி.**

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் 68வது பிறந்த நாளை (31—3—66) யொட்டி உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு திருச்செல்வம் இக் கட்டுரையை எழுதியுள்ளார். திரு. செல்வநாயகம் அவர்கள் தமிழினத்தை தேசிய அடிப்படையில் ஒன்றுபடுத்திய முதல்வர் என்றும், தமிழ் பேசுமினத்தின் விடுதலைப் போராட்ட சின்னம் அவர் என்றும், அவர் காலத்தில் வாழ்வது நாம் செய்த பெரும் பாக்கியம் என்றும் இக் கட்டுரையில் அமைச்சர் எடுத்துக் கூறியுள்ளார்.



இரு நூறு ஆண்டுகளுக்குப்பின்பு, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் 'தேசிய வீரர்கள் தினத்தை' கொண்டாடும் பொழுது, திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு பெருமைமிக்க ஸ்தானத்தை கட்டாயமாகக் கொடுப்பார்கள். ஏனென்றால், திரு. செல்வநாயகம் அவர்களே தமிழ்பேசும் மக்களை ஒரு தேசிய இனமாக உருவாக்குவதற்கு அத்திவாரமிட்ட மாபெரும் தலைவரும் வழிகாட்டியுமாக விளங்கிவருகிறார்.

### தேசபிதா

வரலாற்று அடிப்படையிலும், மொழி, கலாச்சார அடிப்படையிலும் தங்கள் பாரம்பரியத்தை அழிய விடாது, தன்மானத்துடன் இந்த நாட்டில் தொடர்ந்து வாழவும், தங்கள் பாரம்பரியத் தாயகத்தில் விடுதலைபெற்ற மக்களாக விளங்கவும் கூடிய யதார்த்த ரீதியான ஒரு அரசியற் தத்துவத்தை தமிழ் பேசும் மக்கள்முன் வைத்த முதல் தலைவர் என இந்த நூற்றுண்டின் இணையற்ற அரசியல் மேதையும் நேர்மையாளரும், தமிழ்பேசும் இனத்தின் தேச பிதாவுமாகிய திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களை வருங்காலச் சந்ததி நிச்சயமாக போற்றும்.

### உண்மையான வழிகாட்டி

நாங்கள் திரு. செல்வநாயகம் அவர்களின் காலத்தில் வாழ்வதுபற்றிப் பெருமையடைகிறோம். அவரது பாதையிலே மகிழ்ச்சியுடன் முன்னேறுகிறோம். அவருடன் மிக நெருங்கிப் பழகும் எங்கள் கண்களுக்கு திரு. செல்வநாயகம் அவர்கள் இலங்கையின் ஒரு தேசியத் தலைவராகவே காட்சியளிக்கிறார். திரு. செல்வநாயகம் அவர்கள் உண்மையும், விசுவாசமுமுள்ள ஒருவழிகாட்டியாக விளங்கி வருகிறார். தன்மேல் நம்பிக்கை வைத்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் நன்மைக்காக, தனது செல்வம், உடல்நலம் வசதி வாய்ப்புக்கள் அனைத்தையும் துறக்கும் மனப்பான்மையும், தன்னலமற்ற மக்கள் சேவையுமே ஒரு உண்மையான வழிகாட்டிக்குரிய இலக்கணமாகும். இவையத்தனையுமுடைய ஒரு மாபெருந் தலைவராக திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் விளங்குவதனுலேயே, தமிழ் பேசும் மக்கள் அவர்மீது பற்றும் பாசமும் கொண்டு தங்கள் தலைவன் என்று பெருமையோடு மார்தட்டிக்கூறிக் கொள்ளுகிறார்கள்.

### போராட்டச் சின்னம்

திரு. செல்வநாயகம் அவர்கள் பல ஆண்டுகளாக, எங்கள் போராட்டத்தின் ஒரு அடையாளமாக விளங்கி வந்திருக்கிறார். இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரசையாவதை ஏற்றுக் கொள்ளமுடியாதென்பதில் அவர் மிக உறுதியாக இருந்து, தனது வாழ்க்கை மூலமும் நடத்தை மூலமும் தமிழ் பேசும் இனம் காட்டிவரும் அந்த உறுதிப்பாட்டை மற்றவர்கள் விளங்கும் வண்ணம் செய்திருக்கிறார். தமிழ் பேசும் இனம், இந்நாட்டில் யாருக்கும் அடிமையின்றி சுதந்திர அடிப்படையில் சம அந்தஸ்துக்களுடன் சிறப்புற வாழ வேண்டுமென்பதில் அவர் காட்டிவரும் ஆர்வம்—அவர் காட்டி வரும் ஒழுக்கமான உறுதிப்பாடு-இவை எதிரிகளும் போற்றக் கூடிய ஒன்றாகும்.

### இரும்பு இதயம்

திரு. செல்வநாயகம் அவர்கள் தனது சொந்த வாழ்வில் எளிமைக்கும் மனித தத்துவத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறார். அவர் காட்டி வரும் மனித உணர்ச்சி உண்மை வாய்ந்ததாகும். இந்த மனித உணர்ச்சிக்கு பின்புதான் தனது மக்களின் அடிப்படை உரிமைகளை ஒரு அங்குலம் தானும் விட்டுக் கொடுக்காத இரும்புள்ளம் கொண்ட ஒருவராக திரு. செல்வநாயகம் அவர்கள் காட்சி தருகிறார்கள்.


### நான் பெற்ற பேறு

எங்கள் வணக்கத்துக்குரிய வழிகாட்டியும், தலைவருமான தந்தை செல்வநாயகம் அவர்களை அவரது 68வது பிறந்த நாளாகிய இன்று இருகரங்கூப்பி அஞ்சலிசெய்கிறோம். திண்ணிய நெஞ்சும், நேர்மையான போக்கும் உடைய அப்பழுக்கற்ற மாபெரும் தலைவராகிய திரு. செல்வநாயகம் அவர்களால் வழி நடத்தப்படும் ஒரு நல்ல அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்துள்ளது பற்றி நான் பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன். பல்லாண்டுகளாக அவருடன் மிகவும் நெருங்கிப பழகும் யாருக்கும் எளிதில் கிடைக்க முடியாத பாக்கியம்-எனக்குக் கிடைத்தது நான் அடைந்த பெரும் பேறு என தனிப்பட்ட முறையில் எண்ணிக் கொள்ளுகின்றேன்.

### பல்லாண்டு வாழ்க

இன்று இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் ஓரளவு சுயமரியாதையை மீண்டும் பெற்று, சுதந்திரமும் சமத்துவமும் உள்ள குடிமக்களாக வாழ முடிகின்றதென்றால் அதற்கு மிகப் பெரிய அளவில் திரு. செல்வநாயகம் அவர்களின் சேவையே காரணம் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. செல்வநாயகம், இன்னும் பல்லாண்டுகள் எங்களுக்கு வழிகாட்டியாக விளங்கி, தமிழ் பேசும் மக்களுக்கு சேவை புரிய, ஆண்டவன் அவருக்கு வலிவையும் பொலிவையும், நோயற்ற வாழ்வையும் அளிப்பானாக.



## அருளொளி நிலையக் கூட்டம்

கொழும்பு, கொம்பனித் தெரு, 31,21 டோசன் வீதியில் உள்ள அருளொளி நிலையத்தில் 20-3-66 மாலை 6-30 மணிக்கு, திரு. எஸ். ஆறுமுகம் அவர்களின் தலைமையில் கொழும்பு அருளொளி நிலைய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

'கடந்த சில ஆண்டுகளாக அருளொளி நிலையத்தின் ஆத்மீக சேவைகள் தடைப்பட்டிருந்தமை சமூகத்திற்கு பெரும் நஷ்டம். அதனை மீண்டும் செயற்படுத்துவது ஆத்மீகத்துறையில் நாம் செய்யும் மாபெரும் தொண்டாகும் போலிச்சமயக் கொள்கைகளும், தவறுதலான விளக்கங்களும் பரவி சமயம், சாக்கடையாக மாறி மத, இன வெறிகள் தலை தூக்க நாடே பிளவுபடும் இன்றுவில் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று ஒற்றுமைக்கரம் நீட்டி, சமத்துவ விளக்கேற்றி அறியாமையிருளகற்றும் ஆத்மீகப் போதனையாம் எம்சேவை மீண்டும் தொடங்க வேண்டுவதவசியம். இது இன்றைய சமுதாயத்தில் ஐக்கியத்தையும் அமைதியையும் ஏற்படுத்த மிகச்சிறந்த சாதனமாகும்.' என்று தலைவர் தம் உரையில் குறிப்பிட்டார்.

அருளொளி நிலையத்தின் மாதாந்த பிரார்த்தனைக்கூட்டத்தை 28-3-66 மாலை 6-30 மணிக்கு நிலையத்தில் நாடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.


## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

## சங்கப் பலகை

# தெய்வமகன்

ஆசிரியர்: நாவேந்தன்
விலை: ரூபா இரண்டு,
வெளியீடு: தமிழ்க்குரல் பதிப்பகம் ஏழாலை,
யாழ்ப்பாணம்.

நாவேந்தன் நமது வாசகர்களுக்கு மிகவும் பழக்கமானவர். சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றவர், அவர் தமிழ் மக்களுக்கு அளிக்கும் பரிசு தான்—தெய்வமகன் என்னும் இச்சிறு கதைத் தொகுதி.

தெய்வ மகன் என்ற இத்தொகுப்பிலே பதினொரு சிறுகதைகள் (அளவில் கூட சிறுகதை தான்) இருக்கின்றன.

இன்றைய ஈழத்து இலக்கியப் போக்கிலே, நாவேந்தனின் போக்கு தனித்துவமானது. அதன் காரணத்தால் ஏனையவருக்கு அவர் பிரச்சனையாளர். ஆனால் அவர்-அவரளவில் பிரச்னையாளரில்லை. ஏனெனில் அவர் நாட்டின் போக்கை- இலக்கியத்தின் தன்மையை நன்கறிந்தவர். அதன் காரணத்தால் ஏற்பட்ட அவரது இலக்கியச் சித்தாந்தம் அவருக்கே உரியது. அவர் அதனை முழுமையாக நம்புகிறவர். அவரது சித்தாந்தங்களைப் பின்பற்றுகிறவர்கள் தொடர்ந்துவருகிறார்கள் என்ற கலைஞன் உறுதிப்பாடு நிரம்பியவர். அதில வெற்றியும் கண்டு வருபவர் நாவேந்தன். மற்றவர்கள் இவரினது வெற்றியைக் கண்டு பொருமும் போதெல்லாம் நாவேந்தன் படிப்படியாக உயருகிறார்.

நாவேந்தனின் இத் தொகுப்பிலுள்ள கதைகள்அனைத்தையும் ஒரேமூச்சாகபடித்து முடித்தபின் மனதில் நிறைவே எழுந்தது. நாவேந்தனின் முன்னுரையே அழகாக அமைந்து, அவரது உளப்போக்கினை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் தன்னைப் புரிந்துகொண்டவர்கள் மிகச் சிலரே என எண்ணுகிறார். அந்த எண்ணமே இலக்கிய உறுதிக்குச் சான்று.

எல்லோரும் புரிந்து கொண்டு விட்டால் இலக்கியாசிரியனின் திறமை குறைந்து விட்டது என்று தானே பெர்னாட்சாவும் கூறினார். ஆனால் நாவேந்தனை என்றோ ஒரு நாள் வரப் போகும் வாசகனுக்காக எழுதிக் கொண்டிருக்கிறார். அப்போது நாவேந்தனை உலகம் நன்கறியும்.

நாவேந்தனின் கதைகள் ஒவ்வொன்றுமே தனித் தமிழில் நன்றாக அமைந்துள்ளன. இன்று மண்வாசனை என்ற பெயரில் மலர்கின்ற அலங்கோலச் சித்திரங்களையோ, செந்தமிழின் இனிமையைக் குன்றச் செய்கின்ற வடமொழிக் கலப்புகளையோ இதில் காண முடியாது. தனித்தமிழில் எதனையுமே அழகாகச்சொல்ல முடியும் என்பதற்குச் சிறந்த உதாரணங்களாக இவரின் கதைகள் அமைகின்றன. தமிழ் இலக்கிய மரபு வழிமுன்னேறும்நாவேந்தனின் தனித்தமிழ் நடையைசிலர் தர்க்கத்திற்கும்- இலக்கிய மேடைக் கருவாக்கிக்கொள்கிறார்கள்.

மறைமலையடிகளின் 'கோகிலாம்பாளின் கடிதங்கள்'சிறந்த இலக்கியமாகும்போது, நாவேந்தனின் கதைகளை ஏன் பிரச்சினைக்காளாக்குகின்றனர் எனப் புரியவில்லை. இன்று சரியாக தமிழ் எழுதப்படிக்க தெரியாதவர்கள் கூட இலக்கியம் படைக்க முற்படுவதால் தான் இந்த வாதம் எழுந்துள்ளதோ என்ற ஐயம்ஏற்படுகிறது. நல்லதமிழை அறிய, தமிழின் அழகை உணர முன்னேகூறப்பட்ட 'மண்வாசனை' எழுத்தாளர்கள் நாவேந்தனின் கதையைப் படித்தல் நன்மை பயப்பதாக அமையும்.

அத்துடன், சிலர் நாவேந்தன் மரபுவழி ஒழுகுவதைக் கண்டு 'பழமைவாதி'-எனக் கூறுகின்றனர். ஆனால், நாவேந்தனின் உள்ளடக்கம் ஒவ்வொன்றும் 'புதுமை'யானவையாகவே விளங்குகின்றன. முற்போக்குவாதிகளால் கூட கையாளமுடியாத பாலுணர்வுச் சிக்கல்களை நாவேந்தன் அவர்கள் தமது கதைகளிலே-கொஞ்சம் கூட விரசம் தோன்றா வகையிலமைத்துள்ளார். நாட்டின்-சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைகளாக பாலுணர்வுச் சிக்கல்கள் அமைந்துள்ளனவென்றும்- அவற்றிற்கு ஏதாவது பரிகாரம் தேடாத வரையில் (மனிதமனம் அகநிலையில் நிறைவு காணுதவரையில்) நாட்டின் பண்பாடு, நாகரிகம் என்பன நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகிவிடும் என்பதில் நாவேந்தன் நம்பிக்கைகொண்டவராகவே இத் தொகுப்பில் காணப்படுகிறார்.

காதல் பொய், பிரசவம், உணர்ச்சி, ஆண்மை, கடவுள் சாட்சி போன்ற கதைகள் ஏதோவொருவகையில் பாலுணர்வுடன் சம்பந்தப்பட்டவை.

திரை-என்னும் கதையில்- யாழ்ப்பாணத்து இளைஞனின் கொழும்பு வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் தாய் இறந்து கொண்டிருக்க, அவன் கொழும்பு மாநகரில் தனது பெண்தோழியுடன் படம் பார்க்க கியூவில் நிற்பதைக் கூறுகிறது. இக்கதையில் யாழ்ப்பாணத்து இளைஞர்களின்-இரட்டைவாழ்க்கை (ஆனையிறவுக்கு அப்பால் ஒன்றும், இப்பால் ஒன்றுமான) அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

—இந்த மாயவாழ்வின் திரை எப்போது விலகும் என ஆசிரியர் கேட்கும் போது—இளைஞர் குலமே சிந்தனையிலாழ்ந்து விடுகிறது.

'தெய்வ மகன்'—யேசுபிரானின் ஜனனம்பற்றி அழகான சொல்லோவியம்.

—மொத்தத்தில் நாவேந்தன் கதைகளை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது அவசியம்.

—சித்தார்த்தன்.


தெய்வீக பலத்தினால்

ஆண், பெண் இருபாலாருக்கும் மனதிலுள்ள விஷயங்களை இரகசிமாய் நிறைவேற்றிக் கொள்ள ஒரு வழி உண்டு.

விபரம் எழுதிக் கேளுங்கள்

கவர்மென்ட் ரெஜிஸ்டர்
பி.எம். திசாநாயக்க,
நான்கு கோயில்களின்
தர்மகர்த்தா
கம்பளை.
டெலிபோன்: 454
த. பெ. 1231,
கொழும்பு.


# தமிழாராய்ச்சி மாநாட்டில் கா. பொ. இ. உரை நிகழ்த்துவார்

உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தொடக்க உறுப்பினரும் கிளிநொச்சித் தொகுதிப் பா. உறுப்பினருமான திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் அடுத்த திங்கள் 14-ம் நாளன்று கோலாலம்பூரில் ஆரம்பமாகவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் "தமிழ் மக்கள் சிந்தனையில் திருக்குறளின் செல்வாக்கு" "தமிழ் நாட்டில் இலக்கியத் திறனாய்வின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னுமிரு சிறப்பாய்வுரைகளை நிகழ்த்துவார். இம்மாநாட்டில் வெளியிடப்படவிருக்கும் "உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழாராய்ச்சிக் கல்வி" என்னும் நூலில் சேர்ப்பதற்கு அம்மாநாட்டு நிர்வாகிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க திரு. இரத்தினம் "இலங்கையில் தமிழாராய்ச்சி" என்னும் கட்டுரையையும் அனுப்பியுள்ளார்.

ஏப்பிரல் திங்கள் 14ம் நாளன்று மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் ஆரம்பமாக இருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கிளிநொச்சித் தொகுதிப் பா. உ. திரு கா. பொ. இரத்தினம் அவர்களும் கலந்து கொள்வார்கள். இம்மாநாட்டை நடாத்தும் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தொடக்க உறுப்பினர்கள் இலங்கையில் இருவரே. ஒருவர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, மற்றவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

தில்லி மாநகரில் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவப்பட்ட பொழுது இவர்கள் இருவரும் கலந்து கொண்டனர். இம்மன்றத்தைநிறுவ வேண்டுமென முன்மொழிந்து வற்புறுத்தியவர் திரு. இரத்தினம் என்பது குறிப்பிடத் தக்கது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வெளியிடப்படவிருக்கும் ஆராய்ச்சி மலரில் சேர்ப்பதற்கு ஒரு கட்டுரையையும், மாநாட்டில் இரு ஆராய்ச்சி உரைகளையும் நிகழ்த்தவிருக்கும் திரு. இரத்தினம் ஏப்ரல் முதல் வாரத்தில் மலேயா செல்வாரெனத் தெரிகிறது.

இம்மாநாட்டில் 'எழுத்தாளர் கல்கி' என்னும் திறனாய்வு நூலை வெளியிடவும் திரு. இரத்தினம் முயற்சி எடுத்து வருகிறார். இந்நூல் மலாயாப் பல்கலைக்கழகத்தில் கல்கி பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் வண. தனிநாயக அடிகள், முருகு சுப்பிரமணியம், கா. பொ. இரத்தினம் திரு. எஸ். முருகையா, திரு. ஆ. விசுவநாதன் என்போர் நிகழ்த்திய ஆய்வுரைகளைக் கொண்டதாகும். இதனை உலகத் தமிழ் மன்றத்தின் வெளியீடாக திரு. இரத்தினம் பதிப்பித்துள்ளார்.

### உலகத் தமிழ் மன்றம்

உலகத் தமிழ் மன்றத்தின் கூட்டத்தையும் கோலாலம்பூரில் கூட்டுவதற்கு அதன் தலைவரான திரு. இரத்தினம் ஒழுங்குகள் செய்துவருகிறார். ஏப்ரல் மாதம் முழுவதும் உலகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் தமிழ் விழாக்களும், திருக்குறள் விழாக்களும் நடாத்தவும் ஒழுங்குகள் செய்யப்படுகிறதாம். இவ்விழாக்களிலும் திரு. இரத்தினம் கலந்து கொள்வார்.

# எல்லாம் ஒன்று தான்

### நிமிடக் கதை

நான் வேலை செய்துவந்த கந்தோரில் ஒருவர் இருந்தார். அவர் எதையும் அரை குறையாகத் தான் விளங்கிக்கொள்வார் செல்வநாயகம் என்பவர் வந்து தேடிக்கொண்டு போனால் செல்வரத்தினம் வந்து தேடிக்கொண்டு போனதாகச்சொல்லுவார். பிரேமரட்ணு என்பவர் இறந்துவிட்டால் பிரேமதாசா இறந்துவிட்டதாகச் சொல்லுவார். யாராவது ஒருவரைப் பம்பலப்பிட்டியில் வந்து சந்திக்கும்படி சொல்லிவிட்டுப் போனால் கொள்ளுப்பிட்டியில்வந்து சந்திக்கும்படி சொன்னதாகச் சொல்லுவார். அவரைப் பொறுத்தவரையில் செல்வநாயகத்துக்கும் செல்வரத்தினத்துக்கும்—பிரேமரட்ணுவுக்கும் பிரேமதாசாவுக்கும்—பம்பலப்பிட்டிக்கும் கொள்ளுப்பிட்டிக்கும் இடையில் வித்தியாசமே இல்லை! அவருக்கு எல்லாம் ஒன்றுதான். இதனால் அவருடன் வேலை செய்துவந்த நாங்கள் பட்ட அலைச்சலும் உலைச்சலும் கணக்கிலடங்காது.

இவரை ஒருநாள் கந்தோர்ப் பெரியவர் அழைத்து இவருடன் வேலை செய்து வந்த சில்வா என்பவர் சில நாட்களாகக் கந்தோருக்கு வராமல் இருக்கும் காரணத்தை விசாரித்தார். சில்வா அப்பொழுது ஆஸ்பத்திரியில் இருந்தார். அவரை முதல் நாளும்கூட இவர் போய்ப் பார்த்துவிட்டு வந்திருந்தார். 'மிஸ்டர் சில்வா கந்தோருக்கு ஏன் வரவில்லை?' என்று பெரியவர் கேட்ட கேள்விக்கு அவர் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார் இவர். அதைக் கேட்ட பெரியவர் 'அப்படியா? என்ன சங்கதி?' என்று விசாரித்தார். 'வயிற்றிலே புண்' என்று பதிலளித்தார் இவர். 'வயிற்றிலே புண்ணா? அடடா! எங்கே புண்?' என்று பரிவோடு விசாரித்தார் பெரியவர்.

சில்வாவுக்கு வயிற்றிலே புண் என்ற ஞாபகம் இருந்ததே ஒழிய எங்கே என்பது ஞாபகத்திலில்லை, நம்முடைய ஆசாமிக்கு. ஆகவே சற்று நேரம் யோசித்துக் கொண்டு நின்றார். பெரியவர் அவரை நிமிர்ந்து பார்த்தார். மேலும் யோசித்துக் கொண்டு நிற்க நேரமில்லை. எதுவோ 'பையில்' என்ற ஞாபகம் பளிச்சென்று ஓடியது. 'கர்ப்பப்பையில்' என்று பட்டென்று பதிலளித்தார்.

அதைக் கேட்ட பெரியவர் திகைத்துப்போனார். 'என்ன? கர்ப்பப் பையிலா? மிஸ்டர் சில்வாவுக்குக் கர்ப்பப் பையா?' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

அப்பொழுதுதான் நம்முடைய ஆசாமிக்குத் தான் விட்ட தவறு—இரைப் பைக்குக் கர்ப்பப்பை என்று சொன்னது விளங்கியது. உடனே 'இல்லை சேர்; ஓம் சேர்' என்று உளறத்தொடங்கினார்.

'சரி சேர்; நீர் இங்கிருந்து போம், சேர்' என்றுசொல்லி அவரைத் துரத்திவிட்டுப் பெரியவர் தன்னையும் மீறி வந்த சிரிப்பை அடக்கமாட்டாமல் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

—அருள்.

# உரும்பிராய் கிராமசபை பட்டின சபையாக மாறுகிறது

உரும்பராய் கிராமசபை வெகு விரைவில் பட்டின சபை அந்தஸ்துக்கு உயர்த்தப்படவிருக்கிறது. இது சம்பந்தமாக கோப்பாய்த் தொகுதிப் பா. உ. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை உள்ளூராட்சி அமைச்சரைப் பேட்டிகண்டு பேசியபோது மேற்படி கிராமசபையை பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்த அமைச்சர் ஒப்புக்கொண்டதாகவும் அறியப்படுகிறது.

உரும்பராய் கிராமசபையைப் பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்தவேண்டுமென உரும்பராயைச் சேர்ந்த பல பிரமுகர்களும், கிராம மக்களும் பலகாலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளனர். கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளையைச் சந்தித்து, தங்கள் கிராம சபையைப் பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்த ஆவன செய்து தரும்படி உரும்பராய் மக்கள் மகசர் சமர்ப்பித்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இது சம்பந்தமாகக் கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளை உள்ளூராட்சி அமைச்சர் திரு மு. திருச்செல்வம் அவர்களைச் சென்ற வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். உரும்பராய் கிராமசபையைப்பட்டினசபைஅந்தஸ்து ஆக்கவேண்டும்என்றகோரிக்கையைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும், இதற்கான நடவடிக்கைகளை வெகு சீக்கிரம் தாம் மேற்கொள்வதாகவும் அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார் என்றும் அறியப்படுகிறது.

# அபிவிருத்தித் திட்டமும் அடிப்படைத் தேவைகளும்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பற்றியும் அதற்கான திட்டங்கள் பற்றியுமே இன்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இதற்கு முன்னரும் இலங்கையில் சில திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவையனைத்தும் செயலுருப்பெறவில்லை. அதற்கான காரணத்தை இங்கு விளக்கும் பேராசிரியர் முறையான திட்டமிடுதலுக்கு மூன்று காரணங்களை எடுத்துக் காட்டுகிறார். இலங்கையின் மூலவளங்களைப்பற்றி முறையான ஆராய்வு நிகழவில்லையென்றும், மூல வளங்களைப் பற்றிய ஆய்வின் பின்னரே பாரிய திட்டங்கள் செயலுருப்பெறும் என்றும் கட்டுரையாசிரியர் கருதுகிறார். மூலவளங்கள் பற்றிய ஆய்வுக்கு புவியியலாளரின் சேவை தேவைபபடுகிறது என்றும் கட்டுரையின் இறுதியிற் குறிப்பிட்டிருக்கிறார் பேராசிரியர்.

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தி பற்றி தமிழரசுக் கட்சியினர் ஆராய்ந்து வருகிறார்கள். யாழ்ப்பாணப் பகுதி பாலை நிலமாகிவிடும் என்று சிலர் கடந்த ஆண்டுகளிற் கூறியது பற்றியும் தமிழரசுக் குழுவினர் ஆராய்கிறார்களாம். யாழ்ப்பாணம் பாலை நிலமாக மாட்டாது என்பதைப் பல ஆதாரங்களுடன் இப் பகுதியில் அடுத்த வாரம் ஒரு புவியியற்சரிதவியலாளர் ஆராயவிருக்கிறார்.

பேராசிரியர் கா. குலரத்தினம்
புவியற் பேராசிரியர், இலங்கை பல்கலைக் கழகம்

அபிவிருத்தித் திட்டமானது சிக்கலான ஒரு விடயம்; ஒரு பொருளாதார நிபுணர் பெரும்பாலும் வெளிப்படையாகக் கருதும் பொருளாதார வளர்ச்சியையும் உற்பத்தியையும் மாத்திரம் கொண்டதல்ல. ஆனால் பலதரப்பட்ட துறைகளின் நிபுணர்களை ஒன்று சேர்ப்பதற்குத் தேவையாகும் பலவகை உட்தொடர்பு கொண்ட பிரச்சினைகளையும் அடக்கியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தியையும் சமூக நலன்களையும் திறம்பட வெளிப்படையான அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாகவே வெற்றிகரமாக அடையலாம். தேசிய நலனின் வளர்ச்சியானது தேவையான பலனை பணச் செலவு, முயற்சி ஆதியன இன்மையினால், நடைமுறைக்கு வரக்கூடியதான, உண்மையில் அத்திவாரமிடப்பட்ட திட்டங்களின்றி அடைய முடியாது. ஓர் இடத்தையோ, கூட்டத்தையோ, வேலையையோ, உண்மையாக மதிப்பிடுவது நடைமுறைக்கு வரக்கூடிய ஒரு திட்டத்தின் அடிப்படை முதற்றேவையாகும்.

## சூழல்

நாம் விரும்பிய பலனை உற்பத்தியாக்கும் சிறந்த வெற்றியடையுமொரு திட்டமானது பின் உண்டாகும் காரியங்களைத் திர ஆலோசித்ததாக இருக்கும். தேசியத் திட்டமானது ஒரு காற்றில்லா வெளியிடையே இயங்குவதன்று. அது தொடர்ச்சியான புவியியல் அமைப்புகளிடையே இயங்குவதாகும். குறிப்பிட்ட ஒரு திட்டமானது ஒரு நாட்டில் வியத்தகு முறையில் இயங்குவதன் காரணமாக, சர்வதேசரீதியில் எல்லா நாடுகளுக்கோ, எல்லாப் பிரதேசங்களுக்கோ பாவிக்கலாமென்பது சரியன்று. ஒரு திட்டமானது எப்பிரதேசத்துக்குப் பாவிக்கப்பட வேண்டுமோ அப்பிரதேசத்தின் சமூக சூழ் நிலைகளுக்கேற்ப வரையப்படல் வேண்டும். இவ்விடயத்தின் பலவற்றை உள்ளடக்கி முக்கிய அம்சமாக புவியியல் அமைந்துள்ளது.

ஒரு பிரதேசத்தின் இயற்கைச் சூழலின் பிரதான மூலகங்களில், பௌதிக மூலகங்களான, இடவிளக்கவியல், நீர், காலநிலை, மண்வகை ஆதியனவும், உயிரியலில் அடங்கும் தாவரங்கள், மிருகங்கள் ஆகியவற்றையும் அடக்கலாம். மேலும் பண்பாட்டுச் சூழ்நிலையானது குடிப்பரம்பல், அதன் போக்கு, தொழில் நுட்பத் துறையிலும், நிறுவனங்களிலும் மக்கள் செலவிடும் மூலப் பொருட்கள் மக்கள் அவற்றில் வைத்திருக்கும் நம்பிக்கையும், எதிர்பார்க்கும் பலாபலனும் ஆதியவற்றை ஆராயும் புள்ளி விபரவியலையும் கொண்டுள்ளது.

## நுகர்வும் உற்பத்தியும்

மேலும் மக்கள், அவர்களது பிரதேச அமைப்பில் ஒரு பெட்டியில் நாணயங்கள் குவிந்திருப்பது போன்று இருப்பதில்லை என்பதை நாம் மறுக்கக் கூடாது. பல அம்சங்களை அடக்கியுள்ள உயிர்ச் சூழலியல் அமைப்பின் அடிப்படையை நாம் ஆராயின் அவை அச் சூழலின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும். மேலும் அவர்களின் நல்வாழ்வுக்கான பலனை அடையும் வகையான திட்டங்கள் உயிர்ச் சூழல் அமைப்பின் அடிப்படை அம்சங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

இலங்கையின் தேசியத் திட்டமானது, இலங்கை மக்களின் தொழில் நுட்பத் திறனிலும், இயற்கை அமைப்புகளிலும் தங்கியுள்ள மூலப் பொருட்களை மிகக் கவனமாகவும், ஆழ ஆராய்ந்ததுமாகக் கொண்டிருக்க வேண்டும். அப்படியான ஆராய்வில்லாத ஒரு திட்டமானது சரிந்த ஒரு பாதையில் சாரதியற்ற ஒரு வாகனம் கீழ்நோக்கிச் செல்வது போன்றதை ஒக்கும். தேவைகளை ஆராயுமிடத்து, நுகர்வுக் காரணிகள் போல் உற்பத்திக் காரணிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன; ஆகவே உணவு, உடை, உறைவிடம் ஆகிய சாதாரண அடிப்படைத் தேவைகளல்லாமல் மனிதனின் வேறு தேவைகளிலும் விருப்பங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். உணவு மாத்திரமல்லாமல் வேறு தேவைகளும் மனிதனுக்கு உள்ளன. அவனுடைய கலாசார சமய பொழுது போக்குத் தேவைகள் ஆழ ஆராய்ந்த ஒரு திட்டத்தில் அமைக்கப்படல் வேண்டும்.

## அடிப்படை அம்சங்கள்

புள்ளி விபரவியலின் உதவியினாலேயே ஒரு திட்டத்தின் அளவு சம்பந்தமான அளவைகள் முக்கியமாகக் கணிக்கப்பட்டிருக்கும். ஆனால் அதன் தன்மையானது மிகவும் கடினமான விடயமாகும். அது கவனமாக நுணுகி ஆராயப்பட வேண்டியதாகும்; அதில் புவியியல் முக்கிய பங்கு வகிக்கின்றது. பௌதிகவியலிற்கும் சமூகவியலுக்கும் இடையில் அமைந்திருக்கும் புவியியலின் தொடுப்புப் பாலமானது, தேசிய திட்டமிடுபவருக்குத் தேவையான அடிப்படை விதியை ஒன்று சேர்ப்பதற்குப் புவியியலுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது.

தேசியத் திட்டமானது மூன்று அடிப்படை அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அவையாவன:

1. கண்டுபிடிப்புகளும் தொகுப்பும்: நாட்டினுடைய மொத்த மூலவளத்தைக் கிடைக்கக் கூடிய புள்ளி விபரங்களையும் ஆழ்ந்து பரிசோதித்தல்.

2 முன்யோசனை: மூல வளத்தைத் திட்டமிடுதல், வருங்காலத்திற்குத் தேவையானவற்றை வருங்கால மூலவளத் தளங்களுடன் சமப்படுத்தி கூடிய முன்னேற்றத்துக்காக ஆலோசித்தல்.

3 பரிசோதனையும் பரிகாரமும்; தேசிய முன்னேற்றத்திற்குத் தடையான காரணிகளை ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரம் தேடுதல்.

## புவியியலின் உதவி

எனவே, இவற்றின் ஆரம்பக் கட்டத்திற்குப் புவியியல் மிக உறு துணையாக இருக்கும். மேலும் இந்த ஒழுங்கு முறையானது எப்போதும், ஒரு பிரதேசத்தில் இருக்கும் அமைப்புகளின் உட்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும். மேலும் (1) தேசியக் கூட்டுக்குள் பிரதேசப்பிரிவு, (2) பிரதேசங்களாகப் பிரியக்கூடிய வகையில் பிரிவுபடுத்தும் அம்சங்கள், ஆதியன முறையாக இன்மையாயின், ஒரு தலை சிறந்த திட்டம் வெற்றிபெற மாட்டாது. பெரும்பாலும் திட்டமிடும் துறையில் இருக்கும் நிபுணர்கள் எல்லாத் துறையையும் சமமாகக் கவனிக்காமல் ஒரு துறையிலும் பார்க்க மற்றதில் கவனமெடுக்கிறார்கள். காரணம் அவர்கள் தமது அனுபவம் அன்றி பயிற்சியினாலோ அல்லது அந்தச் சமயத்தில் அப்படியொன்றுடன் கரிசனையாயிருப்பது உகந்தது என்று கருதியதினாலோ ஆகும். திறமையான தேசிய முன்னேற்றமானது மூலப் பொருட்களையும் தேவைகளையும் முறையாக ஒருங்கே இணைப்பதாக அமைந்தது. இதில் ஒருங்கு இணைப்பவர் விலைமதிக்க முடியாத மதிப்பினைப் பெறுகின்றார். இப்படியான குணாதிசயம் ஒரு பயிற்சி பெறும் புவியியலாளனுக்கு அவசியம் என்று வற்புறுத்தப்பட்டது. இப்போது நாம் தேவைப்பட்ட இந்த ஆராய்ச்சித் திட்டத்துக்குத் தேவையான குறிப்பிடப்பட்ட அம்சங்களை ஆராய்வோம்.

## குடி

எங்களது குடி அதிகரிப்பானது எவ்வளவு பிரச்சினையானதா அல்லது குடிப் பெருக்கத்திற்கும் மூல வளங்களுக்கும் பயன்படுத்தலிற்கும் இடையில் ஒரு பெரும் இடைவெளி வளருகின்றதா? அப்படியானால் இந்தப் பற்றாக்குறை குறுகிய காலம் அல்லது நீண்டகால இடைவெளியை உடையதா? இந்தப் பிரச்சினையானது உலகின் பெரும் பகுதி மக்களை எதிர் நோக்கியுள்ளது. இன்று உலகின் குடித்தொகையானது நாளாந்தம் ஒரு இலட்சம் விதம் கூடிக்கொண்டு வருகின்றது. இத்தொகைக்கு எங்களுடைய பங்காக தற்போதைய வளர்ச்சி விகிதத்தின்படி மூன்று வருடத்திற்குப் பத்து இலட்சமாக இருக்கின்றது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் எமது குடித்தொகை இரட்டிப்பு அடைந்துள்ளது. எங்களதுபத்தாண்டுத் திட்டத்தின்படி (1959) இன்னும் 37 இலட்சம் (அளவு 15—55 வயதுப்பிரிவினர்) 1981-ம் ஆண்டளவில் வேலை செய்யும் சக்தியுடன் சேர்க்கப்படும். கி. பி. 2000 ஆண்டளவில் இலங்கையின் குடித்தொகை 250 இலட்சம் அளவை அடையும். தற்போதைய மக்களின் வாலிபத் தன்மையினாலேயே இக்குடி வளர்ச்சி இப்படிக்கூடுமென எதிர்பார்க்க முடிகிறது.

## தீவிர முயற்சி வேண்டும்

எங்களது குடித்தொகையின 40 வீதம் மக்கள் 14வயதுக்குக் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர் மேலும் வெகு சீக்கிரத்தில் இவ்விலட்சக்கணக்கான பிள்ளைகள் தங்கள் சொந்தத்தில் குடும்பங்களை அமைத்துக் கொள்வார்கள் கடந்தகாலத்தில் இலங்கை தனது குடித்தொகைத் தேவைக்கேற்ப உற்பத்தி செய்ய முடிந்தது. இதை வருங் காலத்தில் செய்வதற்கு மானிடத் தன்மைக்கு அப்பாற்பட்ட முயற்சி வேண்டும். இலங்கை 1964ம் ஆண்டு ஏற்றுமதியின் மூலம் 17,640 இலட்சம் ரூபா வருமானமாகப் பெற்றும் இறக்குமதிக்கு 19,570 இலட்சம் ரூபா கொடுத்துமிருக்கிறது. இதனால் 19,30 இலட்சம் ரூபா வர்த்தகத்தில நட்டமடைந்தது. 1964ம் ஆண்டில் ரூபா 10000 இலட்சத்திற்குக் கூடியதாக உணவு உற்பத்தியில செலவு செய்யப்பட்டது இங்கு நிலம் கூட்டப்பட்டு உணவு உற்பத்தியைக் கூட்டியிருப்பினும் 40வீதம் அரிசி இறக்குமதி செய்யப்பட வேண்டி ஏற்பட்டது.

எங்களின் ஏற்றுமதி வருமானத்தில் 16,000 இலட்சம் ரூபா பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினால் ஆனது. இத்தோட்டப் பயிர்ச்செய்கையே எமது நாட்டின் பொருளாதாரத்தில முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. எனினும் தேயிலை, றப்பர் தென்னை ஆகிய பொருட்களுக்கு உகந்த நிலங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு விட்டன. மேலும் றப்பர் நிலையில்லாத சந்தையை எதிர்நோக்கியுள்ளது. நிலத்தைப் பிழையான வழியில் பாவிப்பது. தற்போது மூலப் பொருட்களைப் பாவிக்காமல் விடுவது ஆகியவற்றைப்பற்றி முழு அளவீடு நடத்தி ஆராய்ந்தபின், நிலத்தைப் பங்கிடு செய்து விவசாயத்தைப் பலதுறைகளில் செய்வதன் மூலம் கூடிய விளைவைப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## திட்ட ஒழுங்கீனங்கள்

குடித்தொகை அமுக்கத்தின் தாக்கம் எல்லாவிதத்திலும் உணரப்பட்டது. மேலும் அது எமது சராசரி வாழ்க்கைத் தரம் குறைவதிலிருந்து தெட்டத்தெளிவாகின்றது. மூலப்பொருட்களைக் கண்டு பிடிப்பதும், அவற்றைப் பாவிப்பதும்

(12-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ G. C. E. (சா. த.)

பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பரீட்சார்த்திகளுக்கு ஓர் விசேஷ அறிக்கை!

புது முறை பயிற்சிக் கோவைகள் வினா விடைப் போக்கில் ஒரு ஆசிரியக் குழுவினரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்றே உங்களுக்குத் தேவையான பிரதிகளை வாங்கி அதன் பலாபலன்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

- 101 கட்டுரைகள் 7-50
- தமிழ் பாஷை 5-00
- எண் கணிதம் 5-00
- குடியியல் 5-00
- சரித்திரம் 5-00
- இஸ்லாம் 5-00
- புவியியல் 5-00
- பொது அறிவும் பொது விவேகமும் 5-00

சர்வகலாசாலை போதனு கழகம்,
(U. T. I.)
540, மருதானை வீதி, கொழும்பு.
தொலைபேசி: 91699.

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 மார்ச் மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183


## ஓராண்டுச் சாதனைகள்

மக்கள் தங்களின் வாக்குப் பலத்தைக்கொண்டு சர்வாதிகார சக்திகளை முறியடித்து, ஜனநாயகவாதிகளை ஆட்சிபீடத்தில் அமர்த்தி ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் நாட்டிலே அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைகளிலே ஒரு மாற்றம் படிப்படியாக ஏற்பட்டு வருவது கண்கூடு.

அரசியல் சூழ்நிலை பெருமளவு மாறியுள்ளதென்பதில் ஐயமில்லை. கொந்தளிப்பான நிலை இன்று இல்லை. அமைதியும், ஜனநாயக உணர்ச்சியும் மேலோங்குமிடத்தில் கொந்தளிப்புக்கு இடமிருக்காது. அத்தகைய நிலைமைதோன்ற அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருக்கவேண்டும். தேசிய ஆட்சிநாட்டுக்கு ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அளித்துள்ளது. இந்த ஸ்திரத்தன்மையின் மீதே நாடு பொருளாதார, சமுதாயத்துறையில் முன்னேற முடியும். கடந்த ஓராண்டுகாலத்தில் அரசியல் ஸ்திரத்தன்மை மென்மேலும் வலுவடைந்துள்ளது. நாடு தொடர்ந்து முன்னேறுவதற்கு இந்த ஸ்திர நிலை அடுத்த நான்கு ஆண்டுகளிலும் நீடித்திருக்கவேண்டியது அவசியமாகும்.

முன்னுள் அரசாங்கம் நாட்டிலே வளர்த்துவந்த வகுப்புவாத உணர்ச்சியும், இன, மத வேறுபாடுகளும், துவேஷ எண்ணமும், மனக்கசப்பும், பாகுபாடும் கடந்த ஒரு வருடத்தில் பெருமளவு மறைந்துவிட்டன. இன்று மக்களிடையே ஓர் ஐக்கிய உணர்ச்சி காணப்படுகிறது. தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே சுமுகமானஉறவும் நல்லெண்ணமும் காணப்படுகின்றன. ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்துகொண்டு வருகின்றனர். சிறுபான்மையோருக்கும் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கவேண்டியதுதான் என்ற எண்ணம் சிங்களமரிகளிடையே பரவலாகத் தோன்றியுள்ளது. இத்தகைய புதிக் அரசியற் சூழ்நிலையால் ஒரு நிலையான தேசிய ஐக்கியம் உருவாக அத்திவாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. தேசிய அரசாங்கம் கடந்த ஆண்டில் நிறைவேற்றிய மாபெரும் சாதனைதான் இது.

இந்த அரசாங்கம் செய்த முதற்சாதனை சிறுபான்மையோரின் நம்பிக்கையைப் பெற்றதுதான். ஒன்பது ஆண்டுகளாக இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டு, அடிப்படை உரிமைகளையும் இழந்து தவித்துக்கொண்டிருந்த தமிழ் பேசும் மக்கள் இன்று தன்மானத்துடன் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறதென்றுல், அதற்குக் காரணம் தேசிய அரசாங்கமே.

பூதம்போல கிளர்ந்தெழுந்த வகுப்புவாதச் சக்திகளை முறியடித்து, தமிழ்மொழிச் சட்டவிதிகளை இயற்றியது இந்த அரசாங்கம். இதன் மூலம் தேசிய அரசாங்கம் சிறுபான்மையோரின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு உறுதிகொண்டுள்ளதென்பதை எடுத்துக்காட்டிவிட்டது. அரசாங்கத்தின் ஓர் அங்கமான தமிழரசுக்கட்சி விடுத்த கோரிக்கையின்மீதே அரசாங்கம் தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமையை ஓரளவு வழங்கியது. இது தேசிய அரசாங்கத்தின் சாதனைகளில் முக்கியமானதாகும் முன்னுள் அரசாங்கங்களைப்போலன்றி தேசிய அரசாங்கம் சிறுபான்மை மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறவேண்டிய அவசியத்தைத் தெளிவாக உணர்ந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. ஒன்பது ஆண்டுகளாகச் செய்த சீர்குலைவை ஒரே ஆண்டில் சீர்செய்வது சாத்தியமில்லை. ஆயினும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அடிப்படையை அமைத்துள்ளது அரசாங்கம்.

உணவுப்பொருள் பற்றாக்குறை, விலைவாசிகள் ஏற்றம், வேலையின்மை போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இப்பிரச்சினைகள் உள்நாட்டில் உணவு உற்பத்தி, கைத்தொழில் பெருக்கம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டிருப்பதால், விவசாயம், கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் அரசாங்கம் விசேட அக்கறையுடன் செயலாற்றி வருகிறது.

உபஉணவுப் பொருள் உற்பத்தியில் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தேசிய ஆட்சியின்கீழ் வெங்காயம் போன்ற முக்கிய உப உணவுப் பொருளில் நாடுதன்னிறைவு பெறும் அளவுக்கு உணவுப் பொருள் உற்பத்தி அபிவிருத்தி அடைந்துள்ளது. கைத்தொழில் வளர்ச்சிக்காக வெளியார் மூலதனம் கோரப்பட்டுள்ளது. கைத்தறி நெசவுபோன்ற குடிசைத்தொழில் அபிவிருத்தியிலும் சிரத்தை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து உதவிபெறுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் அனைத்தும் அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டன. அதற்காகத் தனித்திணைக்களம் நிறுவி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டிலிருந்து வெளிநாட்டு உதவிகள் இங்குவரத் தொடங்கிவிடும்.

மற்றும் கல்விப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் கடந்த ஆண்டில் பாராட்டத்தக்க முறையில் செயலாற்றியுள்ளன. தேசிய அரசாங்கம் இன்னும் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லையே என்று அங்கலாய்ப்பவர்களுக்கு இரு விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஒன்று, குழப்பமான நிலையைச் சீராக்கி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான (சிறுபான்மையோரின் ஒத்துழைப்பைப் பெறுவது உட்பட) சூழ்நிலையைத் தேசிய அரசாங்கம் உருவாக்கியுள்ளது மற்றொன்று பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தேசிய அரசாங்கம் நேர்மையான முயற்சிகளைச் செய்திருக்கிறது.

அடுத்துவரும் ஆண்டுகளில் தேசிய அரசாங்கம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் என்பதில் ஐயமில்லை. பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் தேசிய அரசாங்கத்துக்கு உண்டு. ஆக்கவேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதே அழிவு வேலைகளைத் தடுக்கவேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. இராணுவச்சதிபோன்ற அழிவுவேலைகளைத் தடுப்பதற்கும் அரசாங்கம் தனது சக்தியையும் நேரத்தையும் செலவிடவேண்டியுள்ளதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அமைச்சுகளில் தற்போது காணப்படும் பெருங்குறை திட்டமிட்டுச் செயலாற்ருதிருப்பதுதான். இக்குறை தேசிய ஆட்சியின் இரண்டாவது ஆண்டில் முற்ருக அகற்றப்படவேண்டும். ஒவ்வொரு அமைச்சுக்கும் தனித்தனியாகத் திட்டக்குழு அமைத்து, காலவரையறையுடன் கூடிய அவசியமான திட்டங்களை வகுத்து, வேகமாகச் செயலாற்ற ஆரம்பிக்கவேண்டும் முதலாவது ஆண்டில் விட்ட குறைகள் அனைத்தும் இரண்டாவது ஆண்டில் நிவர்த்திசெய்யப்படவேண்டும்.

மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தேசிய அரசாங்கம் தொடர்ந்து பெறவேண்டுமானுல், இரண்டாவது ஆண்டில் சில முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும். வட, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தி, தமிழ் பல்கலைக்கழகம் நிறுவுதல், தமிழ் மொழிச் சட்டவிதிகளை அமுல்நடத்துதல் முதலிய பல முக்கிய தேவைகளை தேசிய அரசாங்கம் இரண்டாவது ஆண்டில் நிறைவேற்ற வேண்டும். புதிய ஆண்டில் ஆட்சியாளர் தளரா உறுதியுடனும், திட்டமிட்டும் செயலாற்றவேண்டும். தற்போது அரசாங்க நடவடிக்கைகளில் வேகம் போதாது இந்த மந்தப் போக்கு திறமையின்மையை தோற்றுவிக்கலாம். எனவே ஓர் 'அதிர்ச்சி வைத்தியத்தின்' மூலம் அமைச்சுகளின் செயல் வேகத்தை முடுக்கிவிடவேண்டியது அவசியமாகும். இரண்டாவது ஆண்டில் தேசிய அரசாங்கத்திடமிருந்து மக்கள் பெரும் சாதனைகளை எதிர்பார்க்கின்றனர் என்பதை ஆட்சியாளருக்குச் சுட்டிக்காட்டுகின்றேம்.'

# களையெடுப்பு நடக்கட்டும்

# நிர்வாகத் தகைமை வடமொழிக்கா? தமிழுக்கா?

தேசிய அரசாங்கம் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று சரியாக ஓர் ஆண்டு பூர்த்தியாகி விட்டது. இந்த இடைக்காலத்துள் நாட்டின் நிர்வாக முறையில் பலகுறிப்பிடக் கூடிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்க திணைக்களங்களில் நிலவிய தமிழ் எதிர்ப்புமனப்பான்மை ஓரளவு குறைந்திருக்கிறது. சிங்கள வெறிகொண்டு தனித்தர்பார் நடாத்திய பல பெரிய அதிகாரிகள் எல்லாம் ஓய்வில் அனுப்பப்பட்டுவிட்டார்கள். எஞ்சியிருப்பவர்களும் இந்த ஆண்டு முடிவதற்குள் அனுப்பப்படலாம்.

எழுதுவினைஞர் மட்டத்தில் நிலவிய தமிழ் எதிர்ப்பு மனப்பான்மையை இரவோடு இரவாக மாற்றிவிட முடியாது. என்ருலும் தேசிய மனப்பான்மை கொண்ட உயர் அதிகாரிகளை முக்கிய இடங்களுக்கு நியமிப்பதன் மூலம் கீழ்மட்ட ஊழியர்களின் வெறியை கட்டுப்படுத்திவிடலாம்.

### இ. போ. ச.

தனிச் சிங்களத் தர்பார் முற்றுக நீங்கிவிடவில்லை. இன்னும் சில திணைக்களங்களில் அவர்களின் கை மேலோங்கிய நிலையிலேயே இருக்கிறது. குறிப்பாக இ. போ. சபையில் உள்ள சில பகுதிகள் தனிச் சிங்கள வெறியர்களின் குகையாகவே இருக்கிறது. எந்தளவு தூரம் தமிழ் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அந்தளவிற்கு அங்கு முயற்சிகள் நடக்கவே செய்கின்றன. இது பற்றி போக்குவரத்து அமைச்சர் இற்றை வரை நடவடிக்கை எதுவும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. நாட்டின் ஒவ்வொரு பிரசைக்கும் தொடர்புடைய ஒரு சபையில் இத்தகைய வெறியாட்டங்களுக்கு தொடர்ந்தும் இடம் கொடுப்பது தேசிய ஒற்றுமைக்கு நல்லதல்ல.

கல்வித் திணைக்களத்திலும் உயர்தர அதிகாரிகள் இருவர் பழைய அரசாங்கத்தின் போக்கிலேயே செயற்பட்டு வருகிருர்கள். இவர்களைத் தட்டிக்கேட்க முடியாத நிலையில் அமைச்சர் இருக்கிருர்.

தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி விடயத்தில் இந்த இரு அதிகாரிகளும் செய்து வரும் இடையூறுகள் பல. இந்த நிலை நீடிக்கப்பட்டால் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி தேசிய அரசாங்கத்தின் கீழும் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இப்பிரச்சினை தனியாக கல்வி அமைச்சர் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல; இது அமைச்சரவையின் கவனத்திற்கே உரியதுஎன்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிரேம்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

### மத்திய வங்கி

தேசிய அரசாங்கம் பதவியேற்ற நாளிலிருந்தே இலங்கை மத்திய வங்கியும் பிரச்சினைகளின் பிறப்பிடமாகி விட்டது. தினமும் ஒவ்வொரு பிரச்சினை அங்கு தோன்றிக் கொண்டேயிருக்கிறது. நடந்த ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கிய பெயர்ப்பிரச்சினை பதினைந்து மாதங்களுக்கு மேலாகியும் தீரவில்லை. பெயர்ப்பிரச்சினைகள் அனைத்தும் ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் தமிழ் மொழிபெயர்ப்புப் பகுதியை சிங்களப் பகுதியுடன் ஒன்றுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறதாம்.

இத்தனைக்கும் மத்திய வங்கியில் உள்ள ஒருவரே காரணம் என்று தெரிகிறது. இவர் நிதி அமைச்சரிடம் நல்ல பிள்ளையாக நடந்துகொண்டு தமது காரியத்தைச் சாதித்து வருகிருராம். நாட்டின் முதுகெலும்பான மத்திய வங்கியில் இத்தகைய பச்சோந்திப் போக்குடைய தமிழ் எதிர்பாளர்களுக்கு தொடர்ந்தும்இடம் கொடுப்பதால், நாட்டின் முன்னேற்றம் பல வழிகளிலும் பாதிக்கப்படுமென்பதைக் கூறி வைக்க விரும்புகிரேம்;

### மொழித் திணைக்களம்

திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திருந்தே அரசகரும மொழித் திணைக்களம் தமிழ் எதிர்ப்பாளர்களின் வேட்டைக் காடாகத் திகழ்ந்து வருவது பலரும் அறிந்ததே. தேசிய அரசாங்கம் தோன்றிய பின்னர் இந் நிலைமாறும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனல் நிலைமை மேலும் மோசமாகியிருக்கிறது. 'அரசகரும மொழித் திணைக்களம்' என்றழைக்கப்பட்ட இத்திணைக்களத்தை இப்பொழுது 'பாஷாப் பகுதி' என்று எழுதத் தலைப்பட்டிருக்கிருர்கள் இத்திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள்.

பழைய கலைச்சொற்களையும், அரசகருமச் சொற்களையும் புனராலோசனை செய்வதாகக் கூறிக்கொண்டு சிங்மொழிச் சொற்களுக்குரிய ஓசையையுடைய வடமொழிச் சொற்களைப் புகுத்தும் முயற்சி ஆரம்பமாகியிருக்கிறது. இத்தனைக்கும் மேலாக ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யவதை விடுத்து சிங்களத்திலிருந்து வடமொழியாக்கும் முயற்சி இப்பொழுது அரசகரும மொழித்திணைக்களத்தின் தமிழ் பிரிவில் நடைபெறுகிறது. இவையனைத்தும் தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பாளராக இருக்கும் உதவி ஆணையாளர் திரு. அ. வி. மயில்வாகனம் அவர்களின் சம்மதமின்றியே நடைபெறுகிறதாம்.

அரசாங்கம் புதிய சட்டத்தின் மூலம் தமிழ் மொழிக்கு நிர்வாக அந்தஸ்துக் கொடுத்திருக்கிறது. ஆனல் மொழித் திணைக்களமோ தமிழாக்கம் செய்வதற்குப் பதிலாக வடமொழியாக்கம் செய்துகொண்டிருக்கிறது. அப்படியானல் நிர்வாக அந்தஸ்து தமிழ் மொழிக்கா அல்லது வட மொழிக்கா என்று கேட்க விரும்புகிரேம். இத்த தமிழ்க் கொலை முயற்சி உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டும். இதற்கு ஆவன செய்வது நீதி அமைச்சரின் கடமை.

ஏனைய அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இன்று சிறுபான்மையினர் விடயங்களில் ஓரளவு அக்கறை காட்டிவருகின்றன; சிறுபான்மையினர் பிரச்சினைகளில் நீதியுடன் நடக்க முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. இதர அமைச்சர்கள் பதவியேற்றதும் பல களையெடுப்புக்கள் நடைபெற்றன. ஆனல் போக்குவரத்து அமைச்சு, கல்வி அமைச்சு, நிதி அமைச்சு, நீதி அமைச்சு சம்பந்தப்பட்ட பல திணைக்களங்களில் இக்களையெடுப்பு நடைபெறவில்லை. இங்கும் களையெடுப்பு நடைபெற்றலன்றி நிலைமையில் மாற்றம் ஏற்படுமென்று எதிர்பார்க்க முடியாது. எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மிகுதிக்களையெடுப்பை உடன் செய்வார்கள் என்று நம்புகிறோம். அப்பொழுதுதான் தேசிய ஒற்றுமை பூரண நிலையில் பரிணமிக்கும்.

# மேதினத்திற்கு முன் அவசரநிலை ரத்தாகலாம்

## பிரதமர் நாடு திரும்பியதும் அமைச்சர்கள் முடிவு செய்வர்

**மேதினத்திற்கு முன்னர் அவசரகால நிலை அகற்றப்பட்டு விடலாம் என்று தெரிகிறது. ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்கள் நாடு திரும்பியதும் அமைச்சரவையுடன் இதுபற்றி விரிவாக ஆலோசனை நடத்துவார் என்றும் அதைத் தொடர்ந்து அவசரகால நிலை நீக்கப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.**

மேதினத்திற்கு முன்னர் அவசரகால நிலையை நீக்குவதற்கு அமைச்சரவை விருப்பம் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. அவசரகால நிலைமையை நீக்குவதற்கு பாதுகாப்புப் பகுதியும் சம்மதம்கொடுத்திருக்கிறதாம்.

மேதினக் கூட்டத்தை கடந்த ஆண்டிலும் பார்க்க சிறப்பானமுறையில் நடத்துவதற்கு தேசிய அரசாங்கக் கட்சிகள் ஒழுங்கு செய்து வருகின்றன. எதிர்க் கட்சிகளும் அமைதியான முறையில் மேதினத்தை நடாத்துவதென்று தீர்மானித்திருக்கிறார்களாம்.

அவசரகால நிலைமை அமுலில் இருந்தால் மேதினத்தைச் சிறப்பாக நடாத்த முடியாதென்று அரசாங்கக் கட்சிகளும் அபிப்பிராயப்படுகின்றன. பிரதமர் நாடு திரும்பியதும் இது பற்றி பாதுகாப்புப் பகுதியினருடனும், அமைச்சரவையுடனும் விரிவாக ஆலோசனை நடாத்துவரென்றும், அமைச்சரவை அவசரகாலச் சட்டத்தை நீக்கும் வண்ணம் ஆலோசனைகளும் கூறுவர் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

பிரதமர் நாடு திரும்பியதும் அவசரகால நிலைமையை நீக்குவது பற்றி ஆலோசிக்கப்படுமென்று இராசாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பல்கலைக் கழக பொதுக் கூட்டம்

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கப் பொதுக் கூட்டம் இன்று காலை (28-3-66) கொழும்பு நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் பரிசிலனை செய்யப்படுமென்று தெரிகிறது.

தமிழ் பல்கலைக் கழக இயக்கத்துடன் தொடர்புடைய இளைஞர்கள், இயக்கத்தை வேகமாகச் செயற் படுத்த வேண்டுமென்று ஆட்சிக் குழுவினரை வற்புறுத்தவிருக்கிறார்களாம். நிதி சேர்ப்பது பற்றியும், திருமலையில் விவசாயக் கல்லூரியை உடனடியாகச் செயற்படுத்தச் செய்வது பற்றியும் இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும்.

## புரட்சியும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராவர். இவர் சீனப்பிரதமர் சௌ-என் லாயுடன் ஒரு இரகசிய உடன்படிக்கையில் ஒப்பமிட்டிருப்பதாக இப்பொழுது செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த உடன்படிக்கை கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் சீனாவுக்கு ஒரு இராணுவத் தளம் அமைக்க இந்தோனேசியாவில் இடம் கொடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம். இவ்வுடன் படிக்கையை டாக்டர் சுகர்னோவிடம் காட்டிய பொழுது அவர் அதையிட்டு ஆச்சரியப் படவோ,கலவரப்படவோ இல்லையென்றும் தெரிகிறது. உடன்படிக்கையின் ஆபத்தை உணர்ந்த பின்னரே இராணுவம் அதிகாரத்தை முழுதாகப் பொறுப்பேற்கத் தீர்மானித்திருக்கிறது.

இந்தோனேசிய மக்களின் ஒரே தலைவனாக வாழ்ந்த சுகர்னோ,இந்திய பத்திரிகையாளரால் '...பொம்மையல்ல; உண்மை அதிகாரம் செலுத்துகிறவர்...' என்று வர்ணிக்கப்பட்ட சுகர்னோ, சிற்றின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த சுகர்னோ, சீன அரசியலாரின் கைப் பொம்மையாகத் திகழ்ந்த சுகர்னோ, உலகில் உயர்ந்த இராசதந்திரி என்று புகழப்பட்ட சுகர்னோ, ஆயுட்கால சனாதிபதி சுகர்னோ இன்று பொம்மையாக, சேனாதிபதி ஜெனரல் சுகார்ந்தோவின் கட்டளைப்படி கைஎழுத்திடும் ஒரு இயந்திரமாக இந்தோனேசியாவின் ஒரு பகுதியில் உள்ள அவரின் கோடைகாலமாளிகையில் இருக்கிறார். இந்நிலையும் இழந்து சிறையில் தள்ளப்படும் நிலையும் அவருக்குக் கிடைக்கலாம் என உலக அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள் தனிநபர் சர்வாதிகாரம் நிலையானதல்ல என்பதற்கு சுகர்னோ இலக்கணமாகத் திகழ்கிறார்.

## மாட்டின் அறிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் அப்பட்டமான பொய் என்று துணிந்து கூற விரும்புகிறேன். திரு. மாட்டின் யாழ் மாநகரசபை எல்லை நிர்ணயம் சம்பந்தமான தனது அறிக்கையை 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் திகதி சமர்ப்பித்து விட்டார். 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், அந்நாளைய அரசாங்கம் தோல்வியடையுமென்றோ பொதுத்தேர்தல் ஏற்படுமென்றோ யாரும் கனவு கூடக் காணாத நேரம். அப்படிப்பட்ட நேரத்தில் திரு. மார்ட்டின் சமர்ப்பித்திருந்த அறிக்கையை, திரு. மாட்டின், யாழ்ப்பாணத் தொகுதிக்கு வேட்பாளராக அறிவித்த பின்புதான் சமர்ப்பித்ததாக திரு. பொன்னம்பலம் எப்படித்தான் ஒரு முழுப் பொய்யைத் துணிந்து கூறுகிறார் என்பது எனக்கு விளங்கவில்லை,

'திரு. பொன்னம்பலத்தின் இரண்டாவது காரணம் முன்னைய அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா திரு. மாட்டின் அறிக்கையைப் பரிசிலனை செய்வதில்லை என முடிவு செய்திருந்தார் என்பது. இதுவும் திரு. பொன்னம்பலம் திரித்துள்ள கயிறுகளில் ஒன்றாகும். அன்று அமைச்சராக விளங்கிய திரு. ஏ. பி. ஜெயசூரியா திரு. மாட்டினின் அறிக்கையைப் பரிசிலனை செய்தது மட்டுமல்ல; அதை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கும் படியும் தனது நிரந்தரச் செயலாளருக்கு டிசம்பர் 3-ம் திகதி உத்தரவிட்டிருந்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், பின்னர் கூட்டரசாங்கம் தோல்வியடைந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, காபந்து அரசாங்கம் பொறுப்பேற்ற போது, தேர்தல் முடியும் வரை மாட்டின் அறிக்கையை அமுல் நடத்த எடுக்கும் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படியும், தேர்தல் முடிந்தபின்பு மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாமெனவும் திரு. ஏ. பி. ஜெயசூரியா 1965 சனவரி 6ம் திகதி அன்று தனது நிரந்தரச்செயலாளருக்கு மறு உத்தரவு ஒன்று அனுப்பியிருந்தார். திரு.ஏ. பி. ஜெயசூரியா தேர்தல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கச் சொன்னாரே தவிர அவர் அதை முற்றாக நிராகரிக்கவில்லையென்பதையும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

''எனவே திரு. மாட்டின் சமர்ப்பித்த அறிக்கைக்கு மாறாக திரு.பொன்னம்பலம் எடுத்துக் காட்டிய காரணங்கள் ஆதாரமற்றவை. திரு பொன்னம்பலம் அவலை நினைத்து உரலை இடிப்பது போல எதையோ நினைத்து எதையோ சொல்கிறார் ஆனால் இவ்வளவு தூரம் உண்மைக்கு மாறுபட்ட கருத்துக்களை அவர் வெளியிட்டிருக்கத்தேவையில்லை.

''திரு. மாட்டின் சிபார்சு செய்துள்ளபடி யாழ். மாநகர சபைஎல்லை பிரிக்கப் பட்டுவட்டாரங்கள் அமைக்கப்படும்போது, அதில் சிறுபான்மை தமிழர்களும் மாநகர சபை உறுப்பினர்களாக வாய்ப்புக்கள் ஏற்படும். அந்த வாய்ப்பைச் சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்காமல்தடுக்கவே திரு. பொன்னம்பலம் மாட்டின் அறிக்கையை எதிர்க்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்?

''திரு. மாட்டின் மேல் ஏற்பட்டிருக்கும் பொறாமைதான் திரு. பொன்னம்பலத்தை இவ்வளவு தூரம் பொய் பேச செய்திருக்கிறது என்று கருதினால் அது தவறாகாது''.

## தலைவர் மேல் பாய்ச்சல்

தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கு திரு. பொன்னம்பலம் சமர்ப்பித்திருந்த 3 அம்சங்களையும் சென்ற வாரச் சுதந்திரனில் பார்த்த பொ. கட்சி ஆதரவாளர்கள் திரு. பொன்னம்பலத்தின் மேல் ஆத்திரமடைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர் கொடுத்துள்ள திட்டங்களைக் கண்டு மாற்றுக் கட்சியாளர்கள் தங்களைக் கேலி செய்வதாகவும் பலர் திரு. பொன்னம்பலத்திடம் கூறியுள்ளார்களாம். இதைத்தொடர்ந்து பொ. கட்சியினர் தங்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தேசிய அபிவிருத்திக்கான திட்டங்களை உருவாக்குவது பற்றி ஆராயப்போவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

## பிறந்த நாள் பரிசு

கொழும்பு கொட்டாஞ்சேனை சென் லூசியாஸ் ஆங்கிலப் பாடசாலையின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராக விளங்கும் புல்லுமலை நல்லரத்தினம் தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் உருவத்தை வடித்துள்ளார். திரு. செல்வநாயகத்தின் 68 வது பிறந்த நாள் அன்று அவரது உருவத்தை அவருக்கு அன்பளிப்பு செய்ய இருக்கிறார் திரு. நல்லரத்தினம்.

## கிழக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறார்கள். வட மாகாணப் பா. உறுப்பினர்கள் இருவாரங்களுக்கு முன்னர் திரு. ஜெயவர்த்தனாவுடன் மாநாடு ஒன்று நடாத்தியது வாசகர்கள் அறிந்ததே.

கி. மாகாணப் பா. உறுப்பினர்களைக் கொண்ட மாநாட்டில் திருமலைப் பிரதிநிதி திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்கள் திருமலைத் துறைமுக அபிவிருத்தி பற்றி சில முக்கிய திட்டங்களைச் சமர்ப்பிக்கவிருக்கிறார். திரு. மலைத் துறைமுகத்தில் பிரயாணிகள் வசதியையிட்டு இறங்குதுறைமுகம் ஒன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டுமெனவும், திருமலைப் பிரதேசத்தை தொழிற் பிரதேசமாக மாற்றியமைக்க வேண்டுமெனவும் திருமலைப் பிரதிநிதி திட்டமொன்று சமர்ப்பிப்பார்.

கி. மாகாணத்தில் உள்ள தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று தனியாகக் கூடி பல திட்டங்களையிட்டு விவாதித்துள்ளார்கள் என்று அறியப்படுகிறது.

## இலஞ்சக் குற்றம்

செலாவணித் திணைக்களத்தின் கடமையாற்றும் உயர்தர அதிகாரி ஒருவர் இலஞ்சக் குற்றச் சாட்டொன்றில் அகப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. இவர் ஓய்வு பெறும் வயதையும் தாண்டியவர் எனுன் தெரிகிறது.


ஆண், பெண்
இருபாலாருக்கும்
தன்மைக் குணம், பேய் தோஷம், எலும்புருக்கி நோய், வயிறு நெஞ்சு எரிவு, நச்சுத்தன்மையான சாப்பாடு வயிற்றிலிருத்தல், மெலிவடைதல், உடல் அவலெட்சணம், ஆகியவற்றை மர்ம வழியில் காலக் கிரமத்தில் குணப்படுத்திப் பார்ப்போர் பரவசமடையும் விதத்தில் உடலை மாற்றி விடுவேன்.

விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

வைத்தியாச்சாரி
**பி. எம். திசநாயக்க**
த. பெ. 1281,
கொழும்பு.



**ASTHMA DROPS**
ஆட்ஸ்மாஜ்ஸ் ஆஸ்மாட்ஜப்ஸ்

இளைப்பு (ஆஸ்தமா) நோயை விரைவில் சுகப்படுத்தும் நவீன மருந்து. நானாவிதமான இருமல்கள், க்ஷயரோகம், நெஞ்சுச் சளி, (ப்றோங்கைடீஸ்) முதலியவைகளுக்கும் சிறந்த துணை மருந்தாலும் Injection தற்கால சாந்தியாவதும் செய்ய முடியாதபடி மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்கும், மிகக் கடுமையான நிலைமையிலும், இம் மருந்தை ஒரு முறை கொடுத்தாலும் குணம் கிடைக்கிறது. பொறுக்க முடியாத வருத்தங்களையும், துன்பங்களையும் உண்டாக்கும் இக் கொடிய வியாதியை (ஆஸ்த்மா) நீண்ட காலமாகாமலிருந்தால் விரைவிலும், மிகவும் நாள்பட்டவைகளானாலும் சில வாரங்கள் தொடர்ந்து சாப்பிடுவதாலும், திரும்பி வராதபடி சம்பூரணமாகக் குணப்படுத்துகிறது. ஆஸ்த்மா வியாதிக்கு இது ஒரு சிறந்த மருந்து என்பதைப் பாவிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்.

அளவு:- 15, 20 - சொட்டுகள் தினம் இரு முறை.

விலை: 1அவுன்ஸ் ரூ. 7-ச.50

குறிப்பு: எல்லாவித வியாதிகளுக்கும் வைத்தியம் செய்யப்படும்.

நேரம்: மு. ப. 7-30, 10-30
பி. ப. 3-30 8-30

என் என் குரு மெடிக்கல் ஹால்



**அவசியமுள்ளவர்கள் யார்?**

- உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
- எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
- ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்

# பகுத்தறிவு

சிதம்பரபத்தினி

பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து இராமநாதன விடுதியை நோக்கிச் சென்றால் சற்றுத் தூரத்திற்கப்பால், ஒரு வளைவு—

வாழ்க்கையில் நிதானமாக-விழித்து நடவுங்கள்-இல்லையேல் வழுக்கி விழவேண்டி நேரிடும் என்று போவோரையும் வருவோரையும் எச்சரிப்பது போன்று அமைந்த ஒரு வளைவு-ஒரு நெளிவு-ஒரு பள்ளம். அதன் வலப்புறத்தே நோக்கின் கண்கவர் கவின்பூங்கா. வாழ்க்கையே ஒரு ஒட்டப்பந்தயந்தான் என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டே சலசலக்கும் சிற்றோடை. எழில் மிகு மலர்கள் பூத்துக்குலுங்கும் பூச்செடிகள்; இனிய நறுமணம்; இத்தனை அலங்காரம் செய்தும் எங்களின் இயற்கை அழகிற்கு ஈடாவீர்களா? என்று பெண்களை எள்ளி நகையாடுவது போன்றமைந்த வண்ண மிகு குரோட்டன்கள்;

நடுவில்—

ஒரு சுனை-சிறிய வட்டமான சுனை இத்தகைய சூழ்நிலையிலும் துறவிகள் வாழமுடியும் என்பதை எடுத்துக்கூறுவனபோன்று நிமிர்ந்த-நேர்கொண்ட பார்வையையுடைய நீருடன் ஒட்டியும் ஒட்டாமலிருக்கின்ற தாமரை இலைகள்; கண்விழித்த கமலங்கள்; இவ்வளவும் நிறைந்த அந்தப் பூங்காவிலே—

தம்மை மறந்து, உலகையும் மறந்து, இன்பப் போதையில் மூழ்கி மௌன பரிபாஷையில் சொல்லுக்கடங்காத ஆயிரம் வார்த்தைகளைப்பேசிக்கொண்டிருந்தனர் காதலர் இருவர்.

அவர்கள் யார் என்று அறியவேண்டாமா? பூரண பருவ வளர்ச்சியடைந்த காளையொருவன் மதுவுண்ட வண்டுபோல் இன்பப் போதையில் கிறங்கிக்கொண்டு நிற்பதுபோன்று மதர்த்து வளர்ந்து நின்றது ஒரு மரம். அதுதான் அந்தக் காதலன். ஆதவனின் ஒளிக்கிரணங்கள் பட்டு ஒளிவீசிய அதன் மஞ்சள் வர்ணமலர்கள் நெருங்கிவரும் தன் காதலியை அணைக்கும் ஆவலுடன் புன்னகை செய்துவரவேற்பதுபோன்று பிரகாசித்துக்கொண்டிருந்தன. காதலனை மகிழ்விக்கத் தலையில் பூச்சூடி ஒல்கி ஒசிந்து ஒயிலாகத் தவழ்ந்து வந்து மெல்ல அவனை அம் மரத்தைத் தழுவிக்கொண்டாள் அந்த நங்கை- அந்தக் கொடி-அதுதான் அந்தக் காதலி. பெண்களிடத்து இயல்பாகவேயுள்ள நாணத்தை வெளிப்படுத்துவது போன்று அதனிடத்தே மலர்ந்த மலர்கள் குங்குமச் சிரிப்பாகத் திகழ்ந்தன. திடீரெனக் காற்று வேகமாக வீசியது. பயந்த கொடி மரத்தை இறுகத் தழுவிக்கொண்டது. எங்கிருந்தோ 'கலகல' என்ற சிரிப்பொலி. தங்களைப் பார்த்துத்தான் நகைக்கிறார்களோ என்று எண்ணி நாணமடைந்த கொடி மரத்தைவிட்டு மெல்ல விலகியது தன் காதலியை நீண்டநேரம் அணைத்திருக்க முடியவில்லையே என்று வருந்திய மரம் சிரித்தவர்களை அறிவதற்காகப் பார்வையைச் சுழற்றியது.

அங்கே, கல்லாசனமொன்றில்-காதலர் இருவர் ஒருவரைஒருவர் இறுக அணைத்தபடி காதலின்பத்தில் மெய் மறந்திருந்தனர்.

மரம் மெல்லக் கொடியைத் தொட்டு 'அங்கே பார்' என்று அவர்களைக் காட்டியது. ஒரு கணந்தான், கொடி உடனேயே பார்வையைத் திருப்பிக் கொண்டது.

'ஏன் பார்வையைத் திருப்பிவிட்டாய்?'

'போங்கள், அவர்களைப் பார்க்க எனக்கென்னமோ வெட்கமாயிருக்கிறது.'

'வெட்கமா? ஏன்?'

'இப்படி வெட்டவெளியில்......'

'அதெல்லாம் இங்குசர்வ சாதாரணந்தான். உனக்குத்தான் இந்த மறைவில் கூட என்னைத்தழுவ நாணமாயிருக்கிறது.'

'அப்படி இடமென்றால் நான் உங்கள் கிட்டவே வரமாட்டேன்.'

'பின்னே எங்கே போய் விடுவாயாம்' என்று கூறிக்கொண்டே கொடியை மெல்லப் பற்றியது மரம்.'

'சீ சும்மா விடுங்கள். யாரும் பார்க்கப் போகிறார்கள். அதிருக்கட்டும் உங்களை ஒன்று கேட்கலாமோ?'



'என்ன கேளேன்.'

'இவர்களைப்போல் நாமும் இன்பமாயிருக்க முடியுமா?'

'அடி பைத்தியமே! இவர்கள் மாலையில்மட்டுந்தான் ஒன்றாகச் சேர்ந்திருந்திருந்து மகிழ முடியும். மற்ற நேரம் பிரிந்து விடுவார்கள். நாம் இருவரும் ஒன்றாகவே இருந்து எந்நேரமும் மகிழலாமே. நீ மட்டும் மனசுவைச்சால்......'

'அப்படியா' என்று மகிழ்ந்து கூவிய கொடி திரும்பவும் காற்று வேகமாக வீசவே மரத்தை அன்புடன் அணைத்துக் கொண்டது.

(2)

ஒரு நாள்.

என்றுமில்லாத திருநாளாக அப் பூங்காவிலே விசும்பல் ஒலி கேட்டது. அதிசயித்தகொடி காதலர் இருந்த புறம் நோக்கிற்று. அங்கே, அந்தக் காதலி கண்ணீர்விட்டுக் கொண்டிருந்தாள். காதலன் அவளைத் தேற்றிக்கொண்டிருந்தான். வியப்படைந்த கொடி மரத்தைக் கேட்டது.

'அவள் ஏன் அழுகின்றாள்?'

'அவள் சென்ற வருடந்தான் இங்கு படிக்க வந்தாள். அவனுக்கோ இன்றுடன் படிப்பு முடிந்துவிட்டது அவன் அவளை விட்டுப் பிரியப் போகின்றான். காதலனைப் பிரியப்போகிறேனே என்றுதான் அவள் அழுகிறாள்.'

'ஐயோ அப்படியானால் நீங்களும் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிடுவீர்களா?' சிணுங்கியபடியே கோபமும் துன்பமும் பொங்கிவரக் கொடி எட்டப்போய் நின்றது. கொடியை மெல்ல அணைத்த மரம் 'என் கண்ணே! நான் உன்னை விட்டுப் பிரிவேனா? அன்று நான் சொல்லியதை நீ அதற்குள் மறந்துவிட்டாயா? அவர்கள் இருவரும் எங்கோ இரு இடத்திலிருந்து இங்கு படிக்க வந்தார்கள். வந்தபடியே பிரிந்தும் செல்கிறார்கள். நாம் இருவருமோ என்றைக்கும் ஒரே இடத்தில் இருப்பவர்கள். எம்மை யாரும் பிரிக்கமுடியாது.'

'உண்மையாகவா?' என்று வியந்தகொடி மரத்தைத் தழுவி முத்தமிட்டது.

காதலர் இருவரும் தனிமையில் இனிமை கண்டனர். கொடியும் இப்பொழுது யாரையுங்கண்டு நாணமடைவதல்லை. அந்தக் காதலர்கள் இப்பொழுது இல்லையல்லவா? அன்றும், அப்படித்தான். காற்று எதுவும் வீசாமலேயே கொடி மரத்தை அன்புடன் தழுவிக்கொண்டிருந்தது. அப்பொழுது, 'கலகல' என்றசிரிப்பொலி கேட்டது. ஆச்சரியமடைந்த கொடி மீண்டும் அந்தக் காதலர்கள்தான் வந்தார்களா? அல்லது புதுக்காதலர்கள் தான் யாராவது வந்தார்களா? என்றுஅறிய ஆவல்கொண்டது. அங்கே வரும் பெண்-அவள் முன்புவந்த அதே பெண்தான். அவள் அருகில் வருபவன்? அவன் புதியவனாக அல்லவா இருக்கிறான். ஆம், அவன் புதியவனேதான், சந்தேகமில்லை.

'இவன் புதியவன் தானே?' தனது சந்தேகம் தெளிவதற்காகமரத்தைக் கேட்டது கொடி.

'புதியவன்தான்.'

'யார் அவளின் அண்ணவா?'

'இல்லை. அவளின் காதலன்.'

'அப்படியானல் முன்பு வந்தவன்.'

'அவனும் அவள் காதலன்தான.'

'ஒரு பெண்ணுக்கு இரண்டு காதலனா? ஆச்சரியமாயிருக்கே.'

'அம்மட்டோடு இருந்தாலாகுதல் பரவாயில்லை.'

'என்ன சொல்கிறீர்கள்?'

'மனிதர்களில் ஒரே ஒருவரைக் காதலித்து மணம்புரிந்தவர்கள் மிகவும் அருமையே' 'ஐயையோ! இப்படியெல்லாம்செய்வதற்கு இந்த மனிதர்களுக்கு அறிவே இல்லையா?'

'ஏன் இல்லை. எனக்கும் உனக்கும் இருக்கிற அறிவிலும் பார்க்க கடவுள் அவர்களுக்கு ஒரு அறிவைக் கூடவும் கொடுத்திருக்கிறரே.'

'அப்படியா? அது என்ன அறிவு?'

'அதுதான் பகுத்தறிவு.'

'அப்படியென்றால்......'

'நல்லதையுந் தியதையும் ஆராய்ந்து-பகுத்து அறியக்கூடிய அறிவு.'

'அத்தகைய பகுத்தறிவு இருந்துமா பண்பற்று நடக்கிறார்கள் இந்த மனிதர்கள?'

'இந்தப்பகுத்தறிவு இருந்தபடியால்தான் அவர்கள் கெட்டுப்போனார்கள்.'

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'

'இங்கே பார். எனக்கும் உனக்கும் பகுத்தறிவு இல்லை. அதனால்தான் நாம் வருந்தக்கூடாதென்றெண்ணிக் கடவுள் எங்களை ஒன்றாகவே படைத்துவிட்டார். நாங்களும்இறக்கும்வரை பிரியமாட்டோம். ஆனால் மனிதருக்குப் பகுத்தறிவைப்படைத்துள்ளார். அவர்கள் தம் பகுத்தறிவை உபயோகித்துத் தமக்கு விரும்பியவரைத் தெரிவுசெய்ய வேண்டும். அப்படித் தெரியும் பொழுதுதான் அவர்கள் பகுத்தறிவை உபயோகிக்கத் தெரியாமல் இத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள்.'

'நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே.'

'விளக்கமாய்ச் சொல்கிறேன் கேள். நீ என்னை விட்டு வேறு யாரையும் மணம்புரிவாயா? காதலிப்பாயா?'

'ஊகூம். மாட்டவே மாட்டேன்.'

'உன்னை யாரும்வேறொருவருக்கு வலோற்காரமாக மணம் செய்தால்...'

'நான் உங்களை இறுகத் தழுவிக்கொள்வேன் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முயன்றால் நான் இறந்துவிடுவேன்.'

அடுத்த இதழில்
'பாண்டியூரன்
எழுதும்
"நீ"
என்னும் சிறுகதை
இடம்பெறும்

'பார்த்தாயா? நாங்களாக இறந்தாலன்றி அல்லது வேறு யாராவது நம்மைக் கொன்றால்தான் எங்களைப் பிரிக்கலாம். அத்தகைய உத்தம குணம் படைத்தவர்கள் நாங்கள். ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதர்களோ......'

'வேண்டாம். சொல்லாதீர்கள். அந்தப் பகுத்தறிவை எங்களுக்குத் தராத கடவுளைப் போற்றுவோம்.' என்றுமகிழ்வுடன் கூறியது அந்தக் காதலிக் கொடி.

**பகுத்தறிவு படைத்த மனிதக் காதலர்களுக்கு இருக்க வேண்டியவை—**

**பகுத்தறிவில்லாத ஜடக் காதலர்களுக்கு இருக்க வேண்டியவை—**

**இயல்புகள் இடம் மாறி அமைய, முன்னது பின்னதாகவும் பின்னது முன்னதாகவும் விளங்கும் அதிசயத்தைப் பல்கலைக் கழக மாணவி சிதம்பர பத்தினி சுவையோடு விபரிக்கிறார்.**

# நாவலர் வழி வந்த திரு. நா. க.

## தமிழ் சொற்பொழிவில் தன்னிகரற்று விளங்கினர்

தமிழ் கூறும் நல்லுலகிலே ஈழத் தமிழகத்துக்கு நிலையான இடத்தையும், குறையாத புகழையும் பெருமையையும் தேடித் தந்தவர் நல்லூர் ஆறுமுகநாவலர். அத்தகைய நாவலரின் அடிச் சுவட்டிலே தோன்றி நாவலர் விட்டுச் சென்ற தமிழ்ப் பணியைத் தொடர்ந்து நடத்தியவர் பிரசங்கக் கார்மேகம் எனப் புகழப்படும் மேலைப் புலோலியூர் திரு. நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்.

திரு. நா. கதிரைவேற்பிள்ளையிடம் திரு. வி. க. அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டிருந்தார். மறுநாள் எழுதவேண்டிய மற்றிக்குலேசன் பரீட்சையைப் பற்றியும் சிந்தியாது ''மருட்பா வழக்குக்கு'' சாட்சி சொல்லச் சென்ற திரு. வி. க. வின் செய்கையே அவர், திரு. கதிரைவேற்பிள்ளையிடம் எவ்வளவு தூரம் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகிறது. திரு. நா. க. சிறந்த ஒரு சொல்வல்லாளராகவும், தர்க்க ரீதியாக வாதிடுவதில் முதன்மையானவராகவும் விளங்கினர். முருகன்மீது அளவற்ற பக்தி கொண்டிருந்த திரு. நா. க. முருகன் பேரில் பல நூல்களும் எழுதியுள்ளார். இவரின் நினைவு தினத்தை யொட்டி (26-3-66) இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

நல்லைநகர் நாவலருக்குப் பின் பல்லாற்றுனும் அவர் வழிநின்று சைவத் தொண்டின் மூலம் தமிழ் வளர்த்தார், நாவலரின் வழித்தோன்றலர் ஒருவர். அவர்தான் மேலைப் புலோலி திரு நா. கதிரைவேற்பிள்ளை. நாவலரின் மாணவரின் மாணவர் என்ற பெருமை அவருக்குண்டு. தம் பெருமையையும் நாவலரிடம் தாம் கொண்ட பத்திமையையும் நன்றாக திரு. நா. க. ஓரிடத்தில் உணர்த்திவிட்டார். அவ்விடம் அவர் தாம் இயற்றிய 'சைவபூஷண சந்திரிகைக்'கு எழுதிய முன்னுரையே. இப்பெருமையுடன் தமிழ்த் தென்றல் உலசெலாம்வீச மூலகாரணமாக இருந்த பெருமையும் திரு. நா. க.வுக்கே உரியது. அதாவது தமிழ்த் தென்றல் திரு. வி. க.வை உருவாக்கியவரும் அவரே.

### அறிவுத் திறவுகோல்

'முதல் முதல் எனக்குக் கல்விக் கண் திறந்தவர் யாழ் நா. க.' 'என் பொருட்டன்றே கதிரைவேற்பிள்ளை யாழ்ப்பாணம்விட்டுசென்னை போந்தனர்' என்ற திரு. வி. க.வின் வசனங்கள் திரு. நா. கதிரைவேற்பிள்ளையை திரு. வி. க. எவ்வளவு தூரம்நேசித்தார், மதித்தார் என்பதை விளக்குகின்றன. திரு. நா. க. மேல் அவர் கொண்டுள்ள 'பக்தி' அவரை ஆசிரியரது வழக்குக்காக நீதிமன்றம் வரை ஓடவைத்தது. 'என் சான்றின் அவசியம் எனக்கு விளக்கப்பட்டது. விசாரணை நாள் மற்றிகுலேசன் தேர்தல் பரீட்சையின் முதல்நாள். என்செய்வேன் என்சோதனை பெரிதாயிற்று. சான்றுக்குச் செல்வதா? பரீட்சைக்குப் போவதா? இரண்டும் மாறி மாறி வாட்டின. ஒரு பக்கம் கதிரைவேல் இன்னொரு பக்கம் வாழ்வு முடிவில் கதிரைவேல் அன்பே விஞ்சியது' என்கிறர் திரு. வி. க.

சோதனை அவர் வாழ்வில் சோதனையாயிற்று. ஆனல் அச் சோதனைதான் அவரை உண்மைத் தமிழனாக, தமிழ் ஊழியனாக, தமிழ்த் தென்றலாக மாற்றியது. தேர்தல் பரீட்சையில் அவர் வெற்றி பெற்றிருந்தால் ஒரு வக்கீலாகவோ கணித மேதையாகவோ ஆசிரியராகவோ அவர் காலம் கழிந்திருக்கும். தமிழன்னைக்கு, அவர் சேவை கிடைக்காமற்போயிருக்கும்.

### சற்குருநாதன்

வெஸ்லிக் கல்லூரியில் திரு. வி. க. கல்விபயின்று கொண்டிருந்தபோது, உத்தமத்தமிழறிஞராக, தமிழாசிரியராக திரு. நா. க. அங்கு சென்றார். வடமொழி, தென்மொழி, தர்க்கம், சித்தாந்தம் முதலியவற்றில் நிகரற்ற அறிவு பெற்றவர் திரு. நா. க.அவர்

**பொன்னம்மா கணபதிப்பிள்ளை**

கற்பிக்கும் முறையிலும், அன்புப் பேச்சிலும்மாணவர்கள் தேனுண்ட வண்டுகளாய்த் திளைப்பர். திரு. நா. க. முதல் முதல் வெஸ்லிக் கல்லூரியில் அளித்த காட்சி திரு. வி. க. வின் உள்ளத்தைக்கொண்டது. தமிழ்ச் செல்வம் தம் பள்ளிக்கு வந்ததே என்று ஆனந்தம் எய்தினர். நெருங்கிப் பழகினர். திரு. வி. க. வின் தமிழ்ப் பேராசிரியர் ஓய்வெடுக்கும் சில நாட்களில் திரு. நா. க., அவர்களும் தமிழாசிரியராவார். 'அவர் பாக்களுக்கு விரித்த பொருளும் விளக்கமும் என்னுள் பசுமரத்தாணி போற் படிந்தன. அவைகளை நான் ஒப்புவிப்பேன்' என்று திரு. வி. க. கூறுவதிலிருந்து அவர்கற்பிக்கும்திறன் விளங்குகிறது.

### பிரசங்க கார்மேகம்

திரு. நா. க. சிறந்த பேச்சாளர். அவர் பேச்சைக் கேட்க மக்கள் கூட்டம் திரளும். அவர் சொற்பொழிவிலே சபையோர் மயக்குறுவர். அவர் வீரப்பொழிவைக் கேட்பதில் திரு. வி. க.வுக்கு தணியாத வேட்கை. கதிர்வேல் நன்மொழியைக்கேட்க திரு. வி. க. எங்குஞ்செல்வர்.

இன்று அரசியற் பேச்சுகளுக்கு வரவேற்பு அதிகம். அன்று சமயப் பிரசங்கங்களே இடம் பெற்றன. அவற்றிற்கு அப்போது தேவை அதிகம். திரு. நா. கவின் சொற்பொழிவுகள் பெரும்பாலும் புராண விரிவுரைகளாகவே இருக்கும். அவரின் சொற்பொழிவுகளில் முதன்மை பெற்றன. தணிகைப் புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணங்களுக்கு அவர் செய்த விரிவுரைகளே.

தணிகைப் புராண விரிவுரை இவரின் அசாத்தியத் திறமையை மற்றையோருக்கு எடுத்துக் காட்டின. அன்றும் தணிகைப் புராணத்திற்கு உரை நிகழ்த்துவது சிரமமான காரியமாகக் கருதப்பட்டது. திரு. நா. கவின் பிரசங்க மேடைகள் வெறும் புராண பிரசங்க மேடைகளாயிரா. பிரசங்க மேடைகள் கலைக் கழகங்களாகத் திகழும். கதிரைவேலரின் சொன்மாரி வெள்ளத்தில் இலக்கியம், இலக்கணம், தர்க்கம் சாத்திரம் முதலியன தேங்கும். இவை சபையோருக்குக் கலை விருந்தாகும்.

திரு. நா. கவின் சிவப்பொலிவும், சொற்றிறனும் எவரையும் கவரக்கூடியன. அந்நாளில் பிரசங்கத்திற்குப் பெயர் பெற்றிருந்த சோமசுந்தர நாயக்கரின் பேச்சையே இவர் பேச்சு வென்றுவிடும். கானமேகமே கதிரைவேல் உருக்கொண்டு இடிஇடித்து மின்னி மழை பொழிவது போல் இருக்கும். கண்டனங்கள் முக்கிய இடம் பெறும். அக்கண்டனங்களில் இளமையில் திரு. வி. கவின் மனம் தோய்ந்து தோய்ந்து திளைத்தமையால் அது விரைவில் திரும்பி சமரச சன்மார்க்கத்தை வேட்டலாயிற்று.

புராணப் பிரசங்கங்களுடன் திரு நா. கவின் பெரும்பகுதி நேரம் கண்டனங்களிலும் விவாதங்களிலுமே செலவாயிற்று. மாயாவாதிகளை வென்று 'மாயாவாத தும்ச கோளரி' என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார். போலி வைஷ்ணவர்களுடன் விவாதித்து, 'விஷ்ணுவும் விபூதி உருத்திராக்க தாரணரே' என்னும் கொள்கையை நிலைநாட்டினர். இதன் விளக்கத்தை அன்னர் எழுதிய 'சைவ பூஷண சந்திரிகை' என்னும் நூலில் விரிவாகக் காணலாம். ஆறுமுகநாவலர் விட்டுச் சென்ற 'மருட்பா மறுப்பைத்' தொடர்ந்து நடத்தினர். 'இராமலிங்க சுவாமிகளின் பாடல்கள் அருட்பாக்களல்ல மருட்பாக்களே' என்று நீதிமன்றம் வரை சென்று தம் கொள்கையை நிலைநாட்டினர். (ஆனல் நீதிமன்றத்திற்கு அவர் தாமாக நுழைந்தாரல்லர். புலமைக் காய்ச்சலுள்ள சிலர் இவரை நீதிமன்றத்துக்கு இழுத்தனர்) இவ் வழக்கிற்குத்தான் திரு. வி. க. சான்றுபகர, பரீட்சையையும் கைவிட்டு வந்தார். 'சமயகுரவர் நால்வரினதும் பாக்களே அருட்பாக்கள், திருமுறைகள்' எனத் தாம் எழுதிய பேரகராதியிலும், இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார்.

### விவாத வீரர்

இவரின் விவாதங்களைக் கேட்பதில் பலருக்குப் பேரவா. திரு. வி. க. அதில் முதன்மையானவர். அவர் விவாதங்களுக்குப் பக்கத்துணை நின்று ஊக்குவித்தோரும் பலர். ஒரு நாள் சென்னைக் கந்தசுவாமி கோவிலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. வடிவேல் செட்டியார் என்பவர் எழுந்தார். 'பூத்தாரும் பொய்கை பொழிலிதுவே எனக் கருதி...பேய்த்தேர உலகம்' என்னும் திருவாசகத்தைக் காட்டி 'மாணிக்கவாசகர் உலகைப் பேய்த்தேர (கானல் நீர்) என்றுதானே பாடியிருக்கிறர். ஆகையால் அவரும் மாயாவாதிதானே' என்ற ஒரு கருத்தை வெளியிட்டார். கூட்டம் அமைதியாகவிருந்தது. வாதப் போரைக் காண திரு. வி. க. அவாவினர். 'நீங்கள் கூறிய பொருள் பொருந்தியதன்று' என திரு வி. க. போர்ச்சங்க நாதம் ஊதினர். உடனே 'மாணிக்கவாசகரா மாயாவாதி' என்று திரு. நா. க. ஆவேசங் கொண்டு எழும்பினர். வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. வெற்றியார் பக்கம் சார்ந்திருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. திரு. வி. க. வின் எண்ணம் கைகூடியது.

### முருக பக்தர்

திரு. நா. க. சிறந்த முருக பக்தர். முருகன் அருளே ஒருருக் கொண்டாற் போல் திகழ்பவர். இவரின் முன்னேர்களும் முருக பக்தர்களே. அவர்கள், மேலைப் புலோலியில் முருகனுக்கு ஒரு கோயில் எடுத்தவர்கள். தாங்களே பூசை செய்பவர்கள். இன்றும் அவர்களே அக் கோவிலுக்குப் பூசை செய்து வருகிறர்கள். அக் கோவிலின் பெயர் புதுச் சந்நிதி. புதுச் சந்நிதிக் கந்தன் அருளின் திறமையை அறிந்தவர்கள் புலோலி, மக்கள். அப்புதுச்சந்நிதிக் கந்தனையே தம வழிபடு கடவுளாகவும் ஏற்புடைக் கடவுளாகவும் கொண்டவர் திரு. நா க. கந்தனின் பராக்கிரமங்களைத் தொகுத்து 'சுப்பிரமணிய பராக்கிரமம்' என்னும் நூலைப், புதுச் சந்நிதிக் கந்தன் மேல் இயற்றியுள்ளார்.

இவரின் வழி வந்த திரு. வி. க. வும் சிறந்த முருக பக்தரே. முருகனே அவர் கடவுள், அவர் 'குரு', முருகே அவர். முருகனின் மென்மை அழகு இளமை என்பன அவர் அவாவிப் பேணும் குணங்கள். அவர் எழுதிய 'முருகன் அல்லது அழகு' என்னும் நூல் முருகனைத் தமிழாக, தமிழின் இனிமையாக, தமிழ்க் கடவுளாக எம் முன் நிறுத்தும்.

தமிழ்க் கடவுளாம முருகனை வழிபட்டு தமிழின் இனிமையுணர்ந்து பேணிக்காத்த பெருந்தகைகள் திரு. நா. க. வும், திரு. வி. க. வும். தமிழ் அழிவில்லாதது இனிமையானது. இவர்கள் நினைவும் என்றும் தமிழ் நெஞ்சங்களில் நிலைத்து நின்று இனிமை பயக்கும். இவர்களின் நினைவை நிலை நாட்ட வல்லன இவர்கள் எழுதிய திவ்விய நூல்கள். அவற்றுள்ளும், திரு நா. க. வைப் பற்றி, திரு. வி. க. எழுதிய, 'கதிரை வேற்பிள்ளை நாவலர் சரிதம்' (இதுவே திரு. வி. க. முதல் முதல் எழுதிய கன்னி நூல். திரு. நா. க. இவ்வுலகில் வாழும் போதே இந்நூலை ஆக்கினர்) திரு. நா. க. வை எங்களுக்கு முழுமையாகக் காட்டி நிற்கும்.

### மறைவு

மிக இளம் வயதில் அதாவது தமது 33-ம் வயதில் (1874—1907) திரு. நா. க. இறைமை எய்திவிட்டார். இச் செய்தி திரு. வி. க. விற்குப் பேரிடியாயிற்று. ஏன், திரு. வி. க. வின் எதிரிகளுக்குமே இது தாங்க முடியாத வேதனையைத் தந்தது. நம் பெருமகன், புலோலிப் புலவன், ஆரணி சமஸ்தான வித்துவான் இவ்வுலகை நீத்த போது திரு. வி. க. கதறிக் கதறி அழுதார். அவர் அழுகையும் தேன் சிந்தும் கவிதையாயிற்று. அவை கேட்போர் மனத்தையும் உருக்கக் கூடியதாக, அவர் குருவின் பெருமையை விளக்குவதாக, அவர்மேல் தான் கொண்ட பக்தியை எடுத்துக் காட்டுவதாக அமைந்தன. அவற்றுள் சில.

'மெய்ருட்பாவெங்கே மெய்கண்ட நூலெங்கே
தெய்வீக நீறெங்கே செந்தமிழன்—மெய்யெங்கே
கந்தனடி போற்றும் கதிரைவேல் நாவலநீ
இந்நிலத்திற் தோன்றயே விங்கு'

'உன்போ லிலக்கணமும் உண்மை யிலக்கியமும்
நன்ஞான நூல்களும் ஞாலத்தில்—என்தனக்குச்
சத்தியாய்ப் போதிக்கும் சற்குருவர் வேறில்லை
பித்தனேன் என்செய்வேன் பேசு.'

'சங்கரனைப் போற்றிநிதம் சாக்கியரைக் காய்ந்துமன்னர்
சங்கந்தனை நண்ணிச் சார்மகத்தில்—அங்கயிலைப்
புக்க கதிரவேற் புண்ணியனைப் புன்னெஞ்சே
யிக்கால வாசக னென் றேத்து.'

'முன்னளில் எக்குரவற் கென்னபலம் செய்தேனே
மூடநாயேன்
இந்நாளில் இளமையிலே யுனையிழந்து வாடுகின்றேன்
எந்தாய் எந்தாய்
எந்நாளில் உனைக்காண்பேன் எழில்முகத்தைக்
காட்டாயோ எங்குசென்றய்
மன்னவோ மன்னவோ, மாநிலத்து மாணவரை
மறந்தாய் கொல்லோ'

'எத்துயரமணுகிடினும் குருபக்தி தவருத எழிலோய்
என்றும்
நத்திடும் யாப்பியல் பயிற்றும் பயனதனை ஒருபாவில்
நாட்டிவாழும்
உத்தமநற் குணத்தோய் கலியாண சுந்தரப் பேருற்றய்
என்றுஞ்
சத்தியனே யினியெனக்குக் கடிதங்கள் விடுப்பவரும்
சகத்திலுண்டோ'

'தென்னட்டுச் செந்தமிழே சிவநெறியோர் தவநெறியே
திருவேதேனே
யின்னட்டுப் புலவருக்குத் திருமுறையினுண்மையெல்லாம்
எடுத்துக்காட்டிப்
பொன்னட்டுப் புலவருக்குப் போதிப்பான்
போந்தனையோ புலவரேறே
மன்னட்டு முனக்கினிய குகச்சபையை மறந்தேசல்
வழக்கோசொல்லாய்'

# 'சர்வர் சுந்தரம்'

## இலவச சினிமாப் போட்டி

சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் திரைகளில் இலவசமாகப் படம் பார்ப்பதற்கு ஓர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு எவ்விதமான கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும் சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும் ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

### விதிகள்

1. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும் சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களை திரையிடும்படமாளிகையில் படம்பார்த்த நுழைவுச்சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. கடித உறையில், கீழே தரப்பட்டிருக்கும் சுதந்திரன் முகவரியையே வெட்டி ஒட்டி அனுப்புதல் வேண்டும். அப்படி அனுப்பாத விடைகள் கவனிக்கப்படமாட்டா.
3. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தரப்படாத விடைத் தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனோ சினிமாஸ் நிறுவனத்துடனோ எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

### பரிசுகள்

முற்றிலும் சரியாக அனுப்பப்பட்ட விடைகளிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்குமுதல் பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்:

1 வது பரிசு—

**6 மேல் வகுப்பு டிக்கெட்டுகள்**

2 வது பரிசு—

**4 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்**

3 வது பரிசு—

**3 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள் ஒவ்வொன்றும் 2 மேல் வகுப்பு டிக்கெட்டுகள் விதம் வழங்கப்படும்.**

## முடிவுத் திகதி 31-3-66.

பரிசு பெற்றோர் விபரங்கள் ஏப்ரல்முதல்வாரத்தில் வெளியாகும்.

கடித உறையில் வெட்டி ஒட்டப்படவேண்டிய முகவரி:

போட்டி ஆசிரியர்,
**'சர்வர் சுந்தரம்'**
சினிமாப் போட்டி,
மே. பா. சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

## போட்டிக்கான கேள்விகள்

கீழே ஐந்து கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவற்றுக்குரிய விடைகளை புல்ஸ்காப் தாளில் எழுதி மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய நமக்கு அனுப்பி வைக்கவேண்டியதே.

1. முத்துராமன் 'சர்வர் சுந்தரம்' படத்தில் ஒரு கம்பெனியின் நிர்வாகியாக வருகிறாரல்லவா? அந்தக் கம்பெனியின் பெயர் என்ன?
2. சுந்தரத்தின் தாயாராக வரும் நடிகை யார்?
3. சர்வர் சுந்தரம் படத்தில் நாகேஷ் சினிமா நட்சத்திரமாக மாறிய பின்பு எத்தனை படப்பிடிப்பில் (Shooting) பங்கு பற்றுகிறார்?
4. கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ஷனில் ஒரு நகைச்சுவை நடிகரை கதாநாயகனாக வைத்து வெளிவந்த முதல் தமிழ்ப்படம் எது?
5. சர்வர் சுந்தரம் படத்தில் நட்சத்திர நடிகனான நாகேஷுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்படுகிறதல்லவா? அந்த வரவேற்பில் நாகேஷ் என்ன பேசுகிறார்? (விடை 50 சொல்லுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்).
6. சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் நாகேஷ்-எம். ஜி ஆர். நடித்த மூன்று திரைப்படங்களைக் குறிப்பிடுக?

## அபிவிருத்தி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிக்கொண்டு போகும் குடித்தொகையுடன் சமப்படுத்தாவிடின் மேலும் வாழ்க்கைத்தரம் குறைவது வெளிப்படை.

எனினும், கூடிக்கொண்டு செல்லும் குடித்தொகை மூலப்பொருட்களுக்கு பாரமாக அமையும் என்று கருதினால் மட்டுமே திகில் ஏற்படும், மறுபக்கத்தில் நாம் குடித்தொகையை உற்பத்திக்கு மூலவளமாக இருக்கும் அம்சங்களில் ஒன்று என்று கருதினால் மேற் கூறிய சமன்பாட்டில் ஒழுங்கினைக் கொண்டுவர உதவும். எந்நேரத்திலும் ஒரு நாட்டிற்கு உகந்த குடித்தொகை சமன்பாட்டு விதியில் கூறப்பட்ட மிகுதி அம்சங்களில் தங்கியுள்ளது. மூலவளங்களின் சிறந்த விருத்திக்கு அதிக மக்கள் தேவைப்படக் கூடும். மேலும் இந்நாட்டின் மூலவளங்கள் முறையாகக்கண்டு பிடிக்கும் வரையில் இந்நாட்டின் குடித்தொகை கொள்ளக் கூடிய அளவைப்பற்றி ஒரு விளக்கவுரையும் கூற முடியாது. சில சமயம் முன்னேக்கிக் கூறலாம். ஆனால் அவை எப்பொழுதும் சரியாக வராது.

### புவியியலின் தேவை

நாம் கடந்த ஆண்டுகளில் பல வெற்றியடையக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் வைத்திருந்தோம். ஆனால், வேறு பல காரணங்களினால் அவை அடையவேண்டிய நல்ல பயனைத்தரவில்லை. அத்திட்டங்களாவன:

1. சர்வதேச வங்கி விருத்தித் திட்டம் 1952.
2. பத்தாண்டுத் திட்டம் 1959.
3. மூன்றாண்டு அமுலாக்கத் திட்டம் 1962.
4. ஒரு வருட முன்னேற் திட்டம் 1964—1965

இவையாவற்றுக்கும் முன் ஆறு வருடத் திட்டம் (1947—53)

மேற் கூறப்பட்ட எல்லாத் திட்டங்களும் மூலவளங்களைப் பாவனைக் குட்படுத்துவதில் வெவ்வேறு விகிதத்தில் குறைபாட்டைக் கொண்டு விளங்கின. ஏனெனில் இதற்கு வேண்டிய புள்ளி விபரவிதி கிடையாமையினாலேயாகுமென்க. இச்சிறிய தீவின் மூலவளங்களைப்பற்றி முறையான அளவீடு அல்லது ஆராய்வு நிகழவில்லை. இந்நிலையில் இங்கே ஒரு புவியியலாளரின் சேவை முக்கியமாகிறது.

தமிழாக்கம்!—இ. தவராசா

—

## 'கிளறிக்கல்...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பூரண ஒற்றுமை. நெறியாளரும் நன்கு உழைத்திருக்கிறார். ஆனால்,

நாடக இலக்கியம் தமிழில் நன்றாக வளர்ந்திருக்கிறது. தயாரிப்பாளர்களால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? அல்லது,

இரவல் எடுப்பதில் ஒரு சுயதிருப்தியா? எது எப்படி இருந்தாலும்,

வால்மீகியின் வட மொழி இராமாயணமும் சிறந்தது என்று கூறுகின்றார்கள். ஆனால்,

கம்பராமாயணம் தமிழ் இலக்கியம். உலக இலக்கியமும் கூட.

'கிளறிக்கல் கிளாஸ் III' என்ற சிங்கள 'இப்பி கட்ட' தமிழில் கம்பராமாயணமாக முடியவில்லை.

## இவ்வாரச் செய்தி தெரியுமா?

### மார்ச்சு 17 வியாழக்கிழமை

சனவரி 8ம்திகதி நாட்டில் பாதுகாப்பு நிலை குலைந்ததற்குக் காரணம், இராணுவததலைவர் திரு. ரிச்சேட் உடுகம பொலீஸ், பகுதித்தலைவர் திரு. எஸ். ஏ. திசநாயக்கா, கொழும்பு பொலீஸ் சுப்ரின் டெண்ட், திரு. வாண்டுவஸ்ற், உதவி பொலீஸ் சுப்ரீன்டெண்ட் திரு. ஸ்டீபன்சன், கொள்ளுப்பிட்டி பொலீஸ் பொறுப்பதிகாரி திரு. அமரசேகரா, ஆகிய ஐவரும் தங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்றத் தவறியமையே என்று அன்றைய சம்பவங்களைப் பற்றி விசாரணை நடத்திய குழு சமர்ப்பித்த அறிக்கை குற்றஞ்சாட்டியது.

மட்டக்களப்புக்கு மாநகர அந்தஸ்து வழங்கப்படுவதை திரு. செ. இராசதுரை பா. உ. வரவேற்றார்.

சிங்களம் மட்டும் சட்டம் வந்த பின்பு முதன் முதலாக செனட் சபையில் சென்ற கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ள மசோதாக்கள் தமிழிலும் தயாரிக்கப்பட்டிருந்தன.

### மார்ச்சு 18 வெள்ளிக்கிழமை

நாடெங்கணும் வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகளின் கல்விப் பிரச்சினையைப் பற்றி தமிழரசுத் தூதுக்குழு கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டு, கல்விப் பகுதியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அறிவித்தார்.

இன, மத, துவேஷப் பிரச்சாரத் தடை மசோதாவை அமைச்சரவை நேற்றுப் பரிசீலனை செய்திருக்கிறது.

ரஷ்யாவின் விண்வெளி நாய்கள் இரண்டும் வான வெளியில் 22 தினங்கள் சஞ்சரித்த பின்னர் நேற்று பத்திரமாகவும் சுகமாகவும், பூமியில் வந்திறங்கின என்று சோவியத் செய்திஸ்தாபனம் டாஸ் அறிவித்தது.

### மார்ச்சு 19 சனிக்கிழமை

பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக்கு ஆங்கிலம் ஒரு கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் செஞ்சீனா அங்கம் வகிக்க வேண்டியது மிக அவசியமானது என்றும், உலக சனத் தொகையில் மூன்றிலொரு பங்கினரை சர்வதேச நாடுகளின் குடும்பத்திலிருந்து, ஒதுக்கி வைப்பதால் எவருக்கும் எவ்வித நன்மையும் ஏற்படமாட்டாதென்றும், இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

### மார்ச்சு 20 ஞாயிற்றுக்கிழமை

அடுத்த மாதம் கோலாலம்பூரில் நடைபெற விருக்கும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளை இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதி ஒலிபரப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

ஏப்ரல் 1ம் திகதி முதல் பொது மக்களுக்குத் தனியார் துறைகள் மூலமும் கூப்பனுக்குத் துணி விநியோகம் செய்யப்பட ஏற்பாடாகியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் அரசியலில் பங்கு கொண்ட குற்றத்துக்காக ஏழு ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

### மார்ச்சு 21 திங்கட்கிழமை

சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்குரிய உத்தரவு ஜூன் மாதத்துடன் ரத்து செய்யப்படவிருக்கிறது.

மட்டக்களப்பு—கல்முனை ரயில்பாதை போடப்படுவது அவசியம் என்றும், அப்படிப் போடப்பட்டால், அது மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்குபலவகையிலும் பயன் படும் என்றும் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

காமன்வெல்த் மாநாட்டில் பங்குபற்றவென இலண்டன் சென்றுள்ள தி. மு. க. தலைவரும், சென்னைச் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான இரா. நெடுஞ்செழியன், பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனைச் சந்தித்துப் பேசினார். பி. பி. சி. நிலையத்துக்கு அவர் அளித்த பேட்டியில் 'இந்தியாவிலே தமிழகச் சட்டசபைதான் சனநாயக மரபுகளையும், கண்ணியத்தையும் கடைப்பிடித்து வருகிறதென்று கூறியிருக்கிறார்.

### மார்ச்சு 22 செவ்வாய்க்கிழமை

மலைநாட்டுமக்கள், வடக்கு கிழக்குமாகாணங்களுக்குச் சென்று, கைத்தொழில், மீன்பிடித்தொழில் இவற்றில் ஈடுபட முன்வரவேண்டுமென உள்ளூராட்சி அமைச்சர் கனம். மு. திருச்செல்வம் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் பேசும்போது கூறியிருக்கிறார்.

தமிழ்ப்பகுதியில் உள்ள பஸ்சேவை, இ. போ. ச. விலுள்ள தமிழ்பேசும் ஊழியர்களின் நிலை இவற்றை ஆராய்ந்த தமிழரசுக்கட்சி பா. உ. க்கள், இதுசம்பந்தமாக விரைவில் தேசியமய சேவை அமைச்சரைப்பேட்டிகாண முடிவு செய்துள்ளனர்.

### மார்ச்சு 23 புதன்கிழமை

வடக்கு கிழக்கு மாகாணங்களின் கிராமப்புற மக்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்றை காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா தயாரித்துள்ளார். தமிழரசுப் பிரதிநிதிகள் அமைச்சரைப் பேட்டிகண்டதன் பயனாகவே அமைச்சர் இத்திட்டத்தை உருவாக்கியுள்ளார்

மாவட்டசபை மசோதாவுக்கு சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள் எனத் தாம் நம்புவதாக நல்லூர்த் தொகுதிப் பா. உ. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் கூறினார்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் சேதன உறுப்பு ரசாயனப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்த பரீட்சைக் கமிஷனர் சம்மதம் தெரிவித்திருக்கிறார். முதலில் கொழும்பில் மட்டுமே இப் பரீட்சை நடைபெற விருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதனால் யாழ்ப்பாண மாணவர்களுக்கு சிரமம் ஏற்படுமென்றும் யாழ்ப்பாணத்திலும் பரீட்சையை நடாத்தும்படியும் நல்லூர்த் தொகுதிப் பா. உ. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பரீட்சைக் கமிஷனரை கேட்டிருந்தார்.

# ஈழக் கவிஞர் பாடல் இடம் பெறும் 'பெரிய மனிதன்'

## சித்திரைத் திருநாளன்று திரையிடப்படும்

ஈழத்து இளங்கவிஞரும், தமிழகத்தில் உணர்ச்சிக் கவிஞர் என்று போற்றப்படுபவருமான கவிஞர் காசி ஆனந்தன், சரஸ்வதி புரொடக்சன் சார் தயாரித்துவரும் 'பெரிய மனிதன்' என்ற படத்துக்குப் பாடல் எழுதுகிருர். இப்படம் சித்திரைத் திருநாளன்று தமிழகத்தில் வெளியிடப்படவிருக்கிறது.

முதலாளி தொழிலாளி பிரச்சினையை அடிப்படையாகவைத்து யதார்த்த ரீதியான முறையில் சரஸ்வதி புரொடக்சன்சார் 'பெரிய மனிதன்' என்ற படத்தைத் தயாரித்து வருகிருர்கள். இந்தப் படத்துக்கு மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞர் காசி-ஆனந்தன் பாடல்களை எழுதியிருக்கிருர். கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய 'அடுத்தவன் வாழ தன்னையும் கொடுப்பான் அவனேபெரிய மனிதன்' என்ற பாடலும், 'கண் சிமிட்டும் சின்ன முகம் கையிரண்டிலாடுது' என்ற பாடலும் சமீபத்தில் பதிவு செய்யப்பட்டன. இந்தப் பாடல்களை முறையே இசையமைப்பாளரான ஜெமினி எஸ். வி. வெங்கட்ராமனும், எல். ஆர். ஈஸ்வரியும் பாடினார்கள்.

இப்படத்தில்சுந்தரராஜன், டி. கே இராமச்சந்திரன், தங்கவேலு, ராஜகோபால், புதுமுகம் உதயசந்திரிகா, மனோரமா, ருக்மணி முதலானோர் நடிக்கின்றனர். ஏப்ரல் 14ம் திகதி தமிழகத்தில் திரையிடப்படவிருக்கும் இப்படத்தில், இல்லாதது வில்லன் வில்லி; மிகவும் குறைவானது காதற் கட்டங்கள்.

## நேருஜி கட்டளையை நிறைவேற்றினேன்

திருமணத்திற்கு பின்பு திரையுலகைவிட்டு அடியோடு விலகிவிடப் போவதாக நான் கூறியிருந்தேன். ஆனால் எப்படியோ அதற்குப்பிறகு, 'காட்டு ரோஜாவிலும்' 'சித்தி'யிலும் நடித்து முடித்துவிட்டேன்.

'1961ம் ஆண்டு எங்கள் (பத்மினி-ராகினி) நடனம் டெல்லியில் நடைபெற்றது. நடனத்துக்கு நேருவும் வந்திருந்தார் எங்கள் நடனத்தின் கடைசிநிகழ்ச்சியான கீதோபதேசத்தைப் பார்த்துவிட்டு வெகுவாகப் பாராட்டினர்.

நடனம் முடிந்த பின்பு, எனது திருமணம்பற்றிக் கேள்விப்பட்ட நேரு, 'புதிய உலகம் செல்லும் நீ பழைய உலகத்தை (கலையுலகை) மறந்துவிடாதே' என்று கட்டளையிட்டார். அவர் கட்டளையை நிறைவேற்றிவிட்டதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.'

—பத்மினி.



'கட்டித் தங்கம் வெட்டி யெடுத்து காதல் என்னும் சாறு பிழிந்து தட்டித் தட்டி சிற்பிகள் செய்த உருவமடா' என்று இநதக் கட்டழகியைக் கண்டதும் பாடத்தோன்றுகிறதல்லவா? ''கன்னித்தா''யில் கே. ஆர். விஜயாவின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒரு தோற்றம்.

## இவை தெரியுமா?

★ நடிகையர் திலகம் சாவித்திரி நன்ருக வீணை வாசிக்கக் கூடியவர். இப்பொழுதும் அவர் ஓய்வாக வீட்டில் இருக்கும்போது வீணை வாசிப்பதுண்டு.

★ இயக்குனர் திரு. கே. எஸ். கோபால கிருஷ்ணன் கர்நாடக சங்கீதம் பயின்றவர். அருமையாக ஆலாபனம் செய்து பாடக்கூடியவர்; அத்துடன் அவருக்கு மிருதங்கம் வாசிக்கவும் தெரியும்.

★ புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு சிறுவயதில் இராணுவத்தில் சேர ஆசை இருந்தது. அவர் நடிப்புத் துறைக்கு வராதிருந்தால், இராணுவத் தளபதியாகி இருப்பார்.

★ பிரபல பின்னணிப் பாடகர் பி. பி. ஸ்ரீனிவாஸ் சின்னப் பையனாக இருக்கும்போது பலர் அவரது குரலைக் கேட்டுவிட்டு அவரை ஒரு பெண் என்று எண்ணிக் கொண்டதுண்டு.

★ சாவித்திரிக்கு கார் ஓட்டுவதென்ருல் ஒரே மகிழ்ச்சி. நன்ருகக் கார் ஓட்டுவார். 1963ம் ஆண்டு சோழவரம் என்ற ஊரில் நடைபெற்ற காரோட்டப் பந்தயத்தில், எண்பது மைல் வேகத்தில் காரை யோட்டி அனைவரையும் பிரமிக்க வைத்தவர் அவர்.

★ டி. எம். சௌந்தரராஜன் இதுவரை சினிமாவில் 2500 பாடல்கள் பாடியிருக்கிருர்.

★ இலட்சிய நடிகர் எஸ். எஸ் ராஜேந்திரன் அருமையாகப் பாடக் கூடியவர். 'புதுமைப் பெண்' படத்தில் அவர் சொந்தக் குரலில் பாடியிருக்கிருர்.



கண்ணா! உன் அன்புக் கரங்களைப் பற்றவே நான் தவங் கிடக்கிறேன். என்னை உதறி விடாதே என்று கண்ணனிடம் ராதை கெஞ்சுகிருளோ? 'அன்புக் கரங்கள்' படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கவர்ச்சி நடிகை தேவிகா.


## குருட்டுப் பெண்ணின் பாடல்

அவள் ஒரு குருட்டுப் பெண்தான். ஆனாலும் அவள் ஒரு கட்டழகி, வாலிபர்கள் மயங்கக் கூடிய முறையில் பாட்டுப்பாடி, ஆட்டம் ஆடுவதில் வல்லவள். அப்படிப் பாட்டுப்பாடி ஆட்டம் ஆடி அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டே அவள் தனது வாழ்க்கையை நடத்துபவள்.

ரசிக்கத் தானே இந்த அழகு
கொஞ்சம் ரசனையோடு வந்து
பழகு
பசிக்குத்தானே ந்த உணவு
பழகிப் பார்த்த பின்னே
விலகு

என்று பாடிக் கொண்டே அவள் ஆடியகாட்சியொன்று சமீபத்தில் பத்மினி பிக்சர் சாரின் 'நாடோடி' க்காக விஜயா ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. அழகு மிக்க ஏழைக் குருட்டுப்பெண்ணாக, கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி தோன்றினர்.

எம். ஜி. ஆர்., நாகேஷ், நம்பியார் மற்றும் பலர் நடிக்கும் இவ்வண்ணப் படத்தின் வசனத்தை கே. ஆர். சண்முகம் எழுத, விசுவநாதன் இசையமைக்கிருர். தயாரிப்பாளர் பந்துலுவே டைரக்டும் செய்கிருர்.



தமிழ் நாட்டின் தவநடிகனாக விளங்கும் தங்களுக்கு அப்படி தாங்க முடியாத துயரம் என்ன வந்து விட்டது என்று நடிகர் திலகத்தை நடிகையர் திலகம் கேட்கிருரோ? நவரச நடிப்பு நிறைந்த ''நவராத்திரி''யில் உள்ளத்தை உருக்கும் ஒருகட்டம்

## "கிளறிக்கல் கிளாஸ் III"

தயாரிப்பு: விமலாதேவி சொக்கநாதன்
நெறிப்படுத்தியவர்: எம். எம், மக்கீன்
சிங்கள மூலம்: தயானந்த குணவர்தன
தமிழ் வடிவம்: எம் எம். மக்கீன், எம், சபா மஹ்மூர்
—'பூ' விமர்சகர்

"... டன் பட்டார் நெஞ்சம் போற் கலங்கினன் இலங்கை வேந்தன்". காதலி லதாவின் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலியை அணிவிப்பதற்காக கடன் பட்டார் கிளறிக்கல் கிளாஸ் III ஊழியர் சுரேஷ். அதற்காக அவர் பட்ட கஷ்டமும், கலங்கிய நிலையும பரிதாபத்திற்குரியது.

வைத்தியர் வைத்திலிங்கத்திடம் இருதய நோயென ஒருபொய்மருத்துவ சாட்சிப் பத்திரம் பெற்று அரசாங்கத்திடம் கடனெடுத்து சரீம் பாயின் கடனை அடைக்கிருர் சுரேஷ். ஆனல் அவரை உண்மையிலேயே இருதய நோய் பற்றி விடுகிறது. இதனல் லதாவை இழக்கிருர். ஆனல் வைத்தியர் மகள் மீனவை மனைவியாக்கிக் கொள்கிருர். இது கடந்த வாரம் கொழும்பு சரசுவதி மண்டபத்தில் விமலா உதயனன் குழுவின் சார்பில் விமலாதேவி சொக்கநாதன் தயாரித்தளித்த 'கிளறிக்கல் கிளாஸ் III நாடகத்தின் கதை.

தயானந்த குணவர்தன 'இப்பி கட்ட' என்ற பெயரில் ஏற்கனவே மேடையேற்றிய சிங்கள நாடகத்தின் கதையே 'கிளறிக்கல் கிளாஸ் III என்ற ஆங்கில மேலாடையுடன தமிழ் மேடைக்கு வந்திருக்கிறது.

குடும்பபாரம் எதுவுமற்ற சுரேசாக வரும் எஸ். சிறீகாந்தன் தாம் பட்ட கடனை அடைக்க முடியாது நாடகம் முழுவதும் அழுது வடிக்கிருர். அது பாத்திரத்தின் மனே நிலையைக் காட்டுகிறதா அல்லது கதையின் பலயீனத்தைக் காட்டுகிறதா என்பது கேள்விக்குரியது. இதற்கு சிறீகாந்தன் பொறுப்பல்ல

லதாவாகயோகா சொக்கநாதன் வருகிருர். கவர்ச்சியான பாத்திரம். நடிக்க இடமுமில்லை, நடிக்கவுமில்லை. வைத்தியர் வைத்திலிங்கமாக விமல் சொக்கநாதன் நடிக்கிருர். பாத்திரத்திற்கு ஏற்ற நடிப்பு அவரின் மகள் மீனவாக சியாமளா வருகிருர். குறை சொல்ல இடமில்லாமல் நடித்துவிட்டார். ஆனல் சுரேசிடம் மீனவை அனுப்பிவிட்டு வைத்தியர் மறைந்து நிற்பது எந்த நாட்டு மரபு என்பது தெரியவில்லை.

சரீம் பாயாக வரும் சபா மஹ்மூரும், கிளாக்கர் சுந்தரமாக வரும் ராஜேஸ்வரனும் சில இடங்களில் அதிகப்படியாக நடந்து கொண்டாலும் நடித்திருக்கிருர்கள். சுந்தரத்திற்கு இடையிடையே தான் சுந்தரா —சுரேசா என்பதில் ஏனோ ஒரு சந்தேகம்.

வைத்தியரின் வேலைக்காரனாக வரும் ராஜலிங்கம், அதிகாரியாக வரும் சண்முகநாதன் ஆகியோரும் குறைவின்றி நடித்திருக்கிருர்கள். பியோன் ராமையாவாக வரும் சொ. ரவீந்திரனிடம் திறமையிருக்கிறது. கதை சொல்லி சிரிக்க வைக்க முடியாமற் போனதற்கு அவர் காரணமல்ல.

குறைந்த பாத்திரங்கள்; சிறந்த முறையில் அறிமுகப் படுத்தப்பட்டார்கள். காட்சி மாற்றத்தில் புதிய உத்தி. அது மேலை நாட்டு சேக்ஸ்பியரன் பாணி அல்லது நமது நாட்டு கொட்டகைச் கூத்து முறை. கலைஞர்களிடையே

(12-ம் பக்கம் பார்க்க)

# உடற் பருமனைக் குறைக்க சில வழிகள்

ஏ. மரியநாயகம்,
யாழ்ப்பாணம்.

கே: எனது வயது 23. சின்ன வயது முதல் அடிக்கடி வாயில் புண் ஏற்படுகின்றது. மலம் போவது குறைவு. உறைப்பு சாப்பிடமுடியாது?

ப: வாய்வேக்காட்டின்காரணமாகவும், வேறுபல உயிருட்டிச் சத்துக்கள் குறைவினலும் ஏற்படலாம் மலபந்தம் இல்லாது தவிர்க்க கீரைவகை, பழவகை மரக்கறிவகை நன்கு பாவித்தல் வேண்டும்.

இரண்டு மூன்று கடுக்காய்களை கொட்டைநீக்கி செவ்விள நீரிலிட்டு ஒரு இரவுவரை ஊற வைத்து விடியற்காலையில் குடிக்கவும். இது இலகுமலகாரியாகத் தொழில் செய்வதோடு புண்களையும் சாந்தப்படுத்தும். உறைப்பு-புளி- இவற்றைதவிர்க்கவும். பால், தயிர் மோர் சேர்க்கவும். நல்ல பலனுண்டு.

வி. மணியம்,
புலோலி தெற்கு.

கே: உணவு செமிப்பதில்லை. வயிற்றில் எந்நேரமும் வாயு சேர்ந்து இரைச்சல். மலம்போவது குறைவு. அத்துடன் மூல முளைகளும் உண்டு. உடம்பும் பெலவீனமாகிவிட்டது. வயது இருபத்தாறு. சத்திர சிகிச்சை அவசியமா?

ப: இவற்றுக்கெல்லாம் காரணம் மூலவியாதியே. அதற்கு சத்திர சிகிச்சை மிகக் கெதியில் பலன்தரவல்லது. அதுவே நன்று.

வட்டு-மேற்கு.

கே: நான் எவ்வளவுதான் உண்டாலும் பெலமில்லாதவன் போல் இருக்கின்றேன். எனது வயது பதினறு.

ப: உணவின் அளவு பிரதானமல்ல. உணவிலுள்ளதரம்தான் முக்கியம். எனவே தகுந்த போஷாக்குள்ள உணவுவகைகளை உண்டுவரவும்.

அ. செல்வராசா,
சுன்னகம்.

கே: எனது வயது 21. எனக்கு வயிற்று வலியுண்டு முன் அப்பெண்டிசயிற்இருந்து ஒப்ரேசன் செய்யப்பட்டது. உடம்பு பெலவீனமாக இருக்கின்றது. யாது வழி?


ப: சத்திர சிகிச்சை செய்த பின் சிலருக்கு இப்படியான தொந்தரவுகள் இருப்பதுஇன்று இயற்கையாகிவிட்டது இலகுவில் செமிக்கக் கூடியதும், நல்ல சத்துக்கள் உள்ளதுமான ஆகாரம் மிகவும் வேண்டற்பாலது பால் பழவகைகள்தாராளமாகப் பாவிக்கவும். மிதமான ஆகாரம் மிக மிக இன்றியமையாதது மலபந்தம் இன்றிப் பாதுகாப்பாக இருப்பதோடு, உங்களுக்கு சத்திர சிகிச்சை அளித்த வைத்தியரை கண்டு அறிவுரையோ-சிகிச்சையோ பெறுவது நன்று.

திருமதி. இ. தவலட்சுமி,
வட்டுக்கோட்டை.

கே: சுமார் ஒருமாதகாலமாக எனது காதுகள் ஒரே இரைச்சலாக இருக்கின்றன. நடக்கும்போது காதுக்குள் அதிர்வதுபோன்ற சபதமும், உணவை மென்று விழுங்கும் போதும், நீரைக் குடிக்கும் போதும் படக் படக் என்ற வெடிப்பும் உண்டு. இதனல் கவலைப்படுகிறேன். என்ன வழி செய்யலாம்?

ப: மனிதனை மிகவும் பைத்தியம் பிடித்தவன்போல் ஆக்கும் அபாயம் மிக்கது இது. இதைக் 'கர்ண நாதம்' என அழைப்பர் காதுக்குள் நீர் உட்சென்று விடுவதாலும் ஏற்படலாம். இதனல் நடக்கும்போது டங்டங் என்ற சப்தம் ஏற்படும். எனவே குளித்து தின் பஞ்சினல் திரி செய்து சுத்தம் செய்வது நலம்.

கடுகெண்ணெயில் தும்பைப் பூவைவிட்டுக் காய்ச்சி சிறு துளிகளை காதில் இட்டு வெள்ளைப் பூண்டினல் அல்லது பஞ்சினல் அடைத்துவிடச் சுகமாகும்.




பனங்கற்றுளை இலையை வாட்டிப் பிழிந்த துளியில் சில சொட்டு விடுவதும் நல்ல பலன் கொடுக்கும்.

திருமதி இராசம்மாள்,
கொழும்பு-9

கே: எனது வயது 45 நீண்ட காலமாக சொறி. சொறிந்தால் சொறிந்த இடம் சாம்பல் பூத்தமாதிரி வருகின்றது. தோல் செதிலாக இருக்கின்றது. இவைகள் முளங்காலுக்கு கீழ் ஏற்பட்டிருக்கிறது. சுணைப்பும், தடிப்பும் உண்டு. கோபமும் வருகின்றது. மேல் நாட்டு வைத்தியம் செய்து யாதொரு குணமும் இல்லை?

ப: தோல் வியாதியுடன் சம்பந்தப்பட்டது. கருவாடுவகைகள் மீன்கள், இறைச்சி, நண்டு, இறால் போன்றவற்றை தவிர்க்கவும், அத்துடன் மரக்கறி வகைகளில் மரவள்ளிக்கிழங்கு, கத்தரிக்காய், பாகற்காய் இவற்றை தவிர்க்கவும். தினசரி மலம் ஒழுங்கு முறை பிரதானம்குளிக்கும் போது சோப்பாவிக்க வேண்டாம்.

கேவப்பு, நிலவேம்பு, மலைவேம்பு, சிவன்வேம்பு, புளி இவற்றின் பட்டைகளை சம எடை எடுத்துக் கசாயமாக்கி காலை மாலை குடிக்கவும்.

சுத்தமான வேப்பெண்ணெயை தடவி வருதலும்சிறந்த பயனை அளிக்கும்.

ஆர். இராசவேல்,
தெரணியகலை.

கே: பெண்களின் மார்பு போன்று என் நெஞ்சு முன் தள்ளி இருக்கின்றது. வயது 19. இதைத்தவிர்க்க முடியுமா?

ப: தகுந்த அாவு தேகஅப்பியாசம் வேண்டற்பாலது. கொழுப்புக் கூடிய உணவு வகைகளை குறைக்கவும். காலப்போக்கில் யாவும் குறைந்துவிடும்.

திருமதி இ. இராசேஸ்வரி,
கோண்டாவில்.

கே: நான் திருமணமாகி நான்கு மாதங்களாக மாதவிடாய் வராமல் பின் மாதவிடாய் வந்து கெற்பைக்குத்து வந்துள்ளது. எத்தனையோ வைத்தியர்களிடம் வைத்தியம்செய்தும் நான்கு வருடங்களாக மாறவில்லை. தயவுசெய்து வழிகூறுங்கள்.

ப: அம்மணி! உங்களுக்கு ஏற்கெனவே குழந்தைகள்உண்டா? அல்லது கெற்பம் தரித்த பின் இப்படியான கோளாறு அடிக்கடி ஏற்படுகின்றதா? ஒழுங்காக மாதவிடாய் நடைபெறுகின்றதா? என்பன போன்ற இன்னோரன்ன விஷயங்களைதெரிந்த பின்தான் பதில் கூறமுடியும்.

க. கதிர்,
கந்தரோடை.

கே: எனது முரசு கரைந்து பற்களின் அடியில் ஒருவித கறை படிந்தது போல் இருக்கின்றது. இதை நீக்கப் பெரிதும் முயல்கின்றேன் ஆனல் முடியவில்லை இதற்கு ஆலோசனை கூறுவீர்களா?

ப: உங்கள் வயது குறிப்பிடவில்லை. முப்பது வயதுக்குமேற்பட்டால்இது பயோறியாநோயின அறிகுறியாகும்எதற்கும்தகுந்த பல் வைத்தியரின் ஆலோசனை சிறந்த நம்பிக்கையான பலனை அளிக்கும்.

பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. எண். 1183,
கொழும்பு- 2.

# சடங்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கேள்வி ஞானமாக அறிந்து, இப்பொழுது தொகுத்துக் கூறி விட்டார்.

'ஒருவனுக்குப் பிட்டு விருப்பமாக இருக்கலாம்; மற்றவனுக்கு இடியப்பம் விருப்பமாக இருக்கலாம். இடியப்பப் பிரியன் அதிலுள்ள சிக்குகளைச் சொதியிலே சிக்கெடுத்துத் தின்பதிலுள்ள சுவையைச் சொல்ல வரக்கூடாது. ஏனென்ருல்...'

'ஏன் தம்பி வீணுக்கதையை வளர்ப்பான்? நான் ஒரு நாளும் எங்கடை எழுத்தாளர் எழுதும் எந்தக் கதையையும் வாசிப்பதில்லை...'

'வாசிக்காமல் அவை தரமற்றவை என்று எப்படிச் சொல்ல முடியும்?' என்று கனகலிங்கம் ஏளனந் தொனிக்கக் கேட்டான். தான் 'மொக்கு'த்தனமாக இதிலே மாட்டிக் கொண்டதை அப்பொழுது தான் உணரலானர்.

ஒரு மாதிரியாகச் சமாளித்துக்கொண்டு, 'உதிலே என்ன தொடர்கதை வருகுது? ஆர் எழுதிற?' என்று கேட்டார்.

'கிரியை, என்ற தொடர் கதை. தங்கத்துரை எழுதுகிருர்...'

'யாரோ? உந்தத் தங்கத் துரை ஆர் தெரியுமே! உவங்களும் இப்ப எழுத்தாளங்கள் எண்டு சொல்லிக் கொண்டு திரியிருங்கள். ஒரு நாள்தான் ஆளைக் கண்டிருக்கிறன். அதுகும் றெயிலுக்கை தலை கெட்ட வெறி. சத்தியும் எடுத்துப் போட்டு பேப்பரை விரிச்சுக் கொண்டு ஒரு மூலையிலை சுருண்டு கிடந்தான்......

உவங்கள் முதலிலை தங்களைத் தாங்கள் திருத்த வேணும். குடிச்சு வெறிச்சுத் திரியிற உவங்கள் ஊரைத் திருத்த எழுதுகினமோ?...'

செந்தில்நாதன் நின்று பேசும் நிலைக்களனே வேறு, அவருக்கும் கலை—இலக்கியம் இரசனைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதைத் தெளிந்த கனகலிங்கம், 'எனக்கு இந்தத் தொடர்கதை நல்லாப்பிடித்திருக்கிறது. அவ்வளவு தான். அதை உங்களை வாசிக்கும்படி யாரும் வற்புறுத்தவில்லையே......' என்று சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

'கொழும்பிலை ருமிலை எல்லாப் பேப்பரும் எடுக்கிறனுங்கள். இஞ்சையும் எடுத்தால் வீண் செலவு தானே?... படுக்கைக்குப் போக முந்தி ஏதாவது வாசிச்சுப் பழக்கம். அதுதான் கேட்டனன் ...உமக்குத் தொடர்கதை தானே வேணும்? அது வந்திருக்கிற பக்கங்களை மட்டும் கிழிச்சுக் கொண்டு மிச்சத்தைத் தாருமன்' என்று செந்தில்நாதன் விடாக் கண்டராக நின்ருர்.

தொடர் கதைப் பக்கங்களை இழந்த சுதந்திரன் பத்திரிகையைக் கக்கத்தில் வைத்துக் கட்டிக் காத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

விட்டிலே எல்லோரும் படுத்து விட்டார்கள். அன்னலட்சுமி மட்டும் கை விளக்குடன் காத்துக்கொண்டிருந்தாள். மேசையிலே சாப்பாடெல்லாம் எடுத்து வைக்கப் பட்டிருந்தது.

'சனி விழுந்த விளையாட்டு. குந்தினல் நேரம் போறதும் தெரியாது. எழும்பவும் மனம் வராது. சா, மனுசி பாவம். தொந்தரவு குடுக்காமல் பேசாமல் சாப்பிட்டுட்டுப் படுப்பம்...'

செல்லப்பாக்கிய ஆச்சி அடிக்கடி இருமுவதிலிருந்து இன்னுந் தூங்கவில்லை என்பது தெரிகிறது. இதனல், ஓரிரண்டு வார்த்தைகளில் அன்னலட்சுமி தன்னுடைய உரையாடலை முடித்துக் கொண்டாள். 'பாவம் மனுசன், முழுகினது. பேசாமல் படுக்கட்டும். சரசமாகப் பேசினு ஆசை வரும். பேந்து அடக்கிறதும் கயிட்டம்' என்றும் நினைத்துக்கொண்டாள். வரப்பிரசாதம் கிடைத்ததைப்போல சிறிகாந்தன் சிணுங்கினன்.

'நீங்கள் முழுவதையும் சாப்பிட்டிட்டுக் கழுவி வையுங்கோ. எனக்கு இண்டைக்குப் பசிக்கேல்லை. பொடியன் அழுருன், நான் பால் குடுக்கப் போறன்......' என்று சொல்லித் தன் பாயிலை போய்ப்படுத்து, சிறிகாந்தனை அணைத்துக் கொண்டாள்.

வீட்டிலேநல்ல கறி சமைக்கப்பட்டால், அன்னலட்சுமிக்குப் பசிக்காது விடுவதுமுண்டு. பிள்ளைகளும் செத்தவித் தியலுடன் கூடக்குறையத்தான் சாப்பிட்டன. 'முழுகின மனுசனுக்கு நல்லாப் பசிக்கும்' என்று இருந்தது முழுவதையும் 'வழிச்சுத் துடைச்சு' அவருடைய கோப்பையில் வைதது விட்டாள். இதனல் அன்னலட்சுமிக்குப் பசிக்கவில்லை.

சாப்பிட்ட பிற்பாடு முற்றத்தில் நின்று உலாத்த மனம் வரவில்லை. இன்றும் நல்ல பால் நிலவு. உலகைச் சீதளத்திற் குளிப்பாட்டி மகிழ்கின்றது. 'உதிலை நிண்டு உலாததினல் நரகல் எண்ணங்களெல்லாம் வரும். பேந்து, நான் இண்டைக்கு எண்ணெய் வைச்சு முழுகினனுன்...செல்லையாவின் தகப்பன் சாம்பசிவத்தைப் பற்றிய நினைவும் மின்னலிட்டு மறைந்தது.

'பேசாமல் போய்ப் படுக்கிறதான் புத்தி...'

வெகு நாட்களுக்குப் பின்னர் எண்ணெய் வைத்து முழுகியதும் உடம்புக்குச் சற்றுச் சுகமாகத்தான் இருந்தது. உடம்பு வெகு இலசாகக் காற்றுப் போல இருநதது பூட்டுகள் எல்லாம் இளகி உடலை விட்டுக் கைகால்களெல்லாம் கழற்றப்பட்டது போன்ற ஒரு சுக உணர்ச்சி செந்திலநாதன் கொஞ்சக் காலம் யோகாசனங்கள் சிலவற்றையும் ஒழுங்காகச் செய்திருக்கின்ருர். சவாசனத்திலிருக்கும் பொழுது இத்தகைய ஒரு சுக உணர்வு ஏற்படுவதை அவர் அறிவார். 'அப்பொழுது தன்னை மறந்து நித்திரை வந்துவிடும். திடீரென எழுந்து விடக்கூடாது என்பது ஒரு விதி. மெல்ல மெல்ல உடலுக்கு முறுக்கேற்றிய பின்னரே எழுந்திருக்க வேண்டும்.

கனகலிங்கத்திடமிருந்து பறித்துக் கொண்டு வந்த சுதந்திரன் பத்திரிகையின் பக்கங்களை இலேசாகப் புரட்டிப் பார்த்தார். சிங்களத்தில் தேர்ச்சியடையாது நிறுத்தி வைக்கப்பட்ட எழுதுவினைஞருடைய சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் முன்வந்திருப்பது பற்றிய செய்திதான் அவருடைய கவனத்தை ஈர்ந்தது.

'நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சிங்களம் படிச்சனுங்கள். சிங்களம் படிக்க மாட்டமெண்டு 'லோ'ப் பேசித் திரிஞ்ச உவங்களுக்கும் இங்கிரமெண்டோ?' என்று அவர் மனஞ் சினந்தது.

'நல்ல காலம் பேப்பரைப் பறிச்சந்தது.'

பத்திரிகையை நன்ருக மடித்துத் தலைமாட்டில் வைத்துவிட்டு, விளக்கை அவித்து, கண்களை மூடிக் கொண்டார்.




**ரிஷி லேகியம்**
(கருணைக் கிழங்கு)

மூல முளைகள், இரத்தம், சீழ் பௌந்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் கை கண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

**டின் 1க்கு ரூ. 3-50**

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனம்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு
கொழும்பு-11.







முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே..

அரியாலையூர் த. இந்திரலிங்கம்

ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு வழக்கம் போல் இன்ஸ்பெக்டரின் அறையுள் நுழைந்தான், ஸ்டெலின். வழக்கம் போல் அந்த உயர்தர அதிகாரிவேகமாகப் பல குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தார். பக்கத்தில் இன்ஸ்பெக்டர் 'சஞ்சீவி மலையைத்தலையிற் சுமந்து கொண்டிருந்தார்.' ஸ்டெலினைக்கண்டதும் அந்த உயர்தர அதிகாரி, 'வந்து விட்டாயா தம்பி? இன்றைக்கு என்ன சோக செய்தியோடு வந்திருக்கிறாய்?' என்று கேட்டார். ஸ்டெலினுக்கு அந்தவார்த்தைகளைக் கேட்கக்கூடச் சோகமாக இருந்தது. ஒன்றும் பேசாமல் சட்டைப் பையினுள்ளிருந்த கடிதத்தை எடுத்துக்கொடுத்தான். அவர் அதைக் கவனமாக வாசித்து விட்டு, 'சக்ஸஸ்புல்! தம்பி, அருமையான வழி கிடைத்து விட்டது! நாளைக்கு அந்த மர்ம மனிதர்களைப் பிடித்து விடலாம்!' என்றார்.

'எப்படி முடியும்? எல்லாக் கயவர்களும் அந்தப் பறக்கும் தட்டினுள் வருவார்கள் என்பது என்ன நிச்சயம்?' என்று கேட்டான்ஸ்டெலின்.

'நீ சொல்வதும் சரி தான் தம்பி! ஆனாற் பறக்கும் தட்டைப் பிடித்து விட்டால் அதனுள்ளிருக்கும் ஒருவனைக் கொண்டே விஷயத்தை அறிந்து எல்லோரையும் வளைத்துப் பிடித்து விடலாம்!' என்றார் அதிகாரி.

'பறக்கும்தட்டை எப்படிக் கைப்பற்றிக் கொள்ள முடியும்? விமானத்தில் துரத்திப் பிடிக்கிறீர்களா? பறக்கும் தட்டு, பருந்து, வானம்பாடி போன்ற பறவையில்லையே! அதை எங்ஙனம் விமானம் மூலம் பிடிக்க முடியும்?' என்று கேள்விக் கணைகளை அடுக்கினான், ஸ்டெலின்.

அதைக் கேட்டு வியந்த அதிகாரி, 'என்ன தம்பி உன்னுடைய கேள்விக் கணைகளினால் என்னையே திகைக்கச் செய்து விடுவாய் போலிருக்கிறதே! பிரமாதமான கேள்விகளெல்லாம் கேட்கிறாயே!' என்றவர், 'பறக்கும் தட்டை விமானம் மூலம் துரத்திப் பிடிப்பது முடியாத காரியம்! அந்த முயற்சியிலே அமெரிக்காவில் ஜெட் விமானங்கள் கூடத் தோற்றுப் போய் விட்டன... அதைவிடப் பறக்கும் தட்டுடன் மோதினால் விமானத்துக்குத்தான் சேதமேற்படுமே தவிரப் பறக்கும் தட்டு எந்த விதத்திலும் பாதிக்கப் படமாட்டாது...' என்று சொல்லிக் கொண்டே போனார்.

இன்று இன்ஸ்பெக்டர் குறுசகிட்டுத் தனது 'அற்புதமான' வியாக்கியானத்தை ஆரம்பிக்கவில்லை. ஸ்டெலினுக்கு முழுவதையும் கேட்கப் பொறுமையில்லை! எனவே அவன் தான் குறுக்கிட்டான்! 'பின்பு எப்படித்தான் பறக்கும் தட்டைப் பிடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கூறுங்களேன்!'

'அவசரப்படாதே தம்பி! அவசரத்தினாலே தான் பெரிய தவறுகளெல்லாம் ஏற்படுகின்றன நான் விளக்கமாகச் சொல்கிறேன்; ஆறுதலாகக் கேள்! என்று பீடிகை போட்டவர் தொடர்ந்து, 'நமது டாங்கிகளும் தீயணைக்கும் கருவிகளும் தான் அந்த வேலையைச்செய்யப்போகின்றன! டாங்கி (பீரங்கியந்திரம்) யின் தாக்குதலின் முன் பறக்கும் தட்டு என்ன செய்ய முடியும்! பறக்கும் தட்டின் இயந்திரங்கள் பழுதாகியவுடன் பறக்கும் தட்டு நிலத்தில் விழும்!...' என்று கூறுகையில்ஸ்டெலின் குறுக்கிட்டு 'பறக்கும் தட்டு நிலத்திள் விழுந்த அதிர்ச்சியினால் தீப்பற்றி எரிந்தால் அதனுள்ளிருக்கும் மனிதனும் பஸ்பமாகி விடுவான்! பின்பு என்ன பயன்?' என்று கேட்டவன்,திடீரென நினைவு வந்தவன் போல, அப்படியானல் லோமைனின் கதி என்ன?' என்று பதறினான்.

'பதறாதே தம்பி! லோமைன் இறக்கப்பட்ட பின்னர்தான் இவையெல்லாம் நிகழும்! விழுகின்ற பறக்கும் தட்டுத் தீப்பற்றிக் கொள்ளுமானால் அதை அணைக்கத் தீயணைக்கும் கருவிகள் ஆயத்தமாக இருக்கும்! இது தான் திட்டம். இத்திட்டம் இடையூறின்றிச் செயலாகுமானால் அடுத்த வாரம் நாம் எவ்வித வழக்குமின்றி ஈயடித்துக் கொண்டிருப்போம்! அந்த மர்ம மனிதர்கள் மூலமே உனது தந்தையின் சித்தப்பிரமையையும் மாற்றி விடலாம்!' என்று சகலவற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் மிகத் தெளிவாக விளக்கினார், அவ்வுயர்தர அதிகாரி. இதுவரைச் சகலவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இப்பொழுது மிக மகிழ்ச்சியுடன் கேட்டார்!- 'இந்த வழக்கு திருப்திகரமாக விரைவில் முடிந்து விட்டால் எனக்குப் பதவி உயர்வு கிடைக்கும்! இல்லையா?' என்று. அதிகாரியின் முகத்திலே புன்முறுவல் தவழ்ந்துவிளையாடியது. 'நீர் இவ்வளவு நேரமும அமைதியாக இருந்ததற்காக அதுஉமக்குக்கிடைக்க வேண்டுமே'

இன்ஸ்பெக்டர் முகமெல்லாம் மகிழ்ச்சி! ஸ்டெலின் மீது கொண்டிருந்த ஆத்திரமெல்லாம் நிமிடத்தில் மறைந்து போய் விட்டன. வாசலில் நின்றகான்ஸ்டபிள் ஒருவனை அழைத்து மூன்று தம்ளர் ஆப்பிள் ஜூஸ் வாங்கி வருமாறு பணித்தார். அந்த அதிகாரி குறும்புத்தனத்துடன் இன்ஸ்பெக்டரை நோக்கி, 'என்ன, உபசாரம் எல்லாம் பிரமாதமாயிருக்கிறதே! மனசு ரொம்பக் குளிர்ந்து போய் விட்டதோ?' என்று கேலியாகக் கேட்டார்.

இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்தால், பார்ப்பவர்க்கே அசடு வழியக்கூடியதாக இருக்கிறது. புதுமணப் பெண் போல் நாணிக்கோணினார், இன்ஸ்பெக்டர். ஸ்டெலினுக்கு, இன்ஸ்பெக்டரின் செய்கைகளெலலாம் கோமாளித்தனமாகத் தோன்றின. ஒருவாறு சிரிப்பை அடக்கிய வண்ணம் தம்ளரைக் காலி செய்தான்.

அன்றிரவு டோக்கியோ நகரம் உறங்கிக் கிடக்கும் நள்ளிரவு நேரம். சில ஓட்டல்கள் மட்டும் இன்னும் இயங்கின. அந்தச் சமயத்தில் ஒரு டாங்கியும்,தீயணைக்கும் இயந்திரமும் "கட கட" வென முழங்கியவாறு மோல்டனின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. மறு நாட் பகல் அவற்றைக் கொண்டு சென்றால் நகரவாசிகள், 'ஏன், எங்கே' என்று பரபரப்படைவார்களாதலால்முதல் நாளிரவே சகலஏற்பாடுகளையும்செய்து விட்டார், அந்தக் கடமையுள்ளங் கொண்ட அதிகாரி.

(வளரும்)

# கூலிக்கு வேலை செய்த காந்தி அடிகள்

—வி. கே. மூர்த்தி—

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த அதிசய மனிதர் மகாத்மா காந்தி அடிகள். சத்தியாக்கிரகம் என்ற அகிம்சாயுத்தத்தைக் கண்டு பிடித்தவரும், இந்திய மக்களது சுதந்திரத்திற்காக தன் உயிரையே அர்ப்பணித்த வீர புருஷர், அகிம்சா மூர்த்தி, சத்தியத்தின் திருவுருவமென்று போற்றப்பட்ட உத்தமர் காந்தி அடிகளின் வாழ்வில் நடந்த ஒரு சிறு சம்பவம்.

அன்றொரு நாள் புகையிரத நிலையத்திலே காந்தி அடிகள் தங்கியிருந்தார். அப்போது ஒரு ஆங்கிலச் சிப்பாய் புகையிரதப் பிரயாணத்துக்கு அதே புகையிரத நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் கைகளில் பெட்டி படுக்கைகள் நிறைய பொருட்களுடன் வந்தான். அப்போது அங்கு காந்தி அடிகள் நிற்பது அவனுக்குத் தெரிந்தது. காந்தியடிகளை நோக்கி 'ஏ! இந்தாப்பா கூலி மனிதா, இங்கே வா' என்று அழைத்தான். உடனே அவ்விடம் காந்தியடிகள் சென்றார். சிப்பாய்"இந்தப் பெட்டி பொருள்களை ரெயிலில் ஏற்றும்" என்றான். அதன் பிரகாரம் மருக்காமல் செய்தார். பெட்டி பொருட்களை ஏற்றி முடித்ததும், அதற்கேற்ப கூலியை அச்சிப்பாய் கொடுத்தான். அதை காந்தி அடிகள் மறுக்காமல் பெற்றுக்கொண்டார். இச் சம்பவம் காந்தி அடிகள் அவர்களது இளமைப் பருவத்தில் நடந்ததாகும்.

# தந்தை செல்வா! வாழ்க!

பட்டுநகர் முத்தழகு—

ஈழம்தந்த காந்தியே! வாழ்க! எங்கள்
இல்லங்களில் இறைவனாக வாழ்க!
கிழக்குவானின் விரிகதிரே! வாழ்க!—கொள்கைக்
கோபுரமே! ஆலயமே! வாழ்க!

இயேசுவழி நடந்தவரே! வாழ்க!—நபிகள்
இதயத்திலே நிறைந்தவரே! வாழ்க!
தாயகத்தின் விடுதலையே! வாழ்க!—எங்கள்
தமிழ்மொழியின் சரித்திரமே! வாழ்க!

போதகரே! புத்தர்வழி வாழ்க!—கீதையின்
போதனையில் பிறந்தவரே! வாழ்க!
நீதியிலே நிறைந்தவரே! வாழ்க!—செல்வ
நாயகமே! தாயகமே! வாழ்க!

சாதிகளைச் சிதைத்தவரே! வாழ்க!—இலங்கைச்
சரித்திரமே! சித்திரமே! வாழ்க!
நாதியற்றோர் நீதிகாக்க வாழ்க!—உன்னடி
நாடிவந்தோர் நேர்மைக்காக வாழ்க!

நிறைமொழியில் தவழ்ந்தவரே! வாழ்க!—முழு
நிலவொளியே! நித்திலமே! வாழ்க!
இறைவனடி போற்றுகின்றேன் வாழ்க!—இல்லத்
தலைவனேநீ தந்தையாக வாழ்க!

● மார்ச் 31-ம் திகதி தமிழரசுத் தந்தையின் 68-வது பிறந்த தினமாகும்.

# தேன் துளிகள்

வாழ்வு யோசிப்பவனுக்கு இன்ப நாடகம். உணர்பவனுக்கு துன்ப நாடகம்.

—வால்ப் போல்வ்.

கண் குருடு என்பதற்கு இரங்குவது போலவே அறிவு சூனியம் என்பதற்கும்இரங்க வேண்டும்.

—செஸ்டர் பீல்ட்.

ஒவ்வொருவனும் பிழை செய்யக் கூடியவனே. ஆனால் மூடனைத்தவிர வேறு யாரும் பிழையை விடாமல் பிடித்துக்கொள்ளார்.

—எலிஸரோ.

இன்று உன்னால் செய்யக் கூடிய மட்டும் நன்றாய்ச் செய். நாளை அதனினும் நன்றாய்ச் செய்யும் ஆற்றல் நீ பெறக்கூடும்.

—நியூட்டன்.

முதலில் தூசியைக்கிளப்பி விடுகிறோம் பின்னால்பார்க்க முடியவில்லையென்று முறையிடுகின்றோம்.

—பார்க்லி.

நூறு விதமாய்க் கூறினாலும் மதம் ஒன்று தான் உண்டு.

—பெர்னாட்ஷா.

மனிதனுடைய இருதயம் ஊமையாய் இருந்தால் அன்றி கடவுள் ஒரு நாளும் செவிடாய் இருப்பதில்லை.

—குவார்ல்ஸ்.

நல்ல சேவை செய்வதற்குரிய ஆற்றலைக்கெட்ட மனிதனிடம் ஒரு நாளும் காண முடியாது.

—பேர்க்.

தொகுத்தவர்:—
சி. சண்முகலிங்கம்,
திருகோணமலை

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும் உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யின் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 3

பெயர் ______________________

பாடசாலை ______________________

முகவரி ______________________

______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ____________

கையொப்பம் ____________

## சிலோன் எண்டெர்டெயின்மெண்ட்ஸ் தாபனத்தார்

**சினிமா ரசிகர்களுக்கு 1966ல் அளிக்கவிருக்கும் சில சிறந்த படங்கள்!**

● மக்கள் திலகம் **எம். ஜி. ஆர்.** — கன்னடத்துப் பைங்கிளி **சரோஜாதேவி** ●

'நாடோடி மன்னனு'க்குப் பிறகு எம். ஜி. ஆரின் சொந்தத் தயாரிப்பு! முழு நீள ஈஸ்ட்மன் கலரில்!

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

# அடிமைப் பெண்

---

**'எங்க வீட்டுப் பிள்ளை' அளித்த விஜயா கொம்பைன்ஸாரின்**

* ஜெய்சங்கர் * ஏ. வி. எம். ராஜன் * வசந்தா * நிர்மலா

# எங்க வீட்டுப் பெண்

டைரக்ஷன்: சாணக்கியா

---

எம். ஜி. ஆர்—கே. ஆர். விஜயா நடித்த

## தாழம்பூ

வெற்றிக்கு மேல் வெற்றி ஈட்டி வரும் சித்திரம்!
ஜெமினி கணேசன்—பத்மினி—எம். ஆர். ராதா

## சித்தி

கதை: வசனம்: டைரக்ஷன்: கே. எஸ். கோபால கிருஷ்ணன்

---

**ஏ.எல்.எஸ்**

எஸ். எஸ். ராஜேந்திரன் விஜயகுமாரி நடித்த

## ஆனந்தி

சிவாஜி கணேசன் ஜெயலலிதா நடித்த

## வசந்தி

சிவாஜி—கே. ஆர். விஜயா—ஜெயலலிதா
சுந்தராம்பாள்—அசோகன்

## கந்தன் கருணை

(முழு நீள ஈஸ்ட்மன் கலர்)
கதை-வசனம்-டைரக்ஷன்: ஏ. பி. நாகராஜன்

---

பிரபல இந்தி நடிகர்கள் தோன்றும் பிரமிக்கத்தக்க இந்திச் சித்திரம்!

**அசோக்குமார்—சுனில்தத்—நந்தா—தனுஜா** தோன்றும்

## ஆஜ் ஓர் கால்

---



**ஏப்ரல் 1ம் திகதி முதல்**

**எல்பின்ஸ்டன்** (மருதானை)
**ரொக்ஸி** (வெள்ளவத்தை)
**வின்ட்சர்** (யாழ்ப்பாணம்)
**வேல்ஸ்** (கண்டி)
**நெல்சன்** (திருமலை)
**இம்பீரியல்** (மட்டக்களப்பு)
**தாஜ்மகால்** (மாத்தளை)
**நீகல்** (நீர்கொழும்பு)

எம். ஜி. ஆர்—சரோஜாதேவி
நாகேஷ்-மனோரமா-நம்பியார்
நடிக்கும்

# கலங்கரை விளக்கம்



**3வது வாரம்!**

**செல்லமகால்** மற்றும் திரைகளில்

**சிவாஜி கணேசன், தேவிகா, நாகேஷ், பாலாஜி, மணிமாலா,** நடித்த

# அன்புக் கரங்கள்

**கெபிட்டலில் 13வது வாரம்!**

எம். ஜி. ராமச்சந்திரன்—ஜெயலலிதா—நம்பியார்
நாகேஷ்—மனோகர் மற்றும் பலர் நடித்த

# ஆயிரத்தில் ஒருவன்

(ஈஸ்ட்மன் கலர்)

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



சபையர் (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) — மொடேன் (பதுளை) — விஜிதா (அட்டன்)
ஆகிய திரைகளில்

**முத்துராமன், மனோகர், விரப்பன், சந்திரகாந்தா, ராஜஸ்ரீ** நடிக்கும்

மொடேன் தியேட்டர்ஸ்



# அம்மா எங்கே?

**6வது வெற்றி வாரம்!**

**கிங்ஸ்லி** (கொழும்பு) மற்றும் திரைகளில்

நாகேஷ், முத்துராமன், கே. ஆர். விஜயா, மனோரமா, காஞ்சனா, எஸ். ராமராவ் நடிக்கும்

**ஏ. வி. எம். அளிக்கும்**

# சர்வர் சுந்தரம்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1966-ம் வருடம் மார்ச் மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.